# அர்ச்சுனன் தவசு புராண நாடகம்

பதிப்பு

தே. சிவகணேஷ்



தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

# அர்ச்சுனன் தவசு புராண நாடகம்

சுவடியியலும் பதிப்பியலும்
பட்டயப் பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

பதிப்பு
**தே. சிவகணேஷ்.**

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை – 600 005
மே – 2005

'சுவடியியலும் பதிப்பியலும்' –

பட்டயப் பேற்றிற்காகச்

சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு

அளிக்கப்பெறும் பதிப்பேட்டு எண்: 5010

# நெறியாளர் சான்றிதழ்

**பேராசிரியர் வீ. அரசு,**
துறைத்தலைவர்,
தமிழ் இலக்கியத் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை – 600 005.

'அர்ச்சுனன் தவசு புராண நாடகம்' எனும் தலைப்பிலான ஓலைச்சுவடியைச் 'சுவடியியலும் பதிப்பியலும்' எனும் பட்டயம் பெறுவதற்காக **தே. சிவகணேஷ்** அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்புச் செய்தார் என்றும் இப்பதிப்பு இவர்தம் தனி முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

நெறியாளர்,

**(பேராசிரியர் வீ. அரசு)**

நாள் : 13–07–2005.
இடம் : சென்னை–5.

# பதிப்பாளர் உறுதிமொழி

**தே. சிவகணேஷ்,**
தமிழ் இலக்கியத் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை – 600 005.

**'சுவடியிலும் பதிப்பியலும்'** என்னும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெறும் **'அர்ச்சுனன் தவசு புராண நாடகம்'** எனும் தலைப்பிலான இப்பதிப்பேடு என் தனி முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கிறேன்.

பதிப்பாளர்

**(தே. சிவகணேஷ்)**

நாள் : 11–07–2005.
இடம் : சென்னை–5.

**இந்நூல்...**

இப்பதிப்புப் பிரதியை எழுதியவரும், சிறந்த நாடக நடிகருமான மறைந்த என் தந்தை திரு. க. தேவராஜி அவர்களுக்கு...

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பதிப்புரை | i - vii |
| நாடகத் தொடக்கம் | 1 |
| மோகினி வனம் | 24 |
| ராமராச்சுதன் வனம் | 30 |
| பிராமணர் வனம் | 39 |
| நாராயணர் வனம் | 42 |
| வேங்கைக் கன்னி வனம் | 46 |
| மலையடி வேடுவன் வனம் | 47 |
| ஏலக்கன்னி வனம் | 48 |
| கெண்ட பேரண்டன் வனம் | 65 |
| இந்திர நீல வேடுவன் வனம் | 89 |

# பதிப்புரை

உலகிலுள்ள மிகப் பழமையான மொழிகளுள் தமிழ் மொழியும் ஒன்று என்ற கருத்துக்கு மாற்றுக் கருத்து யாருக்குமே இருக்க முடியாது. அத்தகைய தமிழ்மொழியில் இன்று கிடைக்கும் தொன்மையான நூல்களில் முதலாவதாக அறிஞர்களால் கருதப்படும் தொல்காப்பியத்திற்கு எண்ணற்ற ஆண்டுகளுக்கு முன்பே நாடகம் தமிழரிடையே விளங்கியது என்பதை,

> "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
> பாடல் சான்ற புலனெறி வழக்கம்" (தொல். 999)

எனும் நூற்பாவிலிருந்து அறியலாம். இங்கு நாடகம் என்ற சொல் புனைந்துரை வழக்குகளைக் குறிக்கின்றது. முத்தமிழை இயல், இசை, கூத்து அல்லது நாடகம் என்று கூறுவர். நாடகத்தில் முத்தமிழும் உள்ளன. இயல் தமிழால் ஆன வசனங்கள், இசைத் தமிழால் ஆன பாடல்கள், கூத்துத் தமிழால் ஆன நடிப்புவகை நிலைகள் என மூன்றையும் உள்ளடக்கியதே நாடகம். இவ்வாறு முத்தமிழையும் தெளிவாகப் பிரித்து அதற்கான இலக்கணங்களையும் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே வகுத்துள்ளனர்.

இயல் தமிழுக்கு இலக்கணமாகத் தொல்காப்பியம் உள்ளது போன்று இசைத்தமிழுக்கும் கூத்து அல்லது நாடகத் தமிழுக்கும் சிறந்த நூல்கள் இருந்திருக்கின்றன. சயந்தம், செயிற்றியம், முறுவல், கூத்தநூல், விளக்கத்தார் கூத்து, மதிவாணனார் நாடகத்தமிழ் நூல் போன்றவை உரையாசிரியர்களால் உரைக்கப் பெறுகின்றன. அவையெல்லாம் நமக்கு இன்று கிடைக்கவில்லை.

இதோடு கூட நாடகம் என்ற சொல்லும் கூத்து என்ற சொல்லும் தமிழ் இலக்கியங்களில் பலவாறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப்படை, சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, திருவாசகம், திருக்குறள், மணிமேகலை, சீவக சிந்தாமணி, திவாகர நிகண்டு போன்ற பல நூல்களிலும் நச்சினார்க்கினியர், பேராசிரியர் போன்றோரின் உரைகளிலும் நாடகம் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளமை

காணமுடிகிறது. தமிழில் கிடைக்கப்பெறும் முதல் நாடக நூல் சிலப்பதிகாரம்தான் என்று கூற முடியும். இன்றும் வழக்குரை காதையை நாடகமாக்கி நடித்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழின் இத்தகைய தொன்மையான கலைவடிவமாகிய நாடகக் கலை நூற்றாண்டுதோறும் பலவாறான மாறுதல்களுக்கும், பாடுபொருளுக்கும் உட்பட்டு வந்திருக்கிறது. இந்த வரிசையில் புராண நாடகங்கள் தமிழ் நாடகக் கலை வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடம் வகிக்கின்றன. தமிழகக் கிராமப்புறங்களில் நிகழ்த்தப்படும் கலை வடிவங்களுள் புராண நாடகங்கள் இன்னும் முதன்மை வகிக்கின்றன என்பதில் ஐயப்பாடில்லை. தமிழகத்தின் வட மாவட்டங்களில் பரவலாக எல்லாக் கிராமங்களிலும் புராண நாடகங்கள் நிகழ்த்தப்படுகின்றன. அவ்வகையில் வேலூர் மாவட்டம் வாணியம்பாடி வட்டத்திலுள்ள பெரிய குரும்பத்தெரு கிராமத்தில் மிகவும் பிரசித்திபெற்ற நாடகமாகவும், ஏறக்குறைய நூறு ஆண்டுகளாக நிகழ்த்தப்படுகின்ற நாடகமாகவும் அர்ச்சுனன் தவசு நாடகம் திகழ்கின்றது.

பாரதக் கதையில் துரியோதனாதிகளைப் போரிலே வெல்வதற்காகப் பாண்டவர்களுள் ஒருவனான அர்ச்சுனன் ஈசனை நோக்கித் தவம் புரிந்து பாசுபதாஸ்திரக் கணைகளைப் பெறுகிறான். இந்தக் கருவை விவரித்துச் செல்வதாக இப்பதிப்பின் பிரதி அமைகின்றது. தொடக்கத்தில் பாண்டவர்கள் துரியோதனாதிகளிடம் அனைத்தையும் இழந்து வனத்திலே வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கையில் வியாசமுனிவர் எதிர்ப்படுகிறார். அவர் ஏன் இவ்வாறு இருக்கிறீர்கள் என்று கேட்க, பாண்டவர்கள் நடந்ததைக் கூறுகிறார்கள். அதற்கு வியாசர் உங்களுள் யாராவது ஒருவர் ஈசனை நோக்கித் தவம் புரிந்து பாசுபதாஸ்திரக் கணையைப் பெற்றுவந்தால்தான் துரியோதனாதிகளை உங்களால் வெல்லமுடியும் என்று கூறுகிறார். இதனையடுத்து அர்ச்சுனன் தவம் செய்யப் புறப்படுகின்றான். முதலில் மோகினிவனம், இரண்டாவது ராமராச்சுதன் வனம், மூன்றாவது பிராமண வனம், நான்காவது நாராயணர் வனம், ஐந்தாவது வேங்கைக் கன்னி வனம், ஆறாவது மலையடி வேடுவன் வனம், ஏழாவது ஏலக்கன்னி வனம், எட்டாவது கெண்ட பேரண்டன் வனம், ஒன்பதாவது இந்திர நீல

வேடுவன் வனம் என்று ஒன்பது வனங்களில் பயணம் செய்யும்போது பலவேறு இடையூறுகள் அர்ச்சுனனுக்கு ஏற்படுகின்றது. அனைத்தையும் சமாளித்துக்கொண்டு கைலாய மலையை அடைந்து அங்கு 90 அடி கம்பத்தினை ஊன்றிச் சிவபெருமானை நோக்கிக் கடுமையான தவம் புரிகின்றான், அர்ச்சுனனுடைய தவத்தினை ஏற்றுச் சிவபெருமான் பாசுபதாஸ்திரக் கணைகளைத் தருகிறார். இத்தகு கதைப்போக்கினை இந்நாடகப்பிரதி மையமாகக் கொண்டிருக்கிறது.

**இனி இந்நாடகப் பிரதி பற்றி**

நாம் பதிப்புக்கு எடுத்துக்கொண்ட பிரதி பெரிய குரும்பத்தெரு கிராமத்தின் காலஞ்சென்ற முன்னாள் தலைவரும், சிறந்த நாடக நடிகருமான திரு. க. தேவராஜி அவர்களால் 6.7.1962 என்ற தேதியிட்டு எழுதப்பட்ட பிரதியாகும். இப்பதிப்புக்காகக் கிடைத்த மூன்று நாடகப் பிரதியுள் இப்பிரதியே காலத்தால் முந்தியது என்பதால் இப்பிரதியை முன்னிலைப்படுத்தியும் ஏனைய இரண்டு பிரதிகளோடு ஒப்புமைப்படுத்தியும் இப் பதிப்பினை மேற்கொண்டுள்ளோம். எனினும் கிடைத்த மூன்று பிரதியுள் வேறுபாட்டினைக் காண்பதற்கில்லை, இப்பிரதியும், இதற்கு முந்தைய பிரதியைப் பார்த்துப் படி எடுக்கப்பட்டதே. ஆனால் இதற்கு முன் எழுதப்பட்ட எந்தப் பிரதியும் அந்தப் பகுதியில் தற்போது கிடைக்கப்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**நாடக ஆசிரியர், குழுவினர் வரலாறு**

ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன் வெள்ளக்குட்டை எனும் கிராமத்தில் இந்நாடகத்தின் ஆசிரியராக இருந்தவர் பெரியசாமி வாத்தியார் என்பவர். இவரையடுத்து குன்னத்தூரைச் சார்ந்த திருப்பதி வாத்தியார் என்பவர் ஆசிரியராக விளங்கினார். இவருடைய குழுவில் கிருஷ்ணன், மாணிக்கம், வாலுருவி, துரைசாமி போன்றோர் நினைவு கூரத்தக்கவர்கள், இக்குழுவினரை அடுத்து 1930–களில் கோடியூரைச் சார்ந்த காளி என்பவர் வாத்தியாராக விளங்கினார். இவருடைய தலைமையில் பூண்டு, சின்னதுரை, அப்பாதுரை, கண்ணன் ஆகியோர் சிறந்த நடிகர்களாக விளங்கினார்கள். இவர்களுள் பூண்டு என்பவர் மிகச்சிறந்த நாடக நடிகராகவும், வாத்தியாராகவும் உருவானார்.

இவருடைய தலைமையில்தான் அதாவது 1960–80களில் வாணியம்பாடி வட்ட அளவில் 'நாடகம் என்றால் பெரியகுரும்பத்தெரு' என்று பெயரெடுக்கும் அளவிற்கு நாடகம் வளர்ச்சியடைந்திருந்தது என்று கூறலாம். மிகச்சிறந்த நடிகர்களையெல்லாம் அப்பகுதியில் உருவாக்கிய பெருமை அவருக்குண்டு. அவர்களுள் க. தேவராஜி (இப்பதிப்புப் பிரதியை எழுதியவர்), கரியண்ணன், செம்மூஞ்சி, அ. பழனி, கண்ணு, ஞானசுந்தரம், திப்பண்ணன், சின்னா கவுண்டன், சின்னதாயப்பன், சின்னப்பன், மாலா, தங்கராஜி, குடியண்ணன், கோவிந்தசாமி, தொன்னையப்பன், கரியப்பன் போன்றோர் மிகவும் குறிப்பிடத்தக்கவர்களாவர். இக்குழுவிற்கு மிருதங்கம் வாசித்தவர்கள் தங்கவேலுவும், சேட்டும். ஆர்மோனியம் வாசித்தவர் சின்னப்புள்ளை என்பவர். அப்பகுதியில் நாடகக் கலையில் உச்சநிலை அடைந்த குழு இது என்று கூறலாம். பூண்டு வாத்தியார் என்பவர் மட்டும் நூற்றுக்கும் அதிகமான முறை அர்ச்சுனன் வேடமேற்று தவசு மரம் ஏறியிருக்கிறார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இந்தக் குழுவினருடைய காலகட்டத்திற்குப் பிறகு, அவ்வூரில் நாடகம், தொய்வு நிலையை அடைந்தது என்றே கூறலாம். எனினும் தற்போது பூண்டு வாத்தியாரின் மகனான உமாபதி என்பவர் இந்நாடகத்தின் வாத்தியாராக விளங்கி ஒரு குழுவை இயக்கி வருவது மனதிற்கு மகிழ்ச்சியூட்டக்கூடிய செய்தியாகும்.

**இந்நாடகக் குழுவினர் நிகழ்த்திய நாடகங்களும், ஊர்களும்**

பூண்டு வாத்தியார் தலைமையிலான நாடகக்குழுவினர் பல்வேறு நாடகங்களை நிகழ்த்தியிருக்கிறார்கள். அவற்றுள் துரோபதை துகிலுரிதல், போகவதி கல்யாணம், சத்யாவதி கல்யாணம், கிருஷ்ணன் – அர்ச்சுனன் சண்டை, நல்லதங்காள், குறவஞ்சி, அர்ச்சுனன் தவசு, துரியோதன கர்வ பங்கம், சகுந்தலா கல்யாணம், பவளக்கொடி, ஏணியேத்தம், அல்லி தர்பார், ஆரவல்லி சூரவல்லி, பத்மாசூரன், அமிர்தவல்லி கல்யாணம், கர்ண மோட்சம் காண்டாவன தகனம் போன்ற பல நாடகங்களை வேலூர் மாவட்ட அளவிலும் அருகிலுள்ள மாவட்டங்களிலும், ஆந்திரப் பகுதிகளிலும் சென்று நடித்திருக்கிறார்கள். அவற்றுள் நவாப்பாளையம், தொம்புருட்டி, ஜமுனாமரத்தூர், அத்திப்பட்டு, மாமத்தூர், வேலூர், சுண்டி குண்டாள (ஆந்திரா), அருங்கல்துருகம்,

மூங்கிலேரி, ஊத்தங்கரை, அரூர், திருப்பத்தூர், தாதனவலசை, பொம்மநாயக்கன்பட்டி, கிரிசமுத்திரம், ஆம்பூர், ஒசூர், மல்லானூர் போன்ற ஊர்கள் குறிப்பிடத்தக்கவை.

பெரும்பாலும் கிராமப்புறங்களில் நடைபெறும் திருவிழாவை ஒட்டியே நாடகங்கள் நிகழ்த்தப்பெறும். இவை மாசி மாதம் முதல் ஆனி மாதம் வரையிலான காலங்களில் அதிகமாக நிகழும். இந்நாடகக் குழுவினர் தொடக்கத்தில் ஒரு ஊருக்கு நடிக்கச் சென்றால் அப்படியே தொடர்ந்து பிற ஊர்களில் ஒப்பந்தம் செய்துகொண்டு நடிப்பார்கள், இப்படியே அக்குழுவினர் தங்களுடைய வீடுகளுக்குத் திரும்ப மூன்று மாத காலம் வரைக்குக் கூட ஆகுமாம். ஒரு சில ஊர்களில் மூன்று மாதங்கள் வரையிலும் ஒரே இடத்தில் கொட்டகை அமைத்து டிக்கட் வசூலித்து நாடகம் நடித்த அனுபவமும் இவர்களுக்கு உண்டு.

**நாடகம் நிகழ்த்தப்படும் விதம்**

அர்ச்சுனன் தவசு நாடகம் பதினான்கு வேடங்களைக் கொண்டு நடிக்கப்படுகிறது. அர்ச்சுனன் வேடம் கட்டுபவர் மட்டும் மூன்றுநாள் முதல் ஒன்பது நாள்வரை கையில் கங்கணம் கட்டிக்கொண்டு நாடகம் முடியும்வரை விரதம் இருப்பார். குடி, கூத்தி, ஊண் போன்ற தீய எண்ணங்கள் எதனையும் கைக்கொள்ளமாட்டார். நாடக அரங்கத்தின் தரைத்தளம் புது மண் பரப்பிப் பொலிவாக்கப் பட்டிருக்கும். தென்னங்கீற்றுப் பந்தலால் அமைந்த நாடக அரங்கம் இரு பகுதிகளைக் கொண்டது. இடையில் திரையைக் கட்டுவார்கள். முன் பக்கம் நிகழ்த்தும் இடமாகவும் பின்பக்கம் ஒப்பனை செய்து கொள்ளும் இடமாகவும் அமையும். திரையை ஒட்டி மிருதங்கம், ஆர்மோனியம், தாளம், முகவீணை போன்ற இசைக்கருவிகளை இசைப்பவர்களுக்கு நாற்காலி மேசை அமைக்கப்பட்டிருக்கும்.

நாடகத் தொடக்கம் இரவு ஒன்பது மணி அளவில் அமையும். முதலில் கட்டியங்காரன் அறிமுகமாவார். ஏனைய பாத்திரங்களோடு இணைந்து நாடகத்தை நடத்திச் செல்லும் பெரும்பங்கு இவரைச் சார்ந்ததே, கட்டியங்காரனின் நகைச்சுவை என்பது ஆண், பெண் இடையேயான உறவினை மையப்படுத்தியதாகவே இருக்கும் இத்தகைய

நகைச்சுவை நாடகத்தின் இடை இடையே அறங்கேரும். இவரைத் தொடர்ந்து நாடக அமைப்பிற்கு ஏற்ப பிற பாத்திரங்கள் அறிமுகமாகும். வழக்கம் போலவே இந்த நாடகத்திலும் ஆண்களே பெண் வேடமேற்று நடிப்பார்கள்.அர்சுனன் கதாபாத்திரத்தின் ஒப்பனை மட்டும் மயில்தோகையில் பரப்பி கட்டப்பட்ட "பலகாரத்தை" முதுகிலே கட்டிக் கொண்டு ஆடும் வகையில் அமைந்திருக்கும், பிற பாத்திரங்களின் ஒப்பனை அதனதன் தன்மைக்கேற்ப அமைந்திருக்கும். மறுநாள் காலை எட்டு மணி அளவிலேயே நாடகம் நிறைவடையும். அர்ச்சுனன் தவம் செய்வதற்காகத் தென்னை மரத்தின் பக்கவாட்டில் படிகளை அமைத்து நாடக அரங்கத்தின் முன் நடுவார்கள். அர்ச்சுனன் தவசு மரத்தில் ஏறுவதற்கு முன் பூசை செய்து விட்டு ஏறுவான். அப்போது பொரி, பழம் போன்றவை அடங்கிய மூட்டை ஒன்று அவன் தோளிலே இருக்கும், மரத்தின் ஒவ்வொரு படியை ஏறும்போதும் பாடல்களைப் பாடிக்கொண்டு ஏறுவான். இறுதியில் மரத்தின் உச்சத்தில் கடப்பாரை ஊன்றப்பட்டுப் பலகை பொருத்தப்பட்டிருக்கும். அப்பலகையின் மீது அர்ச்சுனன் அமர்ந்து கொள்வான். அப்போது, குறவனாக உருமாறி வந்திருக்கும் சிவபெருமானுக்கும் அர்ச்சுனனுக்கும் விவாதம் நடக்கும். நிறைவாக அர்ச்சுனன் இறங்கும் முன் அவன் எடுத்துச்சென்ற பொரி, பழங்களை மரத்தின் மேலிருந்து மக்களை நோக்கி வீசுவான். அவற்றை மக்கள் ஆர்வத்துடன் பிடிப்பர். அப்பழங்களைக் குழந்தைப்பேறு இல்லாத பெண்கள் உண்டால் குழந்தைப்பேறு உண்டாகும் என்ற நம்பிக்கை அப்பகுதி மக்களிடையே உண்டு. இந்நாடக நிகழ்வு பெரிய குரும்பத்தெரு கிராமத்தில் ஆண்டுதோறும் வைகாசி மாதம் நிகழும் அம்மன் திருவிழாவை முன்னிட்டு நிகழ்த்தப்பெறும்.

பெரிய குடும்பத்தெரு கிராமத்தில் குரும்பர் இன மக்கள் அதிக அளவிலும் வன்னியர் இன மக்கள் சிறிய அளவிலும் வாழ்கின்றனர். நாடகத்தின் எந்தப் பாத்திரத்தையும் எவரும் ஏற்று நடிக்கலாம். இவ்விரு மக்களிடையே எவ்விதச் சலனத்தையும் இன்றுவரை காண்பதற்கில்லை.

இப்பதிப்பு க. தேவராஜி அவர்களால் எழுதப்பட்ட "அர்ச்சுனன் தவசு நாடகம்" – கையெழுத்துப்படியில் உள்ளவாறே எவ்வித மாற்றமுமின்றி அமைகின்றது.

இந்த நாடகப் பிரதியை நான் பதிப்புக்கு எடுத்துக்கொள்ள அனுமதி அளித்த என்னுடைய நெறியாளர் பேராசிரியர் வீ. அரசு, தலைவர், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறை அவர்களுக்கு முதல் நன்றி.

இப்பதிப்பு உருவாவதற்குப் பல்வேறு நிலைகளில் ஆலோசனைகளும், விளக்கங்களும் அளித்த திரு உமாபதி, திரு திப்பண்ணன், புலவர் அ. பழனி அவர்களுக்கு என் நன்றி.

இப்பதிப்பின் முகப்பு ஓவியம் ஏகலைவன் என்ற நாடக நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது என்பதை பதிவு செய்கிறேன்.

மேலும் இப்பதிப்பு சிறப்பாக வெளிவர துணைபுரிந்த அனைவருக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

அன்பன்,

**தே. சிவகணேஷ்.**

நாள் : 11.07.2005
இடம் : சென்னை – 5.

# அர்ச்சுனன் தவசு புராண நாடகம்

## தொடக்கம்

### தருமர் வருகிற கவி

*தார்புகழ் தருமரோடு தம்பிமார் படைகள் சூழ*
*கார்புகழானமாது கன்னி பாஞ்சாலியோடு*
*பேர்புகழான நாங்கள் பெருகியே கொலுவில் நிற்க*
*பார்புகழான தருமர் தம்பிமார் வருகின்றோமே.*

### வசனம்

அதாவது என்னவென்றால் தருமராஜனும் தம்பிமார்களும் சக்தி என்று சொல்லக்கூடிய திரௌபதியும் தர்பார் நாடி வருகின்ற விதங் காண்க.

### தருமபுத்திரர் தரு

1. *பூலோக தருமர் இதோ வந்தேன்*
*எமனிட புத்திரன் இந்த ஜெகந்தன்னில் போற்றிட (பூலோக)*

2. *பெருமைசேர் வீமனும் புகழும்*
*அர்ச்சுனன் நகுலன்*
*அருமை சாஸ்திரம் ஓதும் அன்பன் சகாதேவனும்*

3. *மணிமுடியில் அணிந்த மகிடம் பளப்பளன்ன*
*மந்திரிமார் அருகில் சூழவே பாண்டு*
*புதல்வர் மன்னவரும் வந்து மேவினார்*

4. *சங்கரந்தன்னில் வில்லம்பு*
*சிங்காரமாயிலங்க*
*மங்களமுடனே மன்னர் ஐவர் வந்தோம்.*

5. *தருமம்தனில் சிறந்த ஒருமனதானசீலன்*
*குருமொழிகள் தவறா குந்தி மைந்தர்கள் வந்தோம்*

6. *மயில்களும் குயில்களும் மகிழ்ந்து*
*தை ராகங்கள் பாட*
*தையல் துரோபதை மாது சாயல் குலைந்து வாட*

7. *காலை மாலையும் கன்னன் நேமம் மறவாமலே*
*சீலர் ஐவர்களும் பாலைவனந்தனிலே (பூலோக)*

**தரு. கவி**

*திருதராஷ்சுதன் மைந்தன் துரியனும் ஜகனீ மாமன்*
*சிறிது வஞ்சகத்தினாலே சீமையும் அனைத்தைத் தோற்றோம்*
*வறுமையாய்ப் பனிரெண்டு வருசமே சஞ்சரிக்க*
*அருமைசேர் தம்பிமாரே அனைவரும் வருகுவீரே*

**வசனம்**

ஆனால் கேளும் தம்பிமார்களே துரியோதனன் சொன்ன கட்டளைப்படியே பனிரெண்டு வருசம் வனவாசம் செய்வோம் வாரும் தம்பி மார்களே.

**தருமர் தரு**

1. *வனத்தில் பனிரெண்டு வருசமும் சஞ்சரிப்போம்*
*வாரும் தம்பிமார்களே நாமெல்லோரும் சேர்வோம்*
*தம்பிமார்களே*

2. *சினத்த துரியபூபன் செய்த கட்டளைப்படி*
*தம்பி செய்த கட்டளைப்படி*
*செல்வ நமது நாடு அனைத்தையும் தோற்றோமே*

3. *ஜலத்தில் நஞ்சினையூட்டி ... சதிசெய்தான் படும்பாவி*
*நம் பலத்தைக் கெடுக்கவேதான் பகடை ஆடினான் துரோகி*

**சுருள்:**

4. *பத்தினி தன்னை அந்த உத்தம சபை தன்னில்*
*வெற்றியாக வஸ்திர பங்கமும் செய்தானே*

5. *வஞ்சகர்க்குப் பயந்து வ்னத்தில் உருவு மாறி பெண்ணே*
*வனத்தில் உருவு மாறி*
*அஞ்சாமல் ஆறுபேரும் அன்பாய் வாசம் செய்வோம்.*

6. விண்ணில் உதித்தமாதே வாடிக் கலங்க வேண்டாம்
பெண்ணே, நீ வாடிக் கலங்க வேண்டாம்

7. அகிலத்தையுண்ட மாயன் அவர் இணையடித் துணையினால்
அவர் இணையடித் துணையினால்
சகலமும் சங்கரா என்று நீங்கள் வாரும்

8. மணிமுடியில் விளங்கும் மன்னருக்குப் பிறந்து
மாய வனந்தன்னிலே காலம் கழிக்கலாச்சே

9. வாயுலகத்தில் மழையும் சிறிதுகாலம்
ஆவியானகோடை வெயிலும் சிறிதுகாலம்

10. கலை நிறைந்த உலகில் நிலவு சிறிதுகாலம்
மலைகளும் தெரியாத இரவு சிறிது காலம்

## தருமபுத்திரர் தரு – ஜம்பை

தாம்ததிந்தக்க

1. பாண்டவர்கள் வனவாசம் பாருலகில் வாரார் தருமர்
நீண்டுபோக நீருமேலே, நெஞ்சகந்தனிலே தம்பி

2. சூரிய வனந்தனிலே துரிதமுடன் போய்ப் புகுந்தார்
அவ்வனத்தில் ஓர்வருடம் அய்வர்களும் சஞ்சரித்தார்

3. ராமரிஷிவனந்தனிலே நலமுடனே போய்ப் புகுந்தார்
அவ்வனத்தில் ஓர் வருடம் அய்வர்களும் சஞ்சரித்தார்.

4. மூர்க்கமகா ரிஷிவனத்தில் முடி மன்னரும் போய் புகுந்தார்
அவ்வனத்தில் ஓர்வருடம் ஐவர்களும் சஞ்சரித்தார்.

5. காளமகா ரிஷிவனத்தில் காளையர்கள் போய் நுழைந்தார்
அவ்வனத்தில் ஓர்வருடம் ஐவர்களும் சஞ்சரித்தார்.

6. சய்ந்தநல்ல வனந்தனிலே
அவ்வனத்தில் ஓர்வருடம் ஐவர்களும் சஞ்சரித்தார்.

7. காமதேவன் பருவத்திற்குக் கருத்துடனே போய்ப் புகுந்தார்
அவ்வனத்தல் ஓர்வருடம் ஐவர்களும் சஞ்சரித்தார்.

8. *கெந்தர்ம பருவத்திற்குக் கீர்த்தியுடன் போய் நுழைந்தார்*
*அவ்வனத்தில் ஓர்வருடம் ஐவர்களும் சஞ்சரித்தார்.*

9. *குரோமரிஷிவனந்தனிலே குரு மன்னர்கள் போய் நுழைந்தார்.*

10. *ரோமரிஷிவனந்தனிலே ரோஷமாகப் போய் நுழைந்தார்*

11. *பாலைவனத்திற்குப் பாங்குடனே போய் நுழைந்தார்*
*அவ்வனத்தில் ஓர்வருடம் ஐவர்களும் சஞ்சரிக்க.*

**வசனம்**

ஆனால் கேளும் பெரியநாதாக்களே அந்த துரியோதனன் இட்ட கட்டளைப்படியே ஐவராஜாக்களும் ஆதி சக்தி ரோபதையும் முதல் சூரியவனம் 2வது ராமரிஷிவனம், 3வது மூர்க்கமகாரிஷிவனம், 4வது காலபைரவர்வனம், 5வது சைந்தவனம், 6வது காமத்தேன் பருவதம், 7வது கெந்தர்மப்பருவதம், 8வது குரோமரிஷிவனம், 9வது ரோமரிஷிவனம், 10வது பாலைவனத்தில் வந்து சஞ்சரித்துக்கொண்டு இருந்தார்களாம். பஞ்சபாண்டவர்கள் அவ்வாறாக சஞ்சாரம் செய்துகொண்டு இருக்கும் பொழுது தனது பாட்டனாராகிய வேதகுருவானவர் வருகிற விதம் எப்படி என்றால்.

**கொலு. வேதவியாசர் வருகிற கவி.**

*தர்மரும் தம்பிமாரும் தவித்திடும் வேளை தன்னில்*
*அருநெறி நீதியுள்ள அருமகா முனிவர்தானும்*
*கரந்தனில் தண்டேந்தி காவிகாம்பாரம் அணிந்து*
*முகந்தனில் வெண்ணீரும் பூசி முனிவரும் வருகின்றேனே*

**வசனம்**

அதோவன்ன, சந்திரகுல கவுரவருக்கு மூதாதியாகிய வேதவியாச முனிவர் பாண்டவர் பிரலாபிக்கும் வியாகூலம் தன்னுடைய ஞான திருஸ்டியால் அறிந்து பாண்டவரை நாடி வருகிற விதம் காண்க.

**கொலு. தரு.**

1. *வேள்வியினில் சிறந்த வேதமூன்றும் கற்றுணர்ந்த*
*வேதவியாசரும் வந்தேன், வீரப் பராகரம்மாய்*

*வேத வியாசரும் வந்தேன்*
*கந்தம் புனுகுவாசம் வீச அனுதினமும்*
*காவி காம்பாரமணி துதி பேச*
*மார்பினில் பூணூல் அசைய*
*மங்கள வாத்தியம் இசைய*

2. *வீணைவாத்தியம் கியானத்துடனே*
*நானிலம் அஞ்ச நலமுடனோடி*

3. *எவரும் கண்டு துதித்துப் போற்றவே*
*பஞ்சவர் மனதில் இருக்கும் துயரந்தனைத் தீர்க்கவே.*

**பாட்டு**

*தவறில்லாத கன்னி தையல் விசனம் தீர்க்க*
*சுருள், பஞ்சவர் எந்தனை நெஞ்சினில் துதிக்க*
*அஞ்சாமல் நானும் ஐவரைக் காக்க*

**தரு, ஏகதாளம், ஓரடி**

*ஓட்டமும் பெருநடையும் ஆகவே வேதவியாசர்*
*ஓடோடியும் ஓடிவாராரோ, தருமரைக்காண*
*காவி கம்பாரம் அணிந்துமே வேதவியாசர்*
*கடுக நடந்து ஓடிவாராரே, பெரு ஓட்டம்மாக*
*ஆறுகுனை, தன்னைத் தாண்டியே வேதவியாசர்*
*அதிவேகமாக ஓடிவாராரே சந்தோசமாக*
*பத்தாவனம் தன்னைத் தாண்டியே வேதவியாசர்*
*பாங்குடனே ஓடிவாராரே தருமரைக்காண*

**பொது வசனம்.**

ஆனால் கேட்டீரோ பெரிய நாதாக்களே வேதவியாசரானவர் பாலைவனத்தில் இருக்கும் பாண்டவரிடம் வந்தவுடனே, ஐவராஜாக்களும் ஆதிசக்தி துரோபதையும் வியாசரைக் கண்டு துதிக்கும் விதம் எப்படி என்றால்,

## தருமபுத்திரர் பாட்டு

*முனிநாதா சரணம் உமது பாதம் முனிநாதா சரணம்*
*முனிவரே உந்தன் பாதம், நான் முடி வணங்கிப் போற்றினேன்*
*ஆதருவாகவே உன் தாளினைப் பணிந்தேனே முனிநாதா சரணம்.*

## வசனம்

சுவாமி அடியோர்களாகிய பாண்டு புத்திரர்களும் ஆதி சக்தி திரோபதையும் அனைவரும் உந்தன் பாதத்தைப் பன்னீரால் கழுவி, பட்டால் துவட்டி, மல்லிகை, முல்லை, கொங்கு, மந்தாரை என்று சொல்லக்கூடிய நட்புட்பமலர்களை எல்லாம் கொய்து உந்தன் திருவடியில் சாற்றி அனேக கூடிய சாஸ்ட்டாங்க நமஸ்காரம் சுவாமி.

## வியாசர் வசனம்

மங்களம் உண்டாகட்டும் எழுந்திருப்பீரப்பா; ஆனால் நீங்கள் ஏன் இந்தக் கானகத்தில் தவிக்கக்கூடிய காரணம் தருமனந்தனா.

## தருமபுத்திரர் பாட்டு – ஆதிதாளம்

*சந்திர குலகுருவே நிலை நிறுத்தும்*
*சர்குருவே வேத மாமுனியே*
*இருந்த நாடு குருவே இந்திரப்புரம்*
*இன்பமுடன் குருவே வாழ்ந்திருந்தோம்*
*வஞ்சனையைத் துரியன் மனதில் எண்ணி*
*வன்மையுடன் ஒரு மண்டபம் கட்டி*
*எந்தன் தந்தை சீரிய விதுரனிடம்*
*சீருடனே அவன் ஓலை எழுதி*
*ஓலை தன்னை குருவே வாசித்துப் பார்த்து*
*ஒற்றுமையாகவே அஸ்தினா புரமே வந்தோம்*
*மண்டபத்தின் குருவே அழகைக் காட்டி*
*மகிழ்ச்சியுடன் துரியன் பொழுதைப் போக்கித்*
*தனது மாமன் குருவே, ஜகனி தன்னைத்*
*தந்திரமாய் குருவே எதிரியாக்கிப்*

*பந்தையத்தால் குருவே பகடையாடிப்*
*பாதி நாட்டை குருவே பறித்துக் கொண்டான்*
*சூதினாலே குருவே சொக்கட்டான் ஆடிச்*
*சொந்த நாட்டை குருவே பறித்துக் கொண்டான்*
*நாடுவிட்டோம் குருவே நகரம் விட்டோம்*
*நாலுவகை குருவே சேனை விட்டோம்*
*வீடு விட்டோம் குருவே காடு வந்தோம்*
*வியாசரே உங்கள் பாதம் கண்டோம்*

### தருமபுத்திரர் வசனம்

சுவாமி, அந்தக் கபட வஞ்சகனாகிய துரியோதனன் எங்களை இப்பேர் கொத்த பங்கம் செய்ததும் தவிர பனிரண்டு வருசம் வனவாசமும் ஓர் வருசம் அக்கியாதவசம் துலைத்து வாரும் என்று கட்டளை இட்டான் சுவாமி அதன்படியாக முதல் சூரியவனம் 2வது ராமரிஷிவனம், 3வது மூர்கமகாரிஷிவனம், 4வது காலபைரவர்வனம், 5வது சைந்தவனம், 6வது காமத்தேன் பருவதம், 7வது கெந்தர்மப்பருவதம், 8வது குரோமரிஷிவனம், 9வது ரோமரிஷிவனம், 10வது பாலைவனத்தில் வந்து உன் திருவடியைக் கண்டோம் சுவாமி வேதகுருவே.

### வேதவியாசர் வசனம்

ஆனால் கேளும் அப்பா தர்மனந்தனா நீங்கள் இவ்வாறாகக் கானகத்திலே சஞ்சாரம் செய்து கொண்டு இருந்ததாலே அந்த துரியோதநாதிகளை ஜெயிக்க முடியாது. அது ஏனென்றால் கர்ணன் இடத்தில் நாகாஸ்திரம் இருக்கிறது. விதுரன் இடத்திலே தேவர் மூவர் யாவருக்கும் எதிரில்லாத வில் ஒன்று இருக்கிறது. சைந்தன் இடத்திலே கொண்ணமாலை இருக்கிறது. அவ்வாறாக அவர்களிடத்தில் மூன்று ஆயுதங்கள் இருக்க உங்களிடம் ஒன்றும் இல்லாமல் இருக்க உங்கள் அய்ந்துபேரில் யாராகிலும் ஒருவர் ஆணாசை, பெண்ணாசை, பொன்னாசை, பொருளாசை, மண்ணாசை என்று சொல்லக்கூடிய ஐந்து ஆசைகளையும் வெறுத்து, ஐந்து பஞ்ச பூதத்தையும் துறந்து பத்தழகையும் போக்கி, பச்சைத் திருமேனியையும் போக்கி யாவாங்கி சர்வாங்கி சன்யாசி ரூபத்தோடு கூடிக் கைலாய மலைக்கோயிலாய்

வீற்றெழுந்தருளிய ஜெகதீசனைக் கோரி 90 அடிக் கம்பத்தினை ஊனி, கம்பத்தின் மீதில் ஏறி அக்கினித் தவம் புரிந்து பாசுபதாஸ்திரம் பெற்று வந்தால்தான் துரியோதனாதிகளை ஜெயிக்க முடியும் இல்லையேல் முடியாது என்றாராம் வேதவியாசர்.

**தருமர் வசனம்**

கேளும் சாமி! வேதகுருவே! அப்படி தவம் செய்ய வேண்டுமானால் நானே தவம் செய்து பாசுபதாஸ்திரம் பெற்று வருகிறேன் சாமி.

**வேதவியாசர் வசனம்**

கேளும் தர்மனந்தனா! நீர் தவத்திற்குப் போனால் உன் தம்பிமார்கள் செய்யும் அக்கிரமங்களை யாரோ கண்டிக்க வல்லவர். ஆகவே உன்னைத் தவிர தம்பிமார்கள் நால்வரில் ஒருவரை அனுப்பும் தருமநந்தனா.

**வீமசேனன் வசனம்**

சுவாமி நான் சென்று தவம் புரிந்து பாசுபதம் வாங்கி வருகிறேன் குருவே.

**பொது வசனம்**

இவ்வாறாக வேதவியாசர் சொன்னமாத்திரத்திலே அருகில் இருந்த வீமசேனனானவன் நான் போறேன் என்றானாம்.

**வியாசர் வசனம்**

ஆனால் வீமா நீ எவ்வாறாகச் சென்று கைலாய மலையில் தவம் புரிந்து பாசு பதாஸ்திரக் கணைகளைப் பெற்று வருவாய்.

**வீமசேனன் வசனம்**

யானோ கைலாய மலைக்குச் சென்று என் கதையைப் பூமியின் இடமாக ஊனி அதன் பேரில் ஏறி தலை கீழாகவும் கால் மேலாகவும் மூன்றே முக்கால் நாழிகை தவம் புரிவேன் என் தவத்திற்கு மெச்சி அந்த ஜெகதீசன் வரம் தந்தால் ஆச்சுது, இல்லையேல் அந்தக் கைலங்கிரி மலையை என் கதையினால் தும்சப்படுத்திடுவேன்.

**வியாசர் வசனம்**

ஆனால் கேளும் வீமசேனா இவ்வளவு கடுங்கோபம் உடையவன் தானா, ஈஸ்வரனிடத்தில் வரம் பெற்று வரக்கூடியவன் நீ அதற்கு வல்லபுருஷன் அல்ல அப்புறம் செல்.

**அர்ச்சுனன் வசனம்**

அண்ணா நான் சென்று வருகின்றேன்.

**வேதவியாசர் வசனம்**

ஆனால் கேளும் தருமநந்தனா! உன் தம்பி அர்ச்சுனன் போகிறேன் என்று சொல்லுகிறான் அவனை அனுப்பினால் ஜெயம் பெற்று வருவான் உன் விருப்பப்படி சொல்லும் தருமனந்தனா.

**தருமர் வசனம்**

கேளும் சாமி வேதகுருவே அர்ச்சுனன் பெண்டு கள்ளன், துண்டுக் கள்ளன் கூத்திக் கள்ளன். கல் உரலுக்குத் துணிசுற்றி வைத்திருந்த போதிலும் அதை ஆணோ, பெண்ணோ என்று ஆராய்ந்து பார்க்கக் கூடியவன் ஆச்சே. இவன்தானா பச்சைத் திருமேனியெல்லாம் போக்கி, பத்து அழகையும் போக்கி ஆணாசை, பெண்ணாசை, பொருளாசை, மண்ணாசை, மனையாளாசை என்று சொல்லக்கூடிய ஐந்து ஆசைகளையும் வெறுத்து, ஐந்து பஞ்ச பூதங்களையும் துறந்து பத்தழகையும் போக்கி ஏவாங்கி, சர்வாங்கி, சன்யாசி ரூபங் கொண்டு கைலாசம் சென்று பாசுபதாஸ்திரம் பெற்று வரக்கூடியவன். (என்று கொல்லென்று நகைத்தாராம் தருமநந்தர்)

**அர்ச்சுனன் விருத்தம்**

*அண்ணன்மேல் கோபமாகி அர்ச்சுனன் வடக்கு நோக்க*
*பெண்ணாசை உள்ளானென்று பெருமான் முன்னே*
*சொன்னதாலே*
*எண்ணாத எண்ணம் கொண்டு காலபைரவர் வனத்தை நாடி*
*காண்டிபம் தன்னையூன்றிக் கடுந்தவம் செய்யலுற்றான்.*

## பொது வசனம்

இவ்விதமாகத்தானே அர்ச்சுனன் தன் அண்ணாவாகிய தருமராசன் சொன்னதைக் கேட்டு கோபம் அதிகரித்து அவலரிக் கண்கள் ரெண்டும் செவ்வலரிபூத்து நீலமொழிக் கண்கள் ரெண்டும் நெருப்புத்தனலாகி கோபாக்கினி வடவாகினி மீறிக் காலபைரவரிடம் சென்று சஞ்யாசி ரூபம் கொண்டு விபூதி பஞ்சாச்சரம் அணிந்து கொண்டு தவம் செய்யும் பொருட்டாக ஏதென்று தர்பார் நாடி வருகின்ற விதம் காண்க.

## அர்ச்சுனன் வருகிற கவி

*நீடாழியுலகத்தில் மறைநாலோடைந்தென்று நிலை நிற்கவே*
*வாடாத தவவாய்மை முனிராசன் மாபாரதஞ் சொன்னநாள்*
*ஏடாக வடமேரு வெற்பாக வங்கூரெழுத்தாணிதான்*
*கோடாக வெழுதும் பிரானைப் பணிந்தன்பு கூர்வா மரோ.*

## வசனம்

பிரதி வாய்வு தெய்வ ஆகாய லோக மார்கமாகத்தானே வைசம்பாயி மகா முனிவர் வந்து ஜனமே ஜெய மகாராஜனுக்குச் சொல்லத் தொடங்கிய காலத்தில் எவ்வாறு எவ்வாரென்றாலயோ நெடிய கடல் சூழ்ந்த பூலோகத்தில் வேத நாலுடனே ஐந்தாம் வேதமென பிரசித்தமாக நிலைத்திருக்கும்படி தளர்ச்சியடையாத மெய் தவத்தையுடைய வேதவியாச மகாமுனிவர் வந்து மகாபாரதம் சொன்ன நாளிலே மகமேருகிரி மலையைக் கையேடாகவும், தனது வெள்ளிங்கிரி கொம்பைக் கூர் எழுத்தாணியாகவும் கொண்டு இந்த பாரதக் கதையை எழுதி முடித்த வினாயகப் பெருமானை பக்தி செய்வோம் என்றவாறு.

## அர்ச்சுனன் தரு

*போர்படைத்த விசையனுடன் மும்மை நெடும்பிறவியினும்*
*பிரியனாகி*
*சீர் படைத்த கேண்மையினாற் தேர்நூக்க இசைந்தருளும்*
*செங்கண்மாலை*

*பார் படைத்த சுயோதனர்க்குப் படையெனவே அமரிலெனப்*
*பணிந்த கோவை*
*கார்படைத்த நிறத்தோனைக் கைதொழுவர் பிறவாழிக்*
*கரைகண்டாரே.*

### அர்ச்சுனன் வசனம்

ஆனால் கேட்டீரோ பெரிய நாதாக்களே, நெடிய இருள் சூழ்ந்த த்ரேதாயுகத்தில் இரண்ய வதை சம்மார நிமித்தமாய் எழுந்தருளியபோது பிரகல்நாதனாகவும், இரண்டாவது க்ரேதாயுகத்தில் இராவண சம்மார நிமித்தமாய் எழுந்தருளியபோது விபீஸ்னராகவும், மூன்றாவது அவதாரத்தில் த்வாபுரியுகத்தில் பூமிபாரம் தீர்க்க எழுந்தருளியபோது அர்ச்சுனராகவும் இருந்த மூன்று அவதாரத்திலும் பிரியாதவராகிய சீர்படைத்த நட்பினால் அர்ச்சுனனுக்கு ரத சாரதியாய் இருந்து இப்பாரதத்தை நடத்திய எம்பெருமான் யேகவண்ணன், நமோ நாராயணனைக் கைத்தொழுபவர். இப்பிறப்பென்னும் சாலோக, சாமீப, சாரூப சாயிட்சம் என்னும் நான்காம் பதவியைக் கரை கண்டாராம்.

### அர்ச்சுனன் வருகிற கவி

*இங்கித ஓமம் செய்து இருந்த வெண்ணீரும் சாற்றி*
*அர்ச்சுனன் மேனியெல்லாம் ஆகவே கவசம் பூண்டு*
*ஒப்பில்லா சிவன்பேரால் உயர்தவம் செய்ய வேண்டி*
*வில்கணைவாங்க வல்லோன் விஜயனும் வருகின்றேனே*

### அர்ச்சுனன் தரு ஆதிதாளம்

1. *ஓம் கெங்காதர கெங்காதர கெங்காதர பாகி ஓம் கெங்காதர பாகி*
*ஓம் கௌரீசா பரமேசா ஜெகதாம்பர வாசா*

2. *ஓம் வாணிப்புரிவேணி ஓம் மங்கை மனோகர வாசா*
*ஓம் மங்கை மனோகர வாசா*
*ஓம் கெங்காபாணியைச் சடையில் வைத்த பரமசங்கரனே*

3. *ஓம் வெள்ளை விடைமீதில் ஏறும் விமலா சங்கரனே*
*ஓம் விமலா சங்கரனே*
*ஓம் விமலாசா கிரிவாசா ஜகஜம் பரவாசா*

4. *ஓம் பச்சை விடைமீதில் ஏறும் பரம்ம சங்கரனே*
*ஓம் பரமேசா கிரிவாசா பார்வதி சமேசா*

5. *ஓம் நந்தி வாகனம் ஏறும் நாதா பரமேசா*
*ஓம் நம்பினேன் உந்தன் பாதம் காசி விஸ்வேசா*

6. *ஓம் ஈசா, கிரிவாசா, பரமேசா, கைலாசா*
*ஓம் பரமேசா கிரிவாசா, பார்வதி சமேசா*

### அர்ச்சுனன் தீபதை

*கௌரி பங்கையனைக் கண்டு கதிபெற்று வருவோம் என்று*
*நவமணியுடைய மார்பன் நலமுடன் நினைவு கொண்டு*
*பவனியில் மஞ்சரேகை வடிவெல்லாம் தான் மறைந்து*
*தவமுனி வேடம் கொண்டு தனஞ்செயன் வருகின்றேனே.*

### அர்ச்சுனன் வசனம்

அதோவென்ன கேளுங்கள் பெரிய நாதாக்களே!

பார்த்தீபன், பர்குணன், கிரிடி, பேடி, சவ்விய சாஷியன், தனஞ்செயன், வில்விஜயன், நாராயணன், காண்டீபன், அர்ச்சுனன் என்று சொல்லக்கூடிய பத்து நாமதேயம் படைத்த அர்ச்சுனனானவன், ஆணாசை, பெண்ணாசை, பொன்னாசை, பொருளாசை, மண்ணாசை என்று சொல்லக்கூடிய ஐந்து ஆசைகளையும் வெறுத்து ஐந்து பஞ்ச பூதத்தையும் துறந்து பத்து அழகையும் போக்கி, பச்சைத் திருமேனியையும் போக்கி, விபூதி பஞ்சாட்சரம் அணிந்து ஏவாங்கி, சர்வாங்கி, சன்யாசி உருவங்கொண்டு கைலங்கிரி கோயிலாய் வீற்றெழுந்தருளிய ஜெகதீசன், எத்துவாகனன், மையானவாசன் என்று சொல்லக்கூடிய சிவபெருமான் பேரில் ஒரே கவனமாக தவம் செய்ய நடக்கும் விதம் எப்படியென்றால்.

### அர்ச்சுனன் தரு

1. *ஓம் வாரார் துரை வாரார்துரை வையகம் பார்க்க வாரார்*
*ஓம் போரார் துரை போரார்துரை புண்ணியஸ்தலம் போரார்*

2. *ஓம் ரீரிரி ரீரிரி ரீரிரி ரீரி – ஓம் ரீரிரி ரிரி*
*ஓம் ரிரிரி ரிரிரி ரிகந்தரி ரீரி*

3. ஓம் தீங்கு நாங்கு ஜக தித்தா நாதரி
ஓம் தவமுனிவேசம் சிவரிஷி போல

4. ஓம் ஜடைமுடி ஜடைமுடி ஜடைமுடி சூட்டி
அர்ச்சுனன் தவசுபோறார் அதிசயம் பாராய்

5. ஓம் காவி ஜல்லடம்கட்டி காண்டீபம் அம்ராதோனி
ஓம் தான்தொழுத மேனியெல்லாம் தாவடம் போல் நீரணிந்து
அர்ச்சுனன் தவசுபோறார் அதிசயம் பாராய்

6. ஓம் கூந்தலை ஜடைகள் பின்னிக் குண்டலம் கடுக்கனிட்டு
ஓம் தான் தொழுத மேனியெல்லாம் தாவடம்போல் நீரணிந்து

7. ஓம் யோகியைப்போல் கண்விழித்து யோகப்பட்டம்தான் தரித்து
ஓம் புலித்தோலை மேல்விரித்துப் போகவே ஜடையணிந்தான்
ஓம் அரகர அரகர அரகரவென்று
அர்ச்சுனன் தவசி போறார் அதிசயம் பாராய்

### அர்ச்சுனன் கவி

இது நல்ல பவசரித்திரம் பெரியோர்களுக்குப் பலபல விதமாம்
இது மகா யம சரித்திரம் இது அழகூரில் பாடின பதமாம்
இது மகா தவ சரித்திரம் பெரியோர்க்கு நான் தாழ்ந்து
சொல்லிய இதனமாம்
இது மகா சிவ சரித்திரம் இது பெரியோர் செவிகளுக்கு
ஏற்குமாம்

### வசனம்

ஆனால் கேட்டீரோ ராஜனந்தனா! பாவத்திற்கு ஈடான கதைகளை அனேக வர்ணத்துடன் ஆடினாலும், பாடினாலும் பெரியோர் செவிகளுக்கு ஏற்காதாம். இந்த பவ சரித்திரம் என்னும், இந்த எம சரித்திரம் என்னும், இந்த தவ சரித்திரம் என்னும், இந்த சிவ சரித்திரம் என்னும் இந்தக் கதையைப் பாடினால் இதைக் கேட்க வந்த பெரிய நாதாக்களெல்லாம் அமைதியாய் உட்கார்ந்து அமிர்தம் போல் உட்கொள்வார்களாம்.

### அர்ச்சுனன் தீபதை

*கெங்கை மாமலர் கொன்னையும் ஜெடமுடி கடவுள்*
*நங்குமேந்தும் அவர் பாசு பதாஸ்திரம் பெற்று*
*மங்கையர் பாதம் பணிந்து நான் பெருந்தவம் செய்ய வேண்டி*
*மங்கை பாகரை நோக்கி விடைபெற்ற கதையைச் சொல்ல*
*மதித்தாராம்.*

### வசனம்

ஆனால் கேட்டீரோ ராஜநந்தனா! கொன்ன மாலையும் கெங்கா பவனியும் உத்திராச தாள்வடமும், நாகாபரணமும் தன ஜடாபரதத்திலே தரித்த ஜெகதீசன் அந்த ஜெகதீசன் ஜடாபரம் சமரும் படியாக அய்யனான அர்ச்சுனன் தனது காண்டீபத்தினால் அந்த கெங்காபவாணி சிதறும்படியாக அடித்து ஒப்பிவைத்து மெப்பிவைத்துப் பாசுபதாஸ்த்திரக் கணைகளைப் பெற்று வந்த கதையை, என்னால் ஈன்ற மாத்திரம் சொல்லிக் கொண்டு வருகின்றேன். நான் சொல்லிக்கொண்டு வரக்கூடிய சங்கீதத்தில் தாளக்குற்றம், மேளக்குற்றம், வலின குற்றம், மெலின குற்றம், இசை குற்றம், ராக குற்றம், பபுன் குற்றம் பாட்டு குற்றம் என்று சொல்லக்கூடிய எந்தக் குற்றம் இருந்த பொழுதிலும் இந்தச் சபையின்கண் வீற்றிருக்கின்ற பிராமணர், வைசிய, சூஸ்திர, சத்திரியரென்னும் நான்கு வருணத்தார்களும் அடியேன் நான் சொல்லிக்கொண்டு வரக்கூடிய, சங்கீத நாடகத்தை கோபிக்காமல் உங்கள் வீட்டில் ஓர் பிள்ளையானது பிறந்து அது ஓர் குற்றம் செய்துவிட்டால் அதை எவ்வாறாக மன்னித்துப் பொறுத்துக் கொள்கிறீர்களோ, அவ்வாறாகப் பொறுத்துக்கொள்ளும்படி அடியேனாகிய நான் அனைவரையும் தாழ்ந்து கேட்டுக் கொள்கிறேன். அனைவருக்கும் சபா வணக்கம்.

### அர்ச்சுனன் தீபதை

*தர்மநாதிபர் நூற்றொருவர் தன்னுடன் சூது*
*புனித நாடு நகரமும் தேர்புரவி சேனையும் தோற்று*
*பெருகுமாபரணி வகைகளும் தனங்களும் பிறவும் மங்கை*
*திரௌபதியாள் தன்னைர் போர்முனை சபையிலே*
*நிறுத்தினாராம்.*

வசனம்

ஆனால் கேளுங்கள் பெரிய நாதாக்களே!

கபட வஞ்சகனாகிய துரியோதனன் ஓர் சிங்கார மண்டபம் உண்டாக்கி அந்த மண்டபத்தினுடைய அழகைக் காட்டத் தன் சிறிய தந்தையாகிய விதுரு மகாராஜனை வரவழைத்து அவர் கையிலே ஓர் ஓலையானது எழுதிக்கொடுத்து இந்தரபிரசத்திலே இருந்த ஐந்து இராஜாக்களையும் வரவழைத்தார்களாம். அப்படி வரவழைத்ததும் தவிர அந்த மண்டபத்தின் அழகைக் காட்டித் தன் மாமாவாகிய ஜகுனியை வரவழைத்துப் பொழுது போகும் படியாகத் தானே போஜனத்திற்குப் போகும் முன்னதாக மாமனை எதிரியாக்கி சூதனால் சொக்கட்டான் ஆடிப் பந்தயத்தினால் பகடை ஆடி, அவனி, புவனி ஐம்பத்தாறு தேசத்தையும் பறித்துக் கொண்டதும் தவிர உப்புச்சட்டிவரகோடு கூட அவர்களுக்கு சுதந்திரம் இல்லாமல் பறித்துக் கொண்டதும் தவிர ஐவராசாக்களையும் கிட்டிங்கோல் அண்ணாந்தலை இட்டு இராஜசபையிலே நிறுத்தினார்களாம்.

அவ்விதம் செய்ததும் தவிர சக்தி என்று சொல்லக்கூடிய திரௌபதியை இராஜ சபையிலே இட்டுத் தன் தம்பியாகிய துடுக்கு துச்சாதனனை விட்டு வஸ்திரபங்கம் செய்தானாம்.

அவ்விதம் செய்ததும் தவிர ஐவராசாக்களையும் பத்தினி என்று சொல்லக்கூடிய பாஞ்சாலியும் 12 வருடம் வனவாசமும் ஓர் ஆண்டு அக்கியாதவாசமும் கழித்து வந்தால் உங்கள் பங்குக்குள் பாதி தருவேன் என்று கட்டளை இட்டானாம் துரியோதனன்.

அக்கட்டளையை மீறாமல் ஐவராசாக்களும் பத்தினியாகிய பாஞ்சாலியும் முதல் சூரியவனம், இரண்டாவது இராமரிஷிவனம், மூன்றாவது மூர்கரிஷிவனம்,நான்காவது காளபைரவ வனம், ஐந்தாவது ஜெயந்த வனம், ஆறாவது காமத்தேன் பருவதம், ஏழாவது கெந்தர்ம பருவதம், எட்டாவது குரோமரிஷிவனம், ஒன்பதாவது ரோமரிஷிவனம், பத்தாவது பாலைவனம். அப்பாலைவனத்தில் சஞ்சாரம் செய்து கொண்டு இருக்கும் காலத்தில் சந்திர ஜடாதர சாம்ப மூர்த்திக்கு ஒப்பாகிய வேதவியாச மகாமுனி வந்து ஓய் அப்பா தருமநந்தனா! உங்களுக்கு நாடு

நகரம், அவனி புவனி 56 தேசம் இருக்க சேனை செயனங்கள் இருக்க உங்களை நம்பி, இந்தப் பஞ்சாச்சர கோடி பூமண்டலத்தில் உம்மை நம்பி இருக்கக் கூடிய பிணம் தீனி பூச்சிபோல் உலாவக்கூடிய ஜீவ ஆத்மாக்கள் கோடிகள் எல்லாம் உங்களை நம்பி இருக்க அதையெல்லாம் துறந்து இந்த வனத்தில் காய்கனிகளைப் புசித்துச் சுனைநீர் அருந்தி இருக்க வேண்டியது காரணம் என்ன என்று கேட்டாராம் வேதவியாசர்.

அதற்கு தருமபுத்திரர் நடந்த சங்கதியையெல்லாம் வியாசருக்குச் சொல்லி முறையிட்டு அழுதார்களாம் பாண்டவர்கள். அப்போது வேதவியாசர், அப்பா தருமநந்தனா நீங்கள் இவ்வாறாக சஞ்சாரம் செய்து கொண்டு இருந்தால் உங்களால் அந்த துரியோதனாதிகளை ஜெயிக்க முடியாது. அது ஏனென்றாலேயே கர்ணன் இடத்தில் நாகாஸ்திரம் இருக்கிறது. சைந்தன் இடத்தில் கொண்ணமாலை இருக்கிறது. விதுரன் இடத்தில் தேவர் மூவர் யாவருக்கும் எதிரில்லாத வில் ஒன்று இருக்கிறது. அவ்வாறாக அவர்களிடத்தில் மூன்று ஆயிதம் இருக்க உங்கள் இடத்தில் ஒரு ஆயிதமும் இல்லாமல் இருக்க உங்கள் ஐவரில் யாராகிலும் ஒருவர் ஆணாசை, பெண்ணாசை, பொன்னாசை, பொருளாசை, மண்ணாசை என்று சொல்லக்கூடிய ஐந்து ஆசைகளையும் வெறுத்து, ஐந்து பஞ்ச பூதத்தையும் துறந்து, பத்தழகையும் போக்கி, பச்சைத் திருமேனியையும் போக்கி, விபூதி பஞ்சாட்சரம் அணிந்து, ஏவாங்கி, சர்வாங்கி, சன்னாசி உருவங்கொண்டு சைலங்கிரிகோயிலாய் வீற்றெழுந்தருளிய முக்கண்ணன், எத்துவாகனன், மைய்யான வாசன் என்று சொல்லக்கூடிய ஜெகதீசன் பேரில் ஒரே கெவனமாக சென்று 90 அடி கம்பத்தை ஊனி, கம்பத்தின்பேரில் ஏறிச் சிவபெருமானைக் கோரி, அக்கினித்தவம் புரிந்து பாசுபதாஸ்திரம் என்னும் வில்கணைகளைப் பெற்று வந்தால்தான், அந்த துரியோதனாதிகளை ஜெயிக்க முடியும். இல்லையேல் முடியாதென்றாராம், அப்பொழுது அருகாமையில் இருந்த வீமசேனனானவன் நான் போறேன் என்றானாம். அதற்கு வேதவியாசர் ஆனால் வீமா நீ எவ்வாறாகச் சென்று தவம் புரிவாய் என்று கேட்டாராம். அதற்கு வீமசேனன் சுவாமி யானோ கயிலாய மலைக்குச் சென்று என் கதையைப் பூமியின் இடமாக ஊனி, அதன்பேரில் ஏறி என் தலை கீழாகவும், கால் மேலாகவும் மூன்றேமுக்கால் நாழிகை பரியாந்தம் அந்த

சிவபெருமானைக் கோரி தவம் புரிவேன். அப்போது என் தவத்திற்கு மெச்சி அந்தச் சிவபெருமான் வரம் தந்தால் ஆச்சுது இல்லையேல் அந்த கைலங்கிரி மலையை இதோபார் என் கதையினால் தும்சப் படுத்திடுவேன் என்றானாம். அதைக் கேட்டு வேதவியாசரானவர், நீ இவ்வளவு ஆங்காரகோபம் உடையவன் தானா ஜெகதீசன் இடத்தில் வரம் பெற்று வரக்கூடியவன். நீ அதற்கு வல்ல புருஷன் அல்ல அப்புறம் செல் என்றானாம். அவ்விதமாகச் சொன்ன மாத்திரத்தில் அருகிலே இருந்த அர்ச்சுனனானவன் நான் போறேன் என்றானாம், அதற்கு அவர் அண்ணணாகிய தருமபுத்திரர் இவன்தானா பெண்டுக்கள்ளன், துண்டுகள்ளன், கூத்தி கள்ளன், கல் உரலுக்குச் சீலை கட்டி வைத்திருந்தபொழுதும் அது ஆணோ பெண்ணோ என்று ஆராய்ந்து பார்க்கக் கூடியவன் ஆச்சுதே. இவன் தானா ஆணாசை, பெண்ணாசை, பொன்னாசை, பொருளாசை, மண்ணாசை என்று சொல்லக்கூடிய ஐந்து ஆசைகளையும் வெறுத்து, பஞ்ச பூதத்தையும் துறந்து பத்தழகையும் போக்கி, பச்சைத்திருமேனியையும் போக்கி, விபூதி பஞ்சாச்சரம் அணிந்து ஏவாங்கி, சர்வாங்கி, சஞ்யாசி உருவம் கொண்டு, அந்த ஜெகதீசனைக் கோரி தவம் புரிந்து பாசுபதாஸ்த்திர கணைகளை பெற்று வரக் கூடியவன் என்று கலீல் கலீல் என்று நகைத்தாராம். தனது அண்ணா நகைத்ததைக் கண்டு அய்யனான அர்ச்சுனனுக்கு அவலெரி கண்கள் செவ்வலெரி பூத்து நீலமொழிக் கண்கள் நெருப்புத் தனலாகி கோபாகினி, வடவாகினி மீறி காலபைரவ வனமே சென்றாராம். காலபைரவர் வனத்தில் சென்று தனது காண்டீபத்தைப் பூமியின் இடமாகவூனி அதன் மீது ஏறித் தலை கீழாகவும், கால் மேலாகவும் மூன்றேமுக்கால் நாழிகை பரியாந்தம் காலபைரவரைக் கோரி தவம் புரிந்தாராம்.

அப்போது காலபைரவரானவர் வந்து ஆனால் அப்பா அர்ச்சுனா நீ என்னைக் கோரி தவம் புரிந்தது என்ன காரணம் என்றாராம். அதற்கு அர்ச்சுனனானவன் சுவாமி காலபைரவரே என் பங்கும் பங்காளியாகிய துரியோதனாதிகளை ஜெயிக்க ஜெகதீசனைக் கோரி தவம் புரிய வேண்டும். அதற்காக எனக்கு ஆணாசை, பெண்ணாசை, பொன்னாசை, பொருளர்சை, மண்ணாசை என்று சொல்லக்கூடிய ஐந்து ஆசைகளையும் வெறுக்கும்படியாகவும், பஞ்ச பூதங்களையும் துறக்கும்படியாகவும்,

பத்தழகும், பச்சத் திருமேனியும் போக்கும்படியாகவும் விபூதி பஞ்சாச்சரம் அணிந்து யாவாங்கி, சர்வாங்கி, சஞ்யாசி உருவம் வேண்டும் என்றாராம். அப்போது காலபைரவர் ஆனவர் அவ்வாறாகத் தந்தாராம். அப்பால் அர்ச்சுனன் யான் கைலங்கிரியில் போய் தவம் புரிய 90 அடி கம்பம் வேண்டும் என்றாராம். அதற்கு காலபைரவர் ஆனவர் முதல் கிரேதாயுகத்தில் தேவேந்திரன் தவும் புரிந்து 30 அடி தங்கக் கம்பம் இருக்கிறது. அதனைப் பெற்றுக் கொள் என்றாராம். அதுவும் போதாதென்றாராம். இரண்டாவது திரேதாயுகத்தில் காளிகாதேவி தவஞ்செய்த 30 அடி வெள்ளிக் கம்பம் இருக்கிறது அதனைப் பெற்றுக்கொள் என்றாராம். அதுவும் போதாதென்றாராம், மூன்றாவது துவாபரியுகத்திலே நான் தவம் புரிந்தது 30 அடி எஃகு கம்பம் இருக்கிறது. அதனைப் பெற்றுக் கொள்ளும் என்றாராம், அவ்விதமாகச் சொன்ன மாத்திரத்தில் இந்த மூன்று கம்பங்களையும் நான் எப்படிச் சேர்த்துக் கொண்டு போவேன், கைலாயமலை இன்னும் எத்தனை யோஜனை தூரம் இருக்கின்றதோ நான் அறியேன், இந்த மூன்று கம்பங்களையும் ஒன்றாகச் சேர்த்து ஓர் திருநீற்றுப் பழமாகச் செய்து தந்தால் போதும் என்று கேட்டானாம். அவ்விதமே செய்து தந்தாராம், காலபைரவர். பின்பு அர்ச்சுனன், சுவாமி, யான் போகும் இடங்களில் யாராகிலும் என்னை எதிர்த்து யுத்தம் செய்ய வந்தால் அவர்களை ஜெயிக்க எனக்கு ஒரு அக்கினியஸ்திரம் வேண்டும் என்றாராம். அதையும் தந்தாராம். அப்பால் அர்ச்சுனன் இதையெல்லாம் பெற்றுத் தனது அம்ராதோனியில் இடமாக அடைக்கலம் செய்து கொண்டு, அந்தக் காலபைரவர் இடத்தில் விடையைப் பெற்றுக்கொண்டு தனது அண்ணாவாகிய தருமபுத்திரரிடம் அப்பணை கேட்க வருகிற விதம் எப்படி என்றால்.

**அர்ச்சுனன் தரு (ஜம்பை தாளம்)**

**தாம் ததிந்தக்க ஓம் அரகரா**

1. *பெரியண்ணா சரணமண்ணா நான் பெருந்தபசு போய்வாரண்ணா*

2. *தருமண்ணா சரணமண்ணா நான் தவஞ்செய்யப் போய் வாரண்ணா*

3. பார்க்காதந்த பரமர் பாதம் நான் பார்த்து வரப் போரேனண்ணா

4. பரமர்பாதம் பார்க்க வேண்டும் நான் பாசுபதம் வாங்க வேண்டும்

5. பாசுபதம் வாங்கியல்லோ என் பகையாளியை ஜெயிக்க வேண்டும்

6. வீமண்ணா சரணம் அண்ணா அந்த விமலர் பாதம் பார்த்து வாரேன்

7. காணாதந்த கர்த்தன் பாதம், நான் கண்டுவரப் போரேனண்ணா

8. கர்த்தன் பாதம் காணவேண்டும், நான் கணைகளையும் வாங்க வேண்டும்

9. கணைகளை நான் வாங்கியல்லோ, அந்தக் காங்கியனைக் கொல்ல வேண்டும்

10. நகுல சகாதேவர்களே நானும் தவம் போறேன் தம்பியரே

11. பொல்லாதந்த வரம் வாங்க, நான் போறேன் தம்பி செல்லாமலே

12. அந்தக் காங்கியந்த கர்ணனையும் இரு கண்டத்துண்டம் செய்ய வேண்டும்.

13. ஜகனி அந்த ஜல்லியானை, நான் சமர்களத்தில் கொல்ல வேண்டும்.

14. அருங்கிளி என் துரோபதையே நான் அருந்தவசு போறேன் பெண்ணே

15. அறனார் பாதம் போகவேண்டும் நான் வில் அம்புகளை வாங்க வேண்டும்

16. அந்த துரியோதரன் சேனையெல்லரம் ஒரு செடலாட்டமாக ஆட்ட வேணும்

17. பொல்லாதந்த நூறு பேரை நான் போர்க்களத்தில் வெல்ல வேண்டும்

18. பெண்ணே நானும் உந்தனுக்குப் பிரித்த கூந்தல்
முடிக்க வேண்டும்

19. அண்ணாவே நான் உந்தனுக்கு அரசமுடி சூட்ட வேணும்

20. அண்ணாவே நீ எந்தனுக்கு அப்பணைகள் தாருமண்ணா.

### அர்ச்சுனன் வசனம்

ஆனால் அண்ணா தருமநந்தனா! நான் சென்று ஜெகதீசனைக் கோரி தவம்புரிந்து பாசுபதாஸ்திரக் கணைகளைப் பெற்று வருகிறேன். எனக்கு உன் வாய் தவறாமல் நன்றாக விடைதாருமண்ணா.

### தருமபுத்திரர் பாட்டு. ஆதிதாளம்

1. அப்பணைகள் தம்பி கேட்க வந்தாய்
அர்ச்சுனனே எந்தன் கண்மணியே

2. எப்படித்தான் தம்பி உனைப்பிரிந்து
இருப்பேனோடா எந்தன் கண்மணியே

3. சண்டை செய்து தம்பி ராஜ்ஜியத்தை
நாம் ஆண்டாலென்ன ஆளாமல் போனாலென்ன

4. போரு செய்து தம்பி ராஜ்ஜியத்தை
நாம் ஆண்டாலென்ன ஆளாமல் போனாலென்ன

5. வாது செய்து தம்பி ராஜ்ஜியத்தை
நாம் ஆண்டாலென்ன ஆளாமல் போனாலென்ன

6. வேண்டாமப்பா தம்பி அர்ச்சுனனே
நாம் வசித்திருப்போம் இந்த வனந்தனிலே

7. காய்கள் உண்டு வனத்தில் கனிகள் உண்டு
பறித்துத் தின்று சுகமாய் வாழ்ந்திடலாம்

8. சுனைகளுண்டு சுனைநீர் தீர்த்தமுண்டு
சுகமுடனே குடித்து வாழ்ந்திடலாம்

*9. ஆற்றுமணலைத் தம்பி எண்ணினாலும்*
*உன் கூத்திமாரைத் தம்பி எண்ணொனாது*

*10. உன் தலைமயிரைத் தம்பி எண்ணினாலும் உனக்குத்*
*தரித்த பெண்டை தம்பி எண்ணொனாது*

*11. காட்டில் மஞ்சிம் பில்லைத் தம்பி எண்ணினாலும்*
*நாட்டில் உன் பெஞ்சாதியைத் தம்பி எண்ணொனாது*

*12. ஏரில் மச்சமதைத் தம்பி எண்ணினாலும்*
*ஊரில் நீ இச்சைக் கொண்ட பெண்ணை நீ எண்ணொனாது*

*13. இத்தனையும் தம்பி நீ மறந்து*
*எப்படிடா தவம் புரிவாய் கண்ணே*

*14. உன்னைநானும் தம்பி போகச் சொல்லி*
*ஒன்டியாக நானும் இருப்பேனோடா.*

**தரு. வசனம்**

வேண்டாம் தம்பி அர்ச்சுனா நீ ஜெகதீசனைக் கோரி, தவம் புரிந்து பாசுபதாஸ்திரக் கணைகளைப் பெற்றுவந்து, அவர்களைக் கொன்று, அந்த ராஜ்ஜியத்தை ஆண்டாலென்ன, ஆளாமல் போனாலென்ன அவர்களேயாளட்டும். நாம் கானகத்தின் இடமாகக் காய், கனி, கிழங்குகளையெல்லாம் புசித்து இன்னும் கொஞ்சம் நாள் காலம் கழிப்போம், வாரும் தம்பி அர்ச்சுனா.

**அர்ச்சுனன் வசனம்**

ஆனால் கேளும் அண்ணா தர்மண்ணா, நான் முன் வைத்த பாதத்தைப் பின் வைக்கப் போவதில்லை, எனக்கு சந்தோசமாக விடைதாருமண்ணா நான் சென்று வருகிறேன்.

**தரு. வசனம்**

கேளும் தம்பி அர்ச்சுனா, அப்படியே நீ உறுதியாகப் போகவேண்டுமானால், இதோ என்னிடம் ஒரு தர்ம நீதி சூடாமணி புஸ்தகம் இருக்கிறது. அதைத் தருகிறேன், அந்த நீதி நூல் பிரகாரம்

போகும் இடத்தில் உனக்கு இடுக்கண் ஏற்பட்டால், அந்தச் சூடாமணி நீதிநூல் தவறாமல் நடந்துகொள், நீ போய்வாரும் தம்பி அர்ச்சுனா!

## அர்ச்சுனன் வசனம்

அவ்விதமாகவே சென்று வருகிறேன் அண்ணா. ஆனால் தர்மண்ணா, வீமண்ணா, நகுலா, சகாதேவா, பெண்ணே பாஞ்சாலி, நான் ஜெகதீசனிடம் சென்று தவம் புரிந்து பாசுபதாஸ்திரக் கணைகளையும், இன்னும் வேண்டிய வரங்களையும் பெற்று வருகிறேன். நீங்கள் ஒற்றுமையாய் வாழ்ந்திருப்பீர், பெண்ணே பாஞ்சாலி நான் சென்று வருகிறேன்.

## அர்ச்சுனன் பொது வசனம்

ஆனால் கேளுங்கள் பெரிய நாதாக்களே!

இவ்விதமாகவே ஐயனான அர்ச்சுனன் தன் அண்ணாவாகிய தர்மபுத்திரன் இடத்திலும், வீமசேனனிடத்திலும் நகுல சகாதேவர் இடத்திலும், ஆதிசக்தி துரோபதை இடத்திலும் விடையைப் பெற்றுக் கொண்டு ஈசானிய மூலையை நோக்கி ஜெகதீசன் பேரில் ஒரே கவனமாக நடப்பது எப்படி என்றால்.

## அர்ச்சுனன் தீபதை

*முந்தியே வழியைக் காட்டும் முக்கண்ணா போற்றி போற்றி*
*வெற்றிசேர் ரிஷபம் ஏறும் மெய்ப்பொருளரனே, போற்றி*
*சக்தியை இடையில் வைத்த சதாசிவப் பொருளே, போற்றி*
*உன் சித்தமும் இறங்கலையோ சிவ சிவா போற்றி போற்றி*

## அர்ச்சுனன் தரு. அடதாளம்

1. *திங்கள்தான் குலத்தில் வேந்தன் சீருடன் வடக்கே நோக்கி*
   *சிவசங்கரா கெங்காதரா வென்று தனஞ்செயன் தான்*
   *நடந்தான் (தான் அரோகரா)*
2. *அங்கையில் மழுமான்யேந்தும் ஆதி அரனை வேண்டி*
   *சிவசங்கரா கெங்காதரா வென்று தனஞ்செயன் தான்*
   *நடந்தான் (தான் அரோகரா)*

3. *பொங்கரனிரைகள் பூண்டு பூணூலுடன் அரனை வேண்டி*
*சிவசங்கரா கெங்காதரா வென்று தனஞ்செயன் தான்*
*நடந்தான் (தான் அரோகரா)*

4. *பங்கையர் குலத்தில் வேந்தன் பரமேசன் தன்னைக் காண*
*சிவசங்கரா கெங்காதரா வென்று தனஞ்செயன் தான்*
*நடந்தான் (தான் அரோகரா)*

5. *திங்கள் பிரை தரித்த ஜெகதீசன் தன்னைக் காண சிவ...*

6. *மங்கையாள் உமையாள் பாகன் மலர்ப்பாதம் தன்னைக் காண*
*சிவ... ஓம் அரகர மகாதேவா....*

**அர்ச்சுனன் தீபதை**

*நடந்தபின் கெருடன் தானும் நலமுடன் இடமே ஏக*
*யிடந்தனில் வலியான் போக யியர் காக்கை வலமே ஏக*
*திடமுடன் நாரையானும் அதி சீருடன் வலமே ஏக*
*தடையில்லா நிமித்தமென்று தனஞ்செயன் யேகினானே*

**அர்ச்சுனன் வசனம்**

ஆனால் கேளுங்கள் பெரியோர்களே!

அர்ச்சுனன் தனதண்ணாவாகிய தர்மபுத்திரனிடத்திலும் வீமசேனனிடத்திலும், நகுல சகாதேவனிடத்திலும், ஆதிசக்தி துரோபதையிடத்திலும் விடையைப் பெற்றுக் கொண்டு ஈசன்ய மூலையை நோக்கி நடக்கும்பொழுது கெருடனென்று சொல்லக்கூடிய ஆழ்வார் பச்சியானது வலப்புறமாக இருந்து இடப்புறமாகத் தீர்த்துக் கொண்டு போனதாம். வலியான் என்று சொல்லக்கூடிய வால் நீண்ட கருங்குருவியானது வலப்புறமாக இருந்து இடதுபுறமாகத் தீர்த்துக் கொண்டு போனதாம். செம்போத்தென்னும் செம்பட்டைக் காக்கையானது இடப்புறமாக இருந்து வலப்புறமாகத் தீர்த்துக் கொண்டு போனதாம். இந்தச் சகுனங்களையெல்லாம் ஐயனான அர்ச்சுனன் கண்டு நாம் போவதற்கு முன்னதாகவே நமக்கு ஜெகதீசன் நன்றாக வரமளிப்பாரென்று அர்ச்சுனன் அதிகம் மகிழ்ச்சியாக நடக்கலுற்றானாம்.

# மோகினி வனம்

### அர்ச்சுனன், தீபதை

*கண்டுமே நிமைக்கும் முன்னே கானகம் தனில் புகுந்து*
*தண்டகா வனம் புகுந்து தனஞ்செயன் நடக்கும்போது*
*அண்டத்தை யளந்த மாயன் அர்ச்சுனன் மனஞ்சோதிக்க*
*புண்டரி ஆதி கிருஷ்ணன் பெண்ரூபம் ஆகிவாரார்*

### வசனம்

ஆனால் கேளுங்கள் பெரியோர்களே ஐயனான அர்ச்சுனன் தண்டகா வனத்தில் போகும்போது எல்லாம் வல்ல இறைவனாகிய மகாவிஷ்ணுவானவர் அர்ச்சுனன் மனவுறுதியைக் காணும் பொருட்டாகப் பூலோகத்திலே இருக்கக்கூடிய பெண்கள் அழகையெல்லாம் ஒரே அழகாகக் கொண்டு அர்ச்சுனன் முன்னால் வந்து மாயமோகினியாகவும் ரதிமோகினியாகவும், தில்லை மோகினியாகவும் அர்ச்சுனன் முன்பாகக் கூத்தாட வருவது எப்படி என்றால்.

### மோகினி வருகிற விருத்தம்

*பாங்குள்ள பாதம் பங்கையர் கனிங்காலும்*
*தேங்குள்ள சீர்மை கூர்மை சீருள்ள அழகும்*
*அல்லினை நேர் அமர்ந்தது போல*
*நலமுள்ள முழங்கால் – நானையம்மாக*
*அந்தமா சித்தியும் அன்ன மூக்குத்தியும்*
*மின்னல் கொடியாள் மிகுந்தவள் ரதியாள்*
*அன்ன நடையாள் அதிகாரஞ் சிதமாய்*
*மின்னலைப் போல நானும் மோகினி வருகின்றேனே*

### வசனம்

**அதோவென்ன காண்டாவனத்தில் அர்ச்சுனன் மனதைச் சோதிக்கும் பொருட்டாகக் கிருஷ்ணமூர்த்தியானவர் ரதி மோகினியாகச் சபையை நாடி வருகிற விதம் எப்படியென்றால்.**

## மோகினி கொலுவடிப் பாட்டு

1. நான் வந்தேன் மோகினி என்னும் மாது
அதி ஒயிலாள் – மிக ஒயிலாள்
நான் வாரேன் மோகினி என்னும் சாது

2. நான் வந்தேன் வினோதமாக – இன்றாதியோர் துதிக்க
நந்தன் முகந்தன் பாதம் – சிந்தையிலே நான் மறவேன்

3. காதில் கொந்தாள ஓலை – காமரதியாள் போல
சோதிப் பிரகாசம் போல – என் தூய பதக்கமாட

4. ஆலிலை போல் வயிறு – மேலும் பனிகளாட
வால வயதுகுண – சால வசிகரியாள்

5. வாயில் தாம்பாலம் மிட்டு – வர்ண சுருள் மடித்து
சாயல் நடை நடந்து – தையலாள் வந்தேனிதோ

6. மயில்போல் நடைநடந்து – குயில்போல் தொனியுடையாள்
கோதை மோகினிமாது – குணசபை வந்தேனிதோ

7. எனைக் கண்டோர் – மதிமயங்க – காமரதியாள்போல
தண்டாமலர்வதனி, தையலாளும் வாரேன் வாரேன்

## மோகினி தீபலத

வந்து மோகினியாள் தானும் மாதவனெதிரே நோக்கி
விந்தையாய் ஒதுங்கி நின்று விஜயனும் மகிழவேதான்
சந்தோசமாய் விழித்துப் பார்த்துத் தையலாள் கிலேசங்கொண்டு
தன்கலை எடுத்துப்பாரா தனஞ்செயனைக் கண்டேதுரைப்பாள்.

## வசனம்

அதோவென்ன மாயமோகினியானவள் அர்ச்சுன மகாராசுனைப் பார்த்துச் செல்லுகிற விதம் எப்படி என்றால்.

## பாட்டு ரூபதாளம்

1. காரையா மயல் தீரையா என்னைச்
சேரைய்யா முகம் பாரையா மன்னா!

2. ஆசைகொண்டு வந்தேனிங்கே மோசம் செய்ய வேண்டாம்
மன்னா! ஆசையோ என்மீதில் உனக்குப் பாசமோ

3. மல்லிலகைப்பூ வளர்முல்லை அல்லிஅலரி பாணத்தாலே
கொல்லுறான் மதன் வெல்லுறான்

4. காமன் கணைகள் பட்டு மோகம் பெருகுதுன்மேல்
பாருமே நீ இத்தருணம் சேருமே

**மோகினி கந்தார்த்தம்**

வந்தணைந்தாலென்னை ஆகாதோ சுவாமி
ஒருவார்த்தை சொன்னாலும் போதாதோ என்துரையே
இந்த வாதுகள் செய்யலாகுமோ எந்தன் மன்னா
நீர் அணையாமல் போனாலும் உன்னை நான் விடுவேனோ நாதா

**தரு ஏகதாளம்**

1. வாது சேர்புஜ மந்தரியே எழில் வாரேனென்றிடும்
சூரரை வென்றிடும் மதி மயங்குது மையல் பெருகுது
மாறன் கணைப்பட்டு ஆசை வளருது (வாது)

2. மோகம்மாகினேன் துரையே மோகம்மாகினேன்

**சுருள்**

மோகமாகித் தாகம் தீர்த்து என்னைச் சேர்ந்து பின்னப்போவீர்

3. கொங்கை குடங்களும் மீறுதே, கொடு, கோவைச் செய்வாயும்
ஊறுதே

**சுருள்**

அங்கம் துடிக்குது ஆசை வளருது, அருள் தனிலே
அமுதும் சோருது (மோகமாகினேன் துரையே)

4. கை வளையல் சோருதே கொடுங் காமலக்கினம் மீறுதே

**சுருள்**

கண்ணடைத்திடும் மோகம் மயங்கிடும் உடம்பு நொந்திடும் (மோக)

### மோகினி கந்தார்த்தம்

*ஆ... ஆ... நீ அட்டி செய்தாலாகாதே எந்தன் மன்னா*
*ஆருயிர் போனாலும் மீளாதே என் துரையே*
*அங்கமெல்லாம் தனலாய் எரியுதே என் சுவாமி*
*அடரொழிசி போகுதே என் துரையே*

### மோகினி பாட்டு (அடதாளம்)

*சற்று என் முகம் பார்த்து... நீ பேசாயோ மன்னா*
*உன் தவசுக்கு இது நல்ல... வாசமோ துரையே*

2. *மருவ சமயங்கிட்ட... நீ வாராயோ மன்னா*
   *மதன காமப் பாணத்தைத் தீராயோ சுவாமி*

3. *எப்போ சேருவீர் என்று நாடுதே மன்னா*
   *சுருள், என் கண்ணும் மேலாடுதே என் சுவாமிக்கு*
   *இடைகளும் துவண்டாடுதே*

4. *குத்து ஸ்தனங்கள் இரண்டும் வெம்புதே மன்னா*
   *என் கோவைச் செவ்வாய்களும் ஊறுதே துரையே*

5. *வலிய வந்தேன் என்னைச் சேராயோ மன்னா*
   *மதன காமப் பாணத்தைத் தீராயோ சுவாமி*

6. *என்ன செய்வோம் என்று நாடுதே மனம்*
   *எப்போ எப்போவென்று வாடுதே முகம்*

சுருள்

*என் கண்ணும் மேலாடுதே என் சுவாமிக்கு*
*இடைகளும் துவண்டாடுதே.*

### மோகினி தீபதை

*பச்சையின் வடிவைக் கண்டு பார்த்தீபாரிஷியே, இப்போ உன்*
*மச்சையைக் கண்டெனக்கு மயங்குதே காமபாணம்*
*அச்சையைத் தீர்த்து நீரும் அலர்ந்து கை கலந்து சேர்ந்து*
*இச்சையைத் தீர்த்து நீரும், இருந்துபோம் பிராணநாதா...*

### மோகினி வசனம்

வாரும்மையா என் பிராணநாதா நீர் வருவீர்ரென நான் இத்தனை நாளாய், இந்தக் கானகத்தில் காத்துக் கொண்டிருந்தேன் நீ என்னை அணையாமல் போனால் நான் உன்னை விடுவதில்லை மன்னா.

### மோகினி பாட்டு

1. *வருவீர் வருவீர் என்று வழிபார்த்து நானிருந்தேன்*
   *ஒ... அர்ச்சுனா ஒ... பார்த்தீபா*
   *நீர் எப்போ வருவீரென்று இந்த வழிகாத்து நானிருந்தேன்*
   *ஒ... அர்ச்சுனா ஒ... பார்த்தீபா*

2. *மாமன் மகன் வாரானென்று மகிழ்ச்சியாய் நானிருந்தேன்*
   *ஒ ... அர்ச்சுனா ஒ... பார்த்தீபா*

3. *அத்தை மகன் வாரானென்று ஆசையாய் நானிருந்தேன்*
   *ஒ.... அர்ச்சுனா ஒ... பார்த்தீபா...*

### மோகினி தீபதை

*தவமுனி ரிஷியைக் கண்டு ... தையல் மோகினியாள் தானும்*
*மௌனமாய் இருக்கக் கண்டு ... வாய்திறந்தேதுரைப்பார்.*

### மோகினி வசனம்

அல்லடி சேடிமார்களா! இவரை எருமாடு மிதித்துவிட்டதா எருமாடு மிதித்துவிட்டதுபோல் காண்கிறதடி சேடிமார்களா... உலகத்தில் ஆண் பிள்ளைகள் தான் பெண் பிள்ளைகளை வசம் செய்து கொள்வார்கள். இவரை நாமே வசப்படுத்தினாலும் இவர் வாயைத் திறந்து பேசுவதற்கும் கடினமாய் இருக்கிறதே. இவர் பெண்ணாய் இருப்பாரா அல்லது ஆணாய் இருப்பாரா தோழமாரே

### அர்ச்சுனன் பொது வசனம்

ஆனால் கேட்டீரோ ராஜ நந்தனா! இவ்வாறாகத் தண்டகாவனத்தில் அர்ச்சுனன் செல்லும் தருணத்திலே கண்ணபரமாத்மா ஆனவர் மாயமாய் மோகினி உருவங் கொண்டு

அர்ச்சுனன் முன் வந்து கூத்தாடும்பொழுது அர்ச்சுனன் ஏதென்று பேசத் தொடங்கினானாம்.

**அர்ச்சுனன் பாட்டு, ஆதி தாளம் (இருவருக்கும்)**

1. *ஆரம்மா இவ்வனத்தில் அரிய தவசு தன்னை*
   *நீ போராடி நின்று கொண்டு பேசிக் கொல்கிறாய் தாயே...*

**மோகினிப்பாட்டு**

*பேசினால் என்னமாச்சு பெண்கள் மேல் உந்தனுக்கு*
*ஆசை இல்லாதவரென்று அறிய வந்தேனே சுவாமி*

**அர்ச்சுனன் பாட்டு**

2. *என்னை அறிந்தாலென்ன தாயே அறிாமல் போனாலென்ன*
   *அவரவர் நேம திஷ்டி அவரவர்க்கல்லவோ தாயே*

**மோ. பாட்டு**

*ஆகட்டும் நல்லதாச்சி அறியாமல் வந்தேனிங்கே*
*போகட்டுமா இருக்கட்டுமா புகல்வீரையா சுவாமி*

**அர். பாட்டு**

3. *நல்லவர்க் கடையாளம் சொல்லாமல் போகலாமே*
   *வலியாய் வந்தனையிங்கே நான் வரவழைத்தேனே தாயே*

**மோகினி**

*வலியாய் வந்தாலென்ன குலத்திலீனமோ மன்னா*
*மலியாய் வந்தேனுந்தன் மனதை அறிய சுவாமி*

**அர்ச்சுனன்**

4. *எட்டாத கனியின்மேல் இச்சைப் பட்டால் வருமோ*
   *என்னை முட்டாதே வழிவிடம்மா மோகினியாளே தாயே*

**மோகினி**

*என்ன சொன்னாலும் இப்போ உன்னை விடுவதில்லை*
*சஞ்யாசி என்று பாரேன் தழுவி அணைவேன் சுவாமி*

**அர்ச்சுனன்**

*தழுவினால் உன்னை இப்போ தரித்துப் போடுவேன் துண்டாய்*
*பழிவரும் என்று சொல்லி பார்க்கிறேன் அம்மாத்தாயே*

**அர்ச்சுனன் பொது வசனம்**

ஆனால் கேட்டீரோ ராஜநந்தனா, அய்யனான அர்ச்சுனன் மோகினி வனத்திலே கால்வைத்த மாத்திரத்திலே பல்லாயிரக் கோடி அண்டத்தைத் தனது குஸ்டியின் இடமாக வைத்துக் காத்தருளிய எம்பெருமான் ஏகவர்ணன், நமோநாராயிண மூர்த்தியனாவர் அர்ச்சுனனுக்கு பெண்ணினுடைய ஆசை இருக்கிறதோ இல்லையோவென்று அர்ச்சுனன் முன்னே வந்து கூத்தாடி நாதாவென்றும், மன்னாவென்றும் என் காமக் குரோதத்தை, மோக மச்சரத்தைத் தீரும் என்றும் கெஞ்சிக் கேட்க அப்போது அய்யனான அர்ச்சுனன் தனது அண்ணாவாகிய தருமராஜன் கொடுத்த நீதி வாக்கியப் பிரகாரமே எத்தனையோ உவமானங்களைச் சொன்னபோதும் கேளாமல் மேல் விழுந்து தழுவுவேன் என்று சொல்ல அப்போது அய்யனான அர்ச்சுனனுக்குக் கோவமானது மிகந்து காண்டீபத்தால் அடிக்க ஓட, அப்போது அந்தப் பெண்கள் மாயமாகிவிட, இரண்டாவது ராமராட்சுதன் வனத்தில் காலை வைத்தானாம் விஜயன். அப்போது அண்டமளாவிற்கும் ஒரே சரியாக ராமராட்சுதன் ஏதென்று தர்பார்.

## இராமராட்சுதன் வனம்

**ராமராட்சுதன் வருகிற விருத்தம்**

*உலகமெல்லாம் நடுநெடுங்க வந்த தீரன்*
*உம்பர் முனிவானவரை அடக்கும் சூரன்*
*கலங்கமில்லா ஆயர் குலந்தன்னில் வந்தோன்*
*கத்தி வாள் ஈட்டியுடன் தண்டும் கொண்டோன்*
*அலகை என்னும் பேய் பிசாசி பூதம் கணங்கள் சூழ*
*அம்மன் என்ற காளியும் கூட*
*துலங்கிடவே தூதர் இருப்பாலில் சூழ*
*துரிதமுடன் ராமராட்சதன் வருகின்றேனே*

### ராம. பாட்டு

1. அண்டாண்டும் கிடீல் கீடில்லென
அகில புவனமும் படீல் படீல்லென
மண்டல விண்டல கண்டு நடுங்கிட
மகாவீர தீரன் நானே மகாசூரதீரன்னானே

2. அசூரருக்கும் இறைவன்
அண்டாண்டும் மலர செய்திடும் மதிபன்
அரி அய்யன் நான்முகன் அமரர் பலர்போர்களும்
அறிந்தால் எந்தன் பெயர் அங்கந்துடிக்கச் செய்யும்

3. திக்கெட்டு திசைகளில் தீரன் எனதுபெயர்
தினமும் துதித்துக் கொண்டாடுவார் என்னை (தின)

4. தேவர் மூவர்களும் தெரிந்தால் எந்தன் பெயர்
தண்டம் புரிந்தோடிடுவார் எனைக் கண்டு (தண்டம்)

5. ஈரேழு புவனத்தில் எவர் வந்து எதிர்த்தாலும்
சிதைத்துச் சித்திரவதை வதைத்து எறிவேன் இப்பொழுதே

6. கல்மலை போலவே காலன் வந்தெதிர்த்தாலும்
கசக்கிப் புழிந்திடுவேன் அவரை நசக்கிப் புழிந்திடுவேன்

7. பெருந்த கீரிதன்னைப் பிடுங்கி எறியும் தீரன்
பிரசன்டன் கொலுவானேன் அதிபல தீரன் கொலுவானேன்

### பாட்டு வேறு தரு

1. கதம்பி உதம்பி எழுந்து கொண்டான்
கல்மலைகளைப் பிடுங்கிக் கொண்டான்

2. வெடுத்தப் பல்லைக் கடித்துக் கொண்டான்
வில்லாலம்பைப்வ பூட்டிக் கொண்டான்

3. கிட்டி விழும் பூமிதேவி கிடுகிடென்று தளானதிர
அண்டகுளம் தன்னை தாண்டி வருகிறான் ராமராட்சுதன்

### ராமராட்சுதன் வேறு தரு

*1. ஆங்காத்தடிக்குது பெங்காத்தடிக்குது*
*ஆரடா பேரவன் மானிடவா*

*2. பூங்காவனத்தில் வாங்காதிருக்கும்*
*பூதமடா கன வேதமடா*

*3. ஆங்காரத்துடன் வருகிறவன்*
*யார்யார் என்பேர் கூர் ... கூர் .. கூர்...*

*4. சிங்கார வனத்தில் வந்தவன் யார்*
*சிதைப்பேன் வதைப்பேன் நில் நில் நில்*

### ராமராட்சுதன் தீபதை

*ஆரடா மனைவி தன்னை அடவியில் விட்டுப் போறாய்*
*போரவன் நில்லாயுன்னைப் பொடிப் பொடியாகச் செய்வேன்*
*கூரடா உந்தன் பெயரை, கொல்லாமல் விடுவதில்லை*
*நேரிட்டு வில்வளைத்து எதிரில் நின்று மறித்துக் கொண்டான்.*

### வசனம்

அடே சன்னாசி பைலே, நீயோ என்னுடைய மனைவி அதிக அழகாய் இருக்கிறாளென்று அவளை அதிக அலாகுலம் செய்துவிட்டு ஒட்டமாய் ஒடுகிறாய் நில்லுடா நில்.

### அர். வசனம்

வாரும் பிள்ளையாய் ராச்சுதா உன் மனைவியை நான் தாயென்றும், தங்கையென்றும் பாவித்து பேசி வந்தேனே தவிர வேறொன்றும் செய்யவில்லை பிள்ளாய் ராச்சுதா.

### ராட்சுதன் வசனம்

*வாராய் பெண்ணே மோகினி உன் மேனியெல்லாம் கலைந்து*
*வசீகரமாகிய உன் முகாரவிந்தம் வாடி இருக்கும் காரணம் யாது*
*சீக்கிரம் தெரிவிப்பாய் பெண்ணே கண்மணி*

### மோகினி பொய் ஜோடிப்பு (ஏகதாளம்)

*1. ஆசை கொண்ட பெண்ணே என்று அவரும்*
*எந்தன் அருகில் வந்து*
*பாசமுடன் பரியாசம் பண்ணினானே மன்னா*

*2. இச்சை கொண்ட பெண்ணே என்று*
*இவரும் எந்தன் அருகில் வந்து*
*லச்சை மிகச் செய்தானய்யா .. நிஸ்டூரமாய் பாவி*

*3. வேள்வி செய்யப் போறேனென்று (இவன்)*
*வெறும் பேசி பேசிக்கொண்டு*
*பாலு சொக்குப் பொடி வித்தையும் பண்ணினானே மன்னா*

*4. குடிகெடுத்த கள்ளனிவன் குமரிகள்*
*சாபத்தால் போவான்*
*அடியடித்தால் இவனும் பாவி அடங்கலையோ மன்னா*

### வசனம்

சுவாமி நாயகா இந்த சன்னாசி செய்த அக்கிரமத்தை நான் என்னவென்று சொல்லுவேன் நாதா.

### ராச்சுதன் வசனம்

அடே சன்னாசி பைலே நீங்கள் மேட்டிலிருந்தால் அம்மாத்தாயே என்பதும், பள்ளத்தில் இருந்தால் வாடி போடி என்பதும், உங்கள் சன்னாசி பழக்கம் எனக்குத் தெரியும் நில்லுடா நில்.

### அர்ச்சுனன் தீபதை

*வெம்புவாள் விழுவாள் பொய்யே மேல்விழுந் தழுவாள் பொய்யே*
*தம்பலம் தின்பேனென்பாள் பொய்யே கூடவே சாகுறேன்*
*என்பாள் பொய்யே*
*அம்பினும் கொடிய கண்ணால் ஆயிரம் சிந்தையாரை*
*நம்பின பேர்களெல்லாம் நாய்போலத் தயங்குவாரே*

### அர்ச்சுனன் வசனம்

ஆனால் கேளடா மட்டி ராச்சுதா பெண்கள் வெம்புவார் பொய்யே மேலே விழுந்து அழுவாள் பொய்யே தம்பலத்தைத் தின்பேனென்பாள் பொய்யே நீ மடிந்தால் நானும் மடிகுறேன் என்பாள் பொய்யே அந்த அம்பினும் கொடியோளை நம்பினபேர்களெல்லாம் நடுத்தெருவில் நாயானது எவ்வாறாக நின்று நாக்கைத் தொங்கவிட்டுக் கிடந்து இருக்கிறதோ அவ்வாறாகத்தான் உன் கதி ராச்சுதா.

### அர்ச்சுனன் பாட்டு – (ஜம்பை தாளம்)

### தாம் ததிகின

1. *உன் பெஞ்சாதி நீலியோடா*
   *நீ பிழைப்போக வந்தாயோடி*

2. *அடா உன்னுடைய மனைவியாலே*
   *உன் பொன்னுயிரைப் போக்க வேண்டாம்*

3. *கன்னிமார்கள் பேச்சைக் கேட்டு*
   *உலகில் கனங் குலைந்தோர் கோடியுண்டு*

4. *ஆணாலேதான் கெட்டபேர்கள்*
   *ஆருமில்லை வையகத்தில்*

5. *பெண்ணாலேதான் கெட்ட பேர்கள்*
   *பெருங்கோடியுண்டு வையகத்தில்*

6. *வேண்டாமப்பா ராச்சுதனே*
   *உன் வாழ்மனைக்குப் போய்ச் சேராயோ*

### அர்ச்சுனன் வசனம்

அடே ராச்சுதா, அவளோ பொம்மநாட்டி அவள் பேச்சைக் கேட்டவன் கம்மனாட்டி, அவள் பேச்சைக் கேட்டு உன் பொன்னான உயிரைப் போக்கிக் கொள்ள வேண்டாம், உன்னுடைய அரண்மனைக்குப் போய்ச் சேருமப்பா.

### அர்ச்சுனன் பாட்டு (அடதாளம்)

1. *ஆலகால விசத்தையும் நம்பலாம்*
*ஆற்றையும் பெருங் காற்றையும் நம்பலாம்*

2. *கோலமாமதை யானையையும் நம்பலாம்*
*கொல்லவரும் வேங்கை புலியையும் நம்பலாம்*

3. *கால நார் விடுந் தூதரை நம்பலாம்*
*கள்ளர் வேடர் மறவரை நம்பலாம்*

4. *சேலை கட்டிய மாதரை நம்பினால்*
*தெருவில் நின்று மயங்கித் திரிவாரோ*

### வசனம்

ஆனால் கேளும் பிள்ளாய் ராச்சுதா பெண்களுடைய வார்த்தையைக் கேட்டுப் பூமண்டலத்தில் எத்தனையோ ராஜாக்களெல்லாம் கெட்டு மாண்டு மடிந்திருக்கிறார்கள். உன் பெண்ஜாதியை அழைத்து அவளது நிலை கண்ணாடி இருக்கிறது என்னுடைய முகம் இருக்கிறது. ஒன்றுக்கு ஒன்று நேருக்கு நேராய் விசாரித்துப் பாரும் பிள்ளாய் ராச்சுதா.

### ராச்சுதன் வசனம்

வாராய் பெண்ணே மோகினி, சன்னாசி சொல்வதெல்லாம் மனுநீதியாய்த் தெரிகிறது, நீ சொல்வதெல்லாம் பொய்யாய்த் தெரிகிறது. அவன் முகம் இருக்கிறது. உன்னுடைய நிலைக் கண்ணாடி இருக்கிறது. அதை வைத்துக் கொண்டு அவன் முன்னே நேராய்ச் சொல்லுவாய் பெண்ணே மோகினி.

### மோகினிப்பாட்டு ஏகதாளம்

1. *கண்ணாளரே பிராண நாதா கன்னியாளும் சொல்வேன் கேளும்*
*புண்ணியரே பொய்யில்லாமல் புகல்வேன் கேள் மன்னா*

2. *கச்ச முலைதன்னைக் கிள்ளிக் கன்னத்திலே முத்தமிட்டுப்*
*பாசமுடன் பரிபாசம் பண்ணினானே மன்னா*

3. குடிகெடுத்த கள்ளனிவன் கொமுரிகள் சாபத்தால் போவான்
அடி அடித்தால் இவனும் பாவி அடங்கலையோ மன்னா

4. வேள்ளி செய்யப் போறேனென்று வெறும் பேசி பேசிக்கொண்டு
பாலு சொக்குப் பொடி வித்தையும் பண்ணினானே மன்னா

5. என் இடத்துயல் தனைநீக்கி இருகரத்தால் எனைத் தூக்கிச்
செடிதனிலே ஆலிங்கனம் செய்தானையா சாமி

**மோகினி தீபதை**

*என்னிடக் கணவாகேளும் இந்த தோர் ஜங்கமன் தான்*
*மன்னிய மடிபிடித்துக் கன்னியும் மறித்துமே போகாமல்தான்*
*என்னையே பிடித்து முத்தம் யேந்திழைக்குக் கொடுத்தான் சுவாமி*
*அவன் தன்னையே போகுட்டாமல் தலைதன்னை*
*அறுத்துவாராய்*

**வசனம்**

வாருமய்யா சுவாமி இந்த சன்னாசி என்னை இப்பேர் கொத்த பங்கமெல்லாம் செய்துவிட்டு; பெரிய வல்லவன் போல் பேசுகிறான். அவன் சவுரியம் படைத்த ஆண்பிள்ளையாகவும், நீர் பெண்பிள்ளையாகவும் மதித்துப் பேசுகிறான். அவனை சும்மா விடலாமோ, அவன் தலையை என் முன்பாக அறுத்துக் கொண்டு வந்து வைத்தால்தான் நீர் எனக்குப் புருஷன் நான் உனக்கு மனைவி மன்னா.

**ராமராச்சுதன் வசனம்**

அடே சன்னாசி பைலே நீ சொல்வதெல்லாம் சுத்தப் பொய் என் பெண்ஜாதி சொல்வது நிலையான மெய், நீயோ சத்திரியனானால் சண்டைக்கு வரலாம் சூஸ்திரனானால் ஓடிப்போடா; அடே பிச்சக்காரப் பைலே

**அர்ச்சுனன் வசனம்**

ஆனால் கேட்டீரோ ராஜநந்தனா, இந்த ராச்சுதனுக்கு எத்தனையோ உவமானங்களைச் சொன்னபொழுதிலும் அதை அவன் கேளாமல், அவன் பெண்ஜாதி வார்த்தையைப் பெரியதாக எடுத்துக்

கொண்டு சத்திரியனானால் சண்டைக்கு வா சூத்திரனானால் ஓடிப்போடா என்று சொன்ன மாத்திரத்திலே, அய்யனான அர்ச்சுனன் தனது அண்ணாவாகிய தருமபுத்திரர் கொடுத்த சூடாமணி வாக்கியத்தை எடுத்து வாசித்துப் பார்த்தானாம். அதிலே புத்தின் மேல் படுத்திருந்தால் பாம்பென்று விட்டுவிடு மரத்தின் மேல் உட்கார்ந்திருந்தால் பச்சியென்று விட்டுவிடு, புல்லை மேய்ந்து கொண்டிருந்தால் காராம்பசுவென்று விட்டுவிடு. கையெடுத்து வந்தனம் புரிந்தோரைப் பிள்ளையென்று விட்டுவிடு. எதிர்த்து வந்தோரைக் கொன்றால் காராம்பசுவாகிலும் பாவம் இல்லை என்று எழுதியிருந்ததாம் அந்த வாக்கியத்தில் அதைப் பார்த்ததும் அர்ச்சுனனுக்கு அவலரி கண்கள் செவலரி பூத்து, நீலமொழி கண்கள் நெருப்புத் தணலாகி வடாக்கினி மீறி, கோபாக்கினி மீறித் திடீரென்று ராச்சுதன் பேரில் சண்டைக்குப் போகும் விதம் எப்படி என்றால்,

**தர்க்கம் பாட்டு (தாளம் நொண்டிச் சிந்து)**

**அர்ச்சுனன்**

1. *தத்தினேம் தினதன்னா தினனா*
*தத்திமுத்த நித்த தனனாம் தனனா*
*ஒருவருக்கு ஒருவர் தானையா இந்த மன்னவர்கள்*
*யுத்தபோரு செய்கிறார்களாம் தந்தான தானம்.*

**சுருள்**

*ஓட ஓடவே தாக்குவேன் ஒரு கரத்தால் தூக்குவேன்*
*சாரை சாரையாய் வருகுது பாணம் கோடி கோடியாய்*

**ராமராச்சுதன்**

*மார்களோடு மார்கள் தாங்கியே இந்த மன்னவர்கள்*
*மல்லுபோரு செய்கிறாரையா தந்தான தானம்*

**அர்ச்சுனன்**

2. *அதற்கு நானும் அஞ்சேனென்றுமே தை அர்ச்சுனனாம்*
*அதட்டித் துடையைத் தட்டி நின்றானாம் தந்தான தானம்*

**ராம ராச்சுதன்**

*தோள்களோடு தோள்கள் தாங்கியே இந்த மன்னவர்கள்*
*தொடுத்துப் போரு செய்கிறாரையா தந்தான தானம்*

**அர்ச்சுனன்**

3. *அடா உனக்கு நானும் அஞ்சேனென்றுமே தை அர்ச்சுனனாம்*
*ஒடித் துடையைத் தட்டி நின்றானாம் தந்தானதானம்*

**ராமராச்சுதன்**

*கல்மலையைக் கையில் தாங்கியே தை ராச்சுதனும்*
*காளை விஜயன் மேலே எய்தானாம் தந்தான தானம்*

**அர்ச்சுனன்**

4. *அடா நீ விட்டதொரு கல்மலைகளைத் தை அர்ச்சுனனும்*
*சுட்டு பஸ்ப்பம் போலச் செய்தானாம் தந்தான தானம்*

**ராமராச்சுதன்**

*கதையால் உன்னைக்கதற வாட்டுவேன் அடடாப்பைலே*
*என்னைக் கண்டு பணிந்து ஓடிடுவாயே அடடாப்பைலே*

**அர்ச்சுனன்**

5. *வில்லாலுன்னைப் பல்லுடைப்பேனே அடடாப் பைலே*
*சொல்லாமலே ஓடிடுவாயே அடடாப்பைலே*

**அர்ச்சுனன் பொது வசனம்**

ஆனால் கேட்டீரோ ராஜநந்தனா ஐயனான அர்ச்சுனன் இரண்டாவது ராச்சுத வனத்திலே கால்வைத்த மாத்திரத்தில் அண்டமளாவிற்கும் ராமராச்சுதனானவன் வந்து அவன் பெண்ஜாதி வார்த்தையைப் பெரியதாக எண்ணிச் சமர்புரிந்த ராச்சுதனை, அப்போது அர்ச்சுனன் உன்னைக் கர்ண்டீபத்திற்கே இரை கொடுப்பேன் என்று சொன்ன மாத்திரத்திலே ராச்சுதனானவன் மாயமாய் மறைந்துவிட, அப்போது அர்ச்சுனன் இது பூதமோ, வேதமோ, வேதாளமோ,பேயோ, பிசாசோ என்று தனது மனதிலே நினைத்துக் கொண்டு மூன்றாவது

வனமாகிய பிராமண வனத்திலே கால் வைத்தானாம் விஜயன். அர்ச்சுனனானவன் பிராமண வனத்திலே கால்வைத்த மாத்திரத்தில் கிருஷ்ணமூர்த்தியானவர், இவனை இரண்டு வனத்திலே சோதித்துப் பார்த்தும் முடியவில்லை, இப்பொழுது ஒரு பிராமணனாகச் சென்று சோதிக்க வேண்டுமென்று நினைத்துக்கொண்டு ஒரு முதிய பிராமணனாக கொலுவுக்கு வருகிற விதம் எப்படி என்றால்.

## பிராமணர் வனம்

### பிராமணர் தரு

*அரி ஓம் அரி நாராயணன் அச்சுதாநந்த கோவிந்தனே*
*அரிசி வேண்டும் – பருப்பு வேண்டும்*
*அதற்குத் தகுந்த – நெய்ப்பால் வேண்டும்*
*பிஞ்சி கத்தரி – காயும் வேண்டும்*
*பின்னுங் கொஞ்சம் நெய்ப்பால் வேண்டும்.*
*புதிய செட்டி பருப்பு வேண்டும் – பூசணிக்காய் குளம்புக்கு வேண்டும்.*

### வேறு பாட்டு

1. *அரி ஓம் அரி நாராயணன் அச்சுதாநந்த கோவிந்தனே*
*நான் அச்சுதன் ரூபம் மாறினேன் – பிராமணராய்*
*அர்ச்சுனன் முன்னே தோன்றினேன்*

2. *தொன்னூறு வயது சென்ற துவட்ட கிழவனைப் போல்*
*பன்னும் பூணூல் மார்பில் அசைய வேத பிராமணர்*
*பார்த்தீபன் முன்னே தோன்றினேன்*

3. *அவனின் மனதறிய நான் அச்சுதன் ரூபம் மாறி*
*அன்புடனே ஓடி வந்தேனே அவன் அருகே*
*ஆவலாகத் தேடி வாரேனே சந்தோசமாக*

### வசனம்

ஆனால் கேளடா சிசியா இப்பொழுது இந்த வழியினிடமாக ஐவர் தம்பி அர்ச்சுனன் ஜெகதீசனைக் கோரி தவம் புரியச் செல்லுகிறான்.

செல்லும் வழியில் யாராகிலும் பெண்கள் வந்து அவனோடு கூடினால் அவன் சேர்ந்து விடுவான் என்று முதல் வனத்தில் மோகினியாக வந்து சோதித்தேன் அவன் சேரவில்லை இரண்டாவது யாராகிலும் ராச்சுதாக்கள் வந்து சமர் புரிந்தால் பயந்து திரும்பி விடுவானென்று நினைத்து ஒரு ராமராச்சுதனாக உருவங்கொண்டு வந்து சமர்புரிந்து பார்த்தேன் அப்பொழுதும் அவன் பயப்படவில்லை. இப்பொழுது ஒரு பிராமணனாக வந்திருக்கிறேன். இப்பொழுதும் அவனைச் சோதித்துப் பார்க்க வேண்டும். நீ சீக்கிரமாக நடந்து ஓடிவருவாய் செல்லுவோம்.

**அர்ச்சுனன் தீபதை**

*அந்தணக் கோமவேதம் அறிந்த மாதவனே போற்றி*
*முந்தியே குலத்திற்கெல்லாம் முதல்வனே போற்றினேனே*
*நீர் எந்த ஊர் எந்த தேசம் எங்கிருந்து எங்கே போறாய்*
*விந்தையாய் இங்குவந்த மேன்மையை உரை செய்வீரே.....*

**அர்.வசனம்**

ஆனால் சரணம் சரணம் சுவாமி வேதப் பிராமணரே, பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் நான்கு வருணத்தினருக்கும் முதல் வருணமாகிய வேதப் பிராமணரே! நீர் எந்த ஊர், எந்த தேசம் எங்கேயிருந்து எங்கே போறாய்? இந்த ஆரணியமான கானகத்தில் வரவேண்டிய காரணம் யாது எனக்குச் சீக்கிரம் தெரிய உரைப்பாய் சுவாமி.

**பிராமணர் வசனம்**

ஆனால் அப்பா சந்யாசி, யானோ காஞ்சி வளநாடு, கன்னியாகுமரி தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து இப்போது சீர்காழி சிதம்பரம் போகுறேன், நீ யாரப்பா, உன் நாம தாயத்தை விளங்க உரைக்க வேண்டும்.

**அர்.தீபதை**

*பூவுலகத்திற்கதிபன் தர்மபுத்திரன் தம்பி நானே*
*வெள்ளை வாகனனை வேண்டி வரமது பெற நானும்*

*ஒப்பில்லா சிவனை வேண்டி உயர்தவம் செய்யப்போறேன்*
*அவரை நான் காண்தெப்போ என்னையனே உரைசெய்வீரே.*

**வசனம்**

**ஆனால் கேளும் சுவாமி பிராமணரே, யானோ இப்பூவுலகத்திற்கு அதிபதியாகிய தர்மபுத்திரன் தம்பியாகிய விஜய காண்டீபன், நானோ கைலாயமலை நோக்கிச்ள செல்லுகிறேன். அது எவ்வளவு தூரம் இருக்கிறது நீர் அதை எனக்குச் சொல்ல வேண்டும் பிராமணரே.**

**பிராமணர் வசனம்**

கேளும் பிள்ளாய் அர்ச்சுனா! நானும் கயிலாயம் போயிருந்தேன். என்னைப்போல் உன்னைப்போல் எத்தனையோ தவரிஷிகள் தவம் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்குக் கடவுள் பிரசன்னமாகவில்லை. அந்த தவரிஷிகள் மீது காக்கை மலமும்,குருவி மலமும், சரகுகள் மூடிக்கொண்டும் அவர்கள் மீது புற்றுகள் ஏறி மறைத்துக் கொண்டும், கண்ணொளி தவிர மற்ற உருவமெல்லாம் மறைத்துக் கொண்டு இருந்தன. அதை நான் பார்த்து நமக்கும் இந்த கதிதான் நேரிடும் என்று யான் சும்மா திரும்பி வந்துவிட்டேன் அர்ச்சுனா. அங்கே உனக்கும் அந்த கதிதான் நேரிடும் போக வேண்டாம் திரும்பும் அர்ச்சுனா.

**அர். தீபதை**

*பன்னூல் வேதியனே பாங்குடன் திரும்பும் என்றாய்*
*என்னிட காரியங்கள் ஈசனைக் கண்டப் போதே*
*நான் முன்வைத்த பாதந்தன்னைப் பின்வைக்கப் போறதில்லை*
*நீ சொன்ன சொல்லெனக்கு என் செவிகட்கு ஏற்குமோதான்.*

**அர்.வசனம்**

கேளடா மட்டிப் பிராமணா! நீயோ பிராமண வம்சமாகியும் உன் நெற்றியில் திரு நாமத்தைப் பார்த்ததால் உன்னை விட்டு விட்டேன். இல்லாவிடில் இதோ என் காண்டீபத்திற்கே உன்னை இரை கொடுத்திருப்பேன். இப்போது நீயே வந்த வழியை விட்டு வராத வழியைப் பார்த்து ஓடிப்போவாய் மட்டிப் பிராமணா.

### அர். பொது வசனம்

ஆனால் கேட்டீரோ ராஜநந்தனா! ஐயனான அர்ச்சுனனானவன் மூன்றாவது பிராமண வனத்திலே கால்வைத்த மாத்திரத்தில் யாரோவொரு கிழப் பிராமணனானவன் வந்து நான் கைலங்கிரிக்குச் சென்றிருந்தேன். ஜெகதீசன் யாருக்கும் வரம் கொடுக்கவில்லை. நீயேன் போகுறாய் திரும்பும் தம்பி என்று மறுத்துப் பேசினானாம். அதற்கு ஐயனான அர்ச்சுனனுக்கு அதிக கோபமானது பிறந்து காண்டீபத்தைக் காண்பித்த உடனே, அவன் மாயமாக மறைந்துவிட, இது வேதமோ, பூதமோ, பேயோ, பிசாசோ என்று தனது மனதிலே நினைத்துக் கொண்டு, நான்காவது ஸ்ரீமத் நாராயண வனத்தில் கால் வைத்தானாம் விஜயன். அர்ச்சுனனானவன் நான்காவது வனத்திலே கால்வைத்த மாத்திரத்தில் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியானவர் ஏதென்று தர்பார் நாடி வருகிற விதம் எப்படி என்றால்.

## நாராயணர் வனம்

### கிருஷ்ணசுவாமி விருத்தம்

*ஆதியில் திருமூர்த்தி ஒருவராகி*
*அண்டரண்டும் முண்ட திருமாலாகி*
*சோதியாம் சுடரொளி தீபமாகி*
*சூரருக்கு ஈய்ந்திடவே – அமிர்தமாகி*
*வாதியாம் சூரருக்கு சத்ருவாகி*
*வானவர்க்குப்பின் பலராமராகி*
*பாதிமதி அணிந்திட்ட பாண்டவாளைக் காண*
*பரிந்துமே மகாவிஷ்ணு கொலுவை நாடி வருகின்றேனே*

### கிரு. வசனம்

அதோவென்ன வைகுந்தமே கோயிலாய் வீற்றிருக்கின்ற ஸ்ரீ கிருஷ்ண பகவான் தர்பார் நாடி வருகும் விதம் எப்படி என்றால்.

### கிரு-தரு (ரூபகம்)

1. முச்சுடரில் ஒன்றாய் வந்த சச்சுதாநந்த கோவிந்தனே
அச்சுதன் கொலுவதாகினார்..... திருமூலரில் ஒருவர்
பச்சை வைகுந்தம் வந்தேனே

2. துஷ்ட சங்கர மூர்த்தி நானே துளப்ப மார்பன்
பச்சி வாகன மேர்வோன் தானே

3. அஷ்டலட்சுமி மார்பன் அனந்த சேஷயனன்
இஷ்டம் போல் இரணியனைத் தூக்கியே கிழித்தெறிந்தேன்

சுருள்.

இருகரம் தன்னிலே சக்கரம் துலங்க
அருமறையோர்களும் வேதமும் செய்ய

4. ஆயிரத்தெட் டண்ட மாண்ட – துங்கன் இரணியனை
அகோரம் கொண்டுடல் கிழித்த சிங்கன்

5. பாயாகப் பூமி தன்னைப் பறித்த கண்டகனை – நான்
பன்றியுமானேன் – அவன் உயிரைக் கொன்றிட லானேன்

சுருள்.

பாலப் பிரகலாதனுக்கே வரம் சாலோக பதவியும்
சாயுச்யும் அளித்தேன்.

### அர். தரு

1. அச்சுதனே மாயவனே ராம ராகவா என்னை
ஆதரிக்க வேணுமென்னை வீரராகவா

2. பச்சைநிற மேனியனே ராம ராகவா
பாரளந்த பத்மநாபா வீர ராகவா

3. ஆலிலை மீதிலமர்ந்த அதியமானே – உன்
அன்பன் பாதம் பணிந்தேன்.... நீல வண்ணனே

*4. காளிங்கன் மீதாடிய கமலக்கண்ணனே*
*கோபியர் லீலா வினோத – கொண்டல் வண்ணனே*

**கிரு. வசனம்**

அதோவென்ன மைத்துனா யாது காரணமாய் இவ்வேடம் பூண்டு போகும் காரியத்தைத் தெரிவிப்பாய் மைத்துனா

**அர். வசனம்**

சுவாமி பகவானே, யானோ என் பகையாளியாகிய துரியோதனாதிகளை ஜெயிக்க கைலாய மலையை நாடி ஜெகதீசனைக் கோரி தவம்புரிந்து பாசு பதாஸ்திரக்கணைகளைப் பெற்று வரச் செல்லுகிறேன். இப்பொழுது நீயே எனக்குப் பின் துணையாக இருந்து பாதுகாக்கும்படி வேண்டிக் கொள்கிறேன் சுவாமி ஆண்டவனே!

**கிரு. வசனம்**

ஓய் மைத்துனா இப்போது நீ எந்த வனம் கடந்து வந்தாய் எனக்குத் தெரியச் சொல்லுவாய் அர்ச்சுனா

**அர்.வசனம்**

சுவாமி யானோ எனதண்ணாவாகிய தர்மபுத்திரன் இடத்திலும், பீமராஜனிடத்திலும், மற்ற சகோதரரிடத்திலும், ஆதிசக்தி துரோபதையிடத்திலும் விடையைப் பெற்றுக்கொண்டு ஈசன்ய மூலையை நோக்கி வந்தது முதல் மோகினி வனத்தில் கால் வைத்தேன். அப்பொழுது இந்தப் பிரபஞ்சமென்னும் உலகத்தில் இல்லாத அழகைப் பொருந்திய மோகினியானவள் வந்து என்னுடன் சேருவதற்குக் கூத்தாடினபொழுது யானோ எனது காண்டீபத்தைக் காண்பித்த உடனே மாயமாய் மறைந்துவிட, இது பூதமோ, பேயோ, பிசாசோ என்று எனது மனதிலே நினைத்துக் கொண்டு இரண்டாவது ராச்சுதவனத்தில் கால்வைத்தேன் அப்பொழுது அண்டமளாவிற்கும் ஒரே சராசரியாக ராமராச்சுதனானவன் வந்து, அவன் பெஞ்சாதி வார்த்தையைக் கேட்டு என்னோடு சமர்புரிந்தான். அப்பொழுது யானோ எனது காண்டீபத்தை எடுத்து ஓடினபொழுது அவன் மாயமாக மறைந்துவிட இது வேதமோ,

பூதமோ, பேயோ, பிசாசோ வென்று எனது மனதிலே நினைத்துக் கொண்டு, மூன்றாவது பிராமண வனத்தில் காலை வைத்தேன், அப்பொழுது ஒரு கிழப்பிராமணனானவன் வந்து, யானோ கைலங்கிரிக்கு தவம் புரியச் சென்றிருந்தேன் ஜெகதீசன் அங்கு யாருக்கும் வரம் கொடுக்கவில்லை என்று பேசி, என்னைத் திரும்பும்படியாகச் சொன்னான்.

அப்பொழுது யானோ அவன் மீது அதிக கோவமுடன் பேசிய உடனே, அவன் மாயமாய் மறைந்துவிட்டான். அப்பொழுது யானோ இது பூதமோ, வேதமோ என்று எனது மனதிலே நினைத்துக்கொண்டு, நான்காவது உன் பாதாரவிந்த கமலங்களைக் கண்டு ஜல்ம சாபல்யம் ஆனேன் பகவானே.

### கிரு.தரு (ஆதிதாளம்)

*1. முதலாம் வனந்தனிலே நான் மோகினியாக வந்தேன்*
*வந்தேன் உன் மனதைக் கண்டேன்*

*2. இரண்டாம் வனந்தனிலே ராமராச்சுதனாக வந்தேன்*
*உன் வலியைக் கண்டேன்*

*3. மூன்றாம் வனந்தனிலே பிராமணனாக வந்தேன்*
*உன் உறுதியைக் கண்டேன்.*

*4. நான்காம் வனந்தனிலே நான் சுயரூபமாக வந்தேன்*
*உன் செயலைக் கண்டேன்*

### கிரு. வசனம்

ஒய் மைத்துனா! இன்னும் வனாந்திரத்தில் எத்தனையோ இடுக்கண் நேரிடும் நீயாதொன்றுக்கும் அஞ்ச வேண்டாம். நானும் உனது பின் துணையாக வருகிறேன், நீ சந்தோஷமாய்ப் போய்வாரும் அர்ச்சுனா

### அர். தீபதை

*விஷ்ணுவின் விடையும் பெற்று விஜயனும் நடக்கும்போது*
*கொடியதாய் வழிப்பிடித்து குணசீலன் நடக்கும்போது*

*பிடியதாய் வேங்கை கன்னி பலமுடன் ஓடிவந்து*
*ஓரடி போகுட்டாமல் அதட்டியே மறித்துக் கொண்டான்.*

**வசனம்**

ஆனால் கேட்டீரோ ராஜநந்தனா அய்யனான அர்ச்சுனன் நான்காவது வனத்தில் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியிடம் விடையைப் பெற்றுக்கொண்டு ஐந்தாவது வேங்கை கன்னி வனத்தில் கால் வைத்தானாம் விஜயன். அப்பொழுது வேங்கை கன்னியானவள் அர்ச்சுனனைக் கண்டு ஓடி வந்து மறித்து நின்று கொண்டாளாம். அப்பொழுது அர்ச்சுனன் அவளுடன் ஏதென்று பேசுவது எப்படி என்றால்.

## வேங்கைக் கன்னி வனம்

**அர். தீபதை**

*வாராய் நீ வேங்கையாளே நான் மாதவம் புரியப் போறேன்*
*தப்பொன்று மெய்பொன்றுடன் ஒப்புடன் பிழை பொறுப்பேன்*
*நீ வணங்கியே வந்தாயானால் வரங்களைப் பெற்று வாரேன்*
*மீறியே வந்தாயானால் என் வில்லுக்கே இரை கொடுப்பேன்.*

**அர். வசனம்**

ஆனால் வாரும் பெண்ணே வேங்கை கன்னியாளே, என்னுடன் நீ சமர் செய்ய வந்தவளா அல்லது சமாதானத்திற்கு வந்தவளா? சண்டைக்கு வந்தவளானால் இதோ என் காண்டீபத்திற்கே இரை கொடுப்பேன். அல்லது சமாதானத்திற்கு வந்தவளானால் உன் சாபம் நீங்கும்படி உனக்கு அந்த ஜெகதீசனிடத்தில் வரம் வாங்கி வருகிறேன். சீக்கிரம் சொல்

**வேங்கை கன்னி**

ஆனால் அர்ச்சுனா நானோ உன்னோடு சண்டைக்கு வரவில்லை. சமாதானத்திற்குத் தான் வந்தேன். இப்பொழுது ஜெகதீசனிடம் சென்று என்னுடைய சாபம் நீங்கும்படியாக எனக்கு ஒரு வரம் வாங்கி வாருமப்பா அர்ச்சுனா, நான் சென்று வருகிறேன்.

### அர். தீபதை

*கொலை செய்யும் வேங்கையிடம் குணமுடன் விடையும் பெற்று*
*மலைகளும் நதிகளுமுள்ள அவ்வனத்தைக் கடந்து*
*மலைப்பாம்பு தன்னைக் காலால் மன்னவனும் மிதிக்கும்போது*
*நலம் பதி சாபம் நீங்கி நின்றானே வேடனாக*

## மலையடி வேடுவன் வனம்

### அர். வசனம்

ஆனால் பிள்ளாய் வேடா நீ இத்தனை நாளாய் இந்தக் கானகத்தில் மலைப் பாம்பாய் இருந்த காரணம் யாது? இப்போது என்னுடைய பாதம் பட்ட மாத்திரத்தில் வேடனான காரணம் யாது அப்பா?

### வேடன் வசனம்

ஆனால் கேளும் சுவாமி அர்ச்சுன மகாராஜரே! நானோ இந்த வனத்திலே ஒரு நாள் வேட்டையாட வந்தேன். அத்தருணத்தில் பார்வதியும் பரமசிவனும் இரண்டு அன்னப் பச்சியாக உருவங்கொண்டு இந்தப் புன்னை மரத்தின் மீது உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். நானதை அறியாமல் என்னுடைய வலையை வீசினேன். அப்போழுது அந்தப் பச்சிகள் அந்த வலையில் அகப்பட்டுக் கீழே வந்து விழுந்து என்னைப் பார்த்து, அடே வேடா நாங்களிருப்பதை நீ அறியாமல் உன் வலையை வீசி எங்களைக் கீழே தள்ளினதால் நீயோ இன்று முதல் இந்த மலையில் ஒரு மலைப்பாம்பாய்ப் போகக் கடவதென்று சாபம் அளித்தார்.

அப்போது நான் அவர்களைப் பார்த்து, சுவாமி பரமக் கடவுளே இச்சாபம் எனக்கு எப்போது நீங்கி நான் என் உருவைக் கொள்ளுவேன் என்று கேட்டேன். அதற்கு அவர்கள் ஆனால் வேடா இந்தப் பூலோகத்து அரசனான தர்மர் தம்பி விஜய காண்டீபன் கைலங்கிரியை நோக்கி வருவான். அப்பொழுது அவன் பாதாரவிந்தம் பட்ட மாத்திரத்திலே உன் சாபம் விமோச்சனம் ஆகும் என்று சொன்னார். ஆதலால் இப்பொழுது உன் பாதம் பட்ட உடன் பழைய வேடனானேன் சுவாமி.

அர். வசனம்

ஆனால் பிள்ளாய் வேடா நீயோ இப்பொழுது சென்று உன் மனைவி மக்களை கவனிப்பாய் நான் ஜெகதீசனிடம் சென்று வருகிறேன் வேடா!

## ஏலக்கன்னி வனம்

*வேடுவன் தன்னை நிறுத்தி விஜயனும் நடக்கும்போது*
*காடு செடி மலைகள் கனிவாரையுள் புகுந்து*
*ஆடலும் பாடலும் மிக்க அன்புடன் கொலுவிருக்க*
*எழில்குழலான வஞ்சி ஏலக்கன்னி வனம் புகுந்தான்.*

அர்ச்சுனன் வசனம்

ஆனால் கேட்டீரோ ராஜ நந்தனா! ஐயனான அர்ச்சுனன் ஆறாவது மலையடி வேடுவனிடத்தில் விடையைப் பெற்றுக்கொண்டு, ஏழாவது ஏலக்கன்னி வனத்தில் கால் வைத்தானாம் விஜயன். அந்த ஏலக்கன்னி வனத்தில் கால் வைத்த உடனே ஏலப்பாட்டானது பாடத் தொடங்கினானாம்.

அர். தரு (அடதாளம்)

1. *பாதக்குரடு பளீர் பளீரென்றோசை பாடவே தான் – அரோகரா*
   *பார்த்தீபன் அர்ச்சுனன் பரயர் பாதம்தேடி போகவேதான்,*
2. *இடையில் கட்டின மணி சிவனேயென்று சத்தம் போடவேதான்,*
   *இணையில்லா அர்ச்சுனன் ஈசன்பாதம் தேடிப் போகவேதான்,*
3. *கையில் பிடித்தவில் கர்த்தனேயென்று... கர்ஜிக்கவே தான்,*
   *காண்டீபன் அர்ச்சுனன் கர்த்தன் பாதம் தேடிப் போகவேதான்,*
4. ***இணையில்லாப் பர்குணன் ஏகநாதனைக் காண ஏகவேதான்,***
   ***நின்றுமே அர்ச்சுனன் நிமலன் பாதம் தேடிப் போகவேதான்,***
5. *வில்வாங்கி அர்ச்சுனன் வெண்ணீரணிந்தோனை*
   *காணவேதான் ,*

*விஜய பானியோனும் வெள்ளிங்கிரியை நோக்கி யேகவேதான்,*

6. *கோதை புலித்தோலும் செஞ்சடை மேல் விரிந்தமரவேதான்,*

*குணசீலன் அர்ச்சுனன் குமரேசன்*
*பாதத்தைக் காணயேகினான் – அரோகரா.*

**வசனம்**

ஆனால் கேட்டீரோ ராஜநந்தனா! ஐயனான அர்ச்சுனன் ஏழாவது வனமாகிய ஏலக்கன்னி வனத்தில் ஏலப்பாட்டானது பாடிக்கொண்டு போகும் தருணத்தில் ஏழு சப்த கன்னிகள் வருகின்ற விதம் எப்படி என்றால்.

**கன்னிமார் விருத்தம்**

*ஆரியர் மைத்துனர்தான் அரகரா வென்று போற்றி*
*பாரிய கானகத்தில் பாங்குடன் நடக்கும்போது*
*சூரியன் உதித்தாற்போலத் துலங்கிய வடிவைக் கண்டு*
*காரிழை கன்னிமார்கள் கண்டுமே வருகின்றோமே*

**வசனம்**

அதோவென்ன ஏலக்கன்னி தாதிமார்களாகிய ஏழு சப்த கன்னிகளும் அர்ச்சுன மகாராஜன் வருவதைக் கண்டு எனக்கு உனக்கு என்று வாதாடி வருகிற விதம் எப்படி என்றால்

**கன்னிமார்கள் பாட்டு**

1. *வந்தோம் கன்னிகளென்னும் மாது; அதி ஒயிலாள்*
*மிக வாரோம் கன்னிகளென்னும் சாது*

2. *வந்தோம் வினோதமாக இந்திராதியோர் துதிக்க நந்தன்*
*முகுந்தன் பாதம் சிந்தை வைத்திதோ வந்தோம்*

3. *அன்ன நடைநடந்து பின்னல் சடை துலங்க*
*சின்ன இடை துவள சேயிழை மார்களும் வந்தோம்*

4. *ஆலிலை போல வயிறு மேலும் பணிகளாட*
*வால வயதுடைய சால வசீகரியாள்*

5. *வாயில் தாம்பூலமிட்டு வண்ணச் சுருள் மடித்து*
*வாழும் சிங்கத்திடையாள் வல்லி இடைதுவள*

6. *கண்டோர் மதிமயங்கக் காமரதியாளென்ன*
*கொண்டைசேர் விழி மாதர் குலங்க நடை நடந்து*

**கன்னிமார் விருத்தம்**

*என்னிட கணவனென்று எதிர்த்தோடி ஒருத்தி சொல்வாள்*
*தன்னிட கணவனென்று தனித்தோடி ஒருத்தி சொல்வாள்*
*உன்னத மாமுனியை உனக்கெனக் கென்று சொல்வார்*
*எழிலே கிளையைக் கன்னி ஏலக்கன்னியைப் பணிந்து*
*சொல்வாள்*

**கன்னியர் வசனம்**

அதோவென்ன ஏழு கன்னிமார்களும் எனக்கு உனக்கு என்று வாதாடி அர்ச்சுன மகாராஜனை மறித்துக்கொண்டு இருக்கும் தருணத்தில் ஏழு பேருக்கும் இளைய கன்னியாக ஏலக்கன்னிக்குத் தாதிமார்கள் போய்ச் சொல்லுகிற விதம் எப்படி என்றால்.

**பொது வசனம்**

கன்னிமார் சொல்லும்பொழுது ஏலக்கன்னியானவள் சகல ஆடை ஆபரணங்களைக் பூண்டு தர்பார் நாடி வருகிற விதம் எப்படி என்றால்.

**ஏலக்கன்னி வருகிற கவி**

*கன்னியும் சொல்ல ஏலக்கன்னியும் மனமகிழ்ந்து*
*தன்னிட நினைவு வந்து சகியுடன் எழுந்து பார்த்து*
*சொன்னதோர் கன்னியைக் கூட்டி சொகுசுடன் உடை உடுத்தி*
*வண்ணமா முனியைக் காண வருகின்றாளேலக் கன்னி*

**வசனம்**

**அதோவென்ன சந்திரராஜன் குமார்த்தியாகிய ஏலக் கன்னியானவள் அர்ச்சுன மகாராஜனைக் காண சகல ஆடை ஆபரணமணிந்து அனேக தாதிமார்களைக் கூட்டி அர்ச்சுன மகாராஜனை நாடி வருகிற விதம் எப்படி என்றால்.**

## ஏலக்கன்னி பாட்டு (கொலுவடி)

1. சருனந்த ராஜன் பெற்ற தையலாள் ஏலக்கன்னி
தனஞ்செயன் தன்னைக் காண வாராளம்மே

2. குறையது தீர்ந்ததென்று கூறினாள் ஏலக்கன்னி
குணசீலன் தன்னைக் காண வாராளம்மே

3. இரையாது தீர்ந்ததென்று சேயிழையாள் ஏலக்கன்னி
தேர்விஜயன் தன்னைக்காண வாராளம்மே

4. வரமது பலித்ததென்று வஞ்சியாள் ஏலக்கன்னி
வாழ் விஜயன் தன்னைக்காண வாராளம்மே

5. அரனிடம் வரம் பெற்ற அருவையாள் ஏலக்கன்னி
அர்ச்சுனன் தன்னைக் காண வாராளம்மே

6. அலக்கஸ் தனங்குலுங்க ஆலித்தாள் ஏலக்கன்னி
அர்ச்சுனன் தன்னைக் காண வாராளம்மே

7. சூரிய காந்திபோல சோதிமுக சிங்காரி
சந்திரன் தன்னைக்காண வாராளம்மே

## கன்னிமார்கள் பாட்டு

1. சரணம் சரணமம்மா தாயாரே ஏலக்கன்னி
காண்டா வனந்தனிலே என்கணவன் வந்தாரம்மா

2. உன்னழகுக்கு ஏற்றவண்டி உத்தமியே ஏலக்கன்னி
உண்மையாய் சொன்னேனம்மா ஒளியாமல் இப்பொழுது

3. பல்லிலே பரசுவீணை பாதத்திலே செந்தாமரை
தோளிலே துளசி மாலை தொப்பூளில் உபயமாணிக்கம்

4. நாவிலே நட்சத்திரம் நயனவிழிப் பார்வைகளும்
உன் கணவர் அவர்தானா உத்தமியே வந்து பாரும்

**ஏலக்கன்னி தீபதை**

*சந்திரகுலத்து வேந்தே தார்குழல் வந்தேன் பின்னால்*
*அந்தரமாக நானும் அலைந்திட தர்மந்தானா*
*முந்தியே எந்தனோடு ஒரு பொழுது கூடாவிட்டால்*
*பந்தய மிதுவே சொன்னேன் பார்திபா விடுவதில்லை*

**வசனம்**

வாரும் சாமி என் மன்னவா நீர் வருவீர் வருவீரென்று அனேக நாளாய் இக்கானகத்தில் உன்னைப் பார்த்துப் பார்த்து என் கண்களும் பஞ்சடைத்து விட்டது. எப்படியாகிலும் தயவு செய்து என் மாளிகைக்குச் செல்வோம் வாரும், பிராண நாதா!

**ஏலக்கன்னி பாட்டு (தாளம்: ரூபகம்)**

1. *வாருமையாதவ மாமுனியே என் மன்னவா*
*மருவிக்கூடிச் சுகமாய் வாழ்ந்திருப்போம் துரையே*

2. *தீருமையா சாமி என் குறையை என் மன்னவா*
*திரும்ப வேண்டும் எந்தனிட மாளிகைக்கு என் துரையே*

3. *கட்டிலுண்டு கணவா மெத்தையுண்டு என் துரையே*
*கால்பிடிக்க இருபுறம் தாதிகளுண்டு என் மன்னவா*

4. *ஐந்தடுக்கு சாமி பஞ்சுமெத்தை என் துரையே*
*அமர்ந்து கூடிச் சுகமாய் வாழ்ந்திடலாம் என் மன்னவா*

5. *ஆறடுக்கு சாமி மல்லிகைப்பூ என் துரையே*
*அணிந்து கூடிச் சுகமாய் வாழ்ந்திடலாம் என் மன்னவா*

6. *மல்லிகைப்பூ என் மன்னவா மெத்தைமீதில் துரையே*
*மருவிக்கூடிச் சுகமாய் வாழ்ந்திருப்போம் என் துரையே*

7. *ஆளனுந்தான் ஆளன் தேவியைப் போல் என் மன்னவா*
*அமர்ந்திருப்போம் சுகமாய் அனுதினமும் மன்னவா*

8. *வள்ளியும்தான் சுப்பிரமணியர் போல் மன்னவா*
*வாழ்ந்திருப்போம் நாமிருவர் வாருமையா சாமி*

9. கந்தனும் தான் வள்ளி தெய்வானைப்போல் மன்னவா
கலந்து கூடிச் சுகமாய் வாழ்ந்திருப்போம் துரையே

10. மன்மதரும் ரதி தேவியைப் போல் மன்னவா
மருவிருப்போம் பஞ்சணையில் வாருமையா

11. நளச்சக்கரவர்த்தி தையல் நாளாங்கன்னிபோல் மன்னவா
நலமுடன் சேர்ந்து நாமிருப்போம் என் துரையே

12. சீதையுன்தான் ஸ்ரீஅரி ராமர்போலே என் மன்னவா
சேர்ந்திருப்போம் நாமிருவரும் வாருமையா.

### வசனம்

வாரும் சாமி மன்னவா எனக்கு காமம் மீறிக் கண்ணைச் சுழட்டுது சீக்கிரம் பஞ்சனைக்குச் செல்வோம் நாதா!

### ஏலக்கன்னிப் பாட்டு (அடதாளம்)

1. ஏனையா தவமுனியே என்முகத்தைப் பார்க்கவில்லை
நானையா சிவனை நோக்கி நல்தவம் புரிந்த பொண்ணு

2. கணவருன்னை வேண்டியானும் கர்த்தன் பாதம் பணிந்த
பொண்ணு புருஷனை வேண்டியல்லோ பெருந்தவங்கள்
செய்திருந்தேன்

3. வருவீர் வருவீரென்று வழிபார்த்து நானிருந்தேன்
எப்போது வருவீரென்று இந்த வழி காத்திருந்தேன்

4. வாயைத் திறந்தீரானால் வாய்முத்தும் சிந்திடுமோ
தாளைத் திறந்தீரானால் தங்கப்பொடி உதிர்ந்திடுமோ

5. விழுந்ததொரு முத்தையெல்லாம் வாரியெடுப்பேனா அந்த
வாரியெடுத்த முத்தை வகை வகையாய்க் கோப்பேனோ தான்

6. கோர்த்ததொரு தாழ்வடத்தை என் கொங்கை மீது
அணிவேனோ தான்.

**வசனம்**

கன்னிமார்களா, இவரை என்ன எருமாடு மிதித்து விட்டிருக்குமா, இவர் ஆணாயிருப்பாரோ இல்லை பெண்ணாய் இருப்பாரோ ஒன்றும் தெரியவில்லையே என்ன செய்வோம்.

**ஏலக்கன்னி விருத்தம்**

*என்னதான் சொன்னபோதும் என் முகத்தைப் பார்க்கவில்லை*
*கன்னிமார் ஏழுபேரும் என் கணவனைப் பார்த்திருங்கள்*
*பொன்னா பரணம் பூண்டு புனுகு ஜவ்வாதணிந்து*
*வர்ணமா கலையுடுத்தி வருகிறேன் தோழிமாரே!*

**வசனம்**

கேளுங்களடி கன்னிமார்களா நான் திடீரென்று எழுந்து அபந்தமாய் வந்தபடியால் என் கணவர் என் முகத்தைக்கூடப் பார்க்கவில்லை. நான் அரண்மனை சென்று குளித்துவிட்டு கந்தம், கதம்பம், அத்தர்புனுகு சவ்வாதணிந்து வேறுவித வாசனை பட்டாடை உடுத்தி எனக்கொரு பச்சைப் பல்லக்கும் என் கணவருக்கொரு பல்லக்கையும் ஜோடித்து வருகிறேன். அதுவரையில் அர்ச்சுன ராஜனைப் பத்திரமாய்ப் பார்த்துக் கொண்டிருங்களடி தாதிமார்களே!

**அர். வசனம்**

ஆனால் கேளுங்கள் பெரியோர்களே! ஏலக்கன்னியானவள் தாதிமார்களைக் காவல் வைத்துவிட்டுத் தன் அரண்மனை போன பிறகு அர்ச்சுனன் புலம்புவது எப்படி என்றால்.

1 *ஆதிகயிலாயம் சிவனே யான்*
*அருந்தவம் போறேனே – சங்கரா சங்கரா*
*பொல்லாத வரம் வாங்க சிவனே – யான்*
*போறேன் கயிலாயம் – சங்கரா சங்கரா*

2 *அண்ணனை விட்டு யான் சிவனே*
*அருந்தவம் போறேனே – சங்கரா சங்கரா*
*மாடோடும் வீதியில் சிவனே – யான்*
*மதிகெட்டு நின்றேனோ – சங்கரா சங்கரா*

*3. தேரோடும் வீதியில் சிவனே நான்*
*திசைகெட்டுத் தப்பி நின்றேனோ ஓம் – சங்கரா சங்கரா*
*ஆரையடித் தேனோ சிவனே நான்*
*அநியாயம் செய்தேனோ – சங்கரா சங்கரா*

*4. தாயில்லாப் பிள்ளைகளைச் சிவனே நான்*
*தலைமீதில் அடித்தேனோ – சங்கரா சங்கரா*
*கூலியைக் குறைத்தேனோ சிவனே – நான்*
*குறைமுறம் அளந்தேனோ – சங்கரா சங்கரா*

*5. ஏரியை உடைத்தேனோ சிவனே நான்*
*எல்லைக் கல்லை பெயர்த்தேனோ ஓம் – சங்கரா சங்கரா*
*ஓடுகிற தண்ணீரில் சிவனே – நான்*
*உச்சாடனம் செய்தேனோ ஓம் – சங்கரா சங்கரா*

*6. நடக்கும் வழிதன்னிலே சிவனே நான் நச்சுமுள்ளை*
*நாட்டினேனோ ஓம் – சங்கரா சங்கரா*
*கோயிலை இடித்தேனோ சிவனே நான்*
*தேவரைப் பழித்தேனோ ஓம் – சங்கரா சங்கரா*
*இப்பாவி ஏலக்கன்னி சிவனே என்னைப்*
*பார்த்து மறித்தாளே ஓம் – சங்கரா சங்கரா*

**அர். வசனம்**

அதோவென்ன அய்யனான அர்ச்சுனனானவன் இவ்விதமாகப் புலம்பிக் கொண்டு தனது பாட்டியாகிய காளி தேவியை நினைக்க உடனே காளிகா தேவியம்மன் பிரசன்டமாய் வருகிற விதம் எப்படி என்றால்.

**காளிகா தேவி விருத்தம்**

*கண்டவர் கலங்கி ஓடக் காலனும் நடுநடுங்க*
*துண்டரும் பயந்து ஓடத் துடுக்குடன் சூலமேந்தி*
*சண்டி சாமுண்டி பூதம் சகலமும் புடைசூழ*
*மண்டலந் தன்னில் தேவி மகாகாளியும் வருகின்றாளே*

## வசனம்

அதோவென்ன இந்தப் பிரகாரமாக ஏழாவது வனத்தில் அர்ச்சுன மகாராஜன் காளிகாதேவியை நினைத்துப் புலம்ப அப்போது பத்தினி பலங்கிரி சந்திரி சங்கிரி என்னும் அகோர வீரபத்திர காளியம்மன் கொலுவுக்கு வருகிற விதம் எப்படி என்றால்.

## காளி கொலுவு தரு

*1. வந்தாளே ரண பத்ரகாளி – நல்ல காளி*
*திரிகிட திகவென மகுட சிங்காரி*

*2. இந்திராதி வேதர்கள் வாட இமையான*
*பட்டாடை பணிகளு மாட*

*3. தந்தானங்கள் பாடிப் பூதனங்களேந்தி – இத்தரணயில்*
*கெடி பெற்ற நாரணி யகோரி*

*4. கட்டேரி சிலை வாளும் ஏந்திக் கண்டவர்*
*திடுக்கிடக் காளியும் வாராள்*

## காளி வசனம்

ஏப்பூதப்படைகளா இன்று நம்மைக்கோரி அர்ச்சுனன் ஏனோ புலம்புகிறான். அவனிடம் செல்லுவோம் சீக்கிரம் வாருங்கள்.

## அர்.சூர்கை

*ஓம் அரகரா*
*நாரணன் தங்கையே நவின்ற மாரியே*
*ரணபேரிகை தான் முழங்க*
*வாரணமேளங்கள் வகையுடன் தப்பட்டை*
*வரிசையுடன் ஓசையிடவே*
*காரன குழலான கனகாம்பர ரத்தினமே*
*கபாலமேந்தும் சூலி இத்தாரணியைக் காக்கின்ற*
*தயாபர சூலியே இந்தத் தனஞ்செயனைக் காத்து ரட்சிப்பாயே*

### ஆர். தரு (அடதாளம்)

*1. அம்மா காளிகா தேவி உன் பாதமே கெதி*
*அடியேனைக் காருமம்மா ஏனம்மணி அடியேனைக் காருமம்மா*

*2. செம்மை புகழும் மிந்தப் பாலை நிலத்தில் வாழும்*
*உத்தமியே என் தாயே.... ஏனம்மணி பத்தினி என்னைக் காராய்*

*3. அந்தரி கௌரி அகோர நீலி சுந்தரி துர்க்கி*
*இந்த வேளை தன்னில் எந்தனைக் காத்தருளும்*
*மைந்தன் மனமிரங்க வந்தனம் புரிகிறேன்.*

### காளி வசனம்

ஆனால் கேளுமய்யா அர்ச்சுனா என்னைக் கோரி நீ தியானித்த படியால் உன்னை மூன்றே முக்கால் நாழிகை தப்புவித்து விடுகிறேன். என் ரூபத்தைப் பெற்றுக்கொண்டு உன்னுடைய ரூபத்தை எனக்குக் கொடுத்து நீ போய்வாரும் பிள்ளாய் அர்ச்சுனா.

### அர். வசனம்

அப்படியே பெற்றுக் கொண்டேன் போய்வாரேனம்மா பாட்டியே!

### ஏலக்கன்னி தீபதை

*சப்தக் கன்னியுங் கூட்டிச் சதிருடன் ஏலக்கன்னி*
*சுத்தமாய் ஜலமெடுத்து சொகுசுடன் ஸ்நானம் செய்து*
*மெத்தவே பட்டுடுத்தி முகம் அலங்காரமாக*
*முத்துப் பல்லக்கிலேறி மெல்லியாள் வருகின்றேனே.*

### வசனம்

அதோவென்ன ஏலக்கன்னியானவள் ஆணையிட்டுச் சென்ற அர்ச்சுன மகாராஜனைக் காணும் பொருட்டாகப் பல்லக்கை ஜோடித்துக் கொண்டு வருகிற விதம் காண்க.

### ஏலக்கன்னிப் பாட்டு

*1. மவுணனைத் தேடி வாராளம்மன் – ஒய்யாரமாக*
*மவுணனைத் தேடி வாராளம்மன்*

*மவுணனைத் தேடி வாராள் மங்கையாள் ஏலக்கன்னி*
*சகுனங்கள் நல்லதென்று சரசமுடனே வாராள்*

2. *இருபுறம் வெண்சாமரை ஏழ்திசை மார்கள் வீச*
*மருமலர் கன்னியர்கள் மகிழ்ந்து கவரி வீச*
*தாளம் மத்தள மேள தகிட்திமி திமிதிமி யெனவே*
*தாதியர் இருபுறம் தம்பூரா வீணைகள் மீட்ட.*

3. *முத்துப் பிரகாசம் போல் நடையும் நடையழகி*
*முருக்கம்பூ தாமிதம் போல் என் குத்துஸ்தனம் குலுங்க.*

*மற்றுமுள்ள பூஷணங்கள் வகையாய்த் தான் அணிந்து*
*மவுணனைத் தேடி வாராளம்மன் ஒய்யாரமாக*

**வசனம்**

என்னடி சகிமார்களா! நீங்கள் சொன்ன மாத்திரத்திலே நான் திடீரென்று எழுந்து வந்து விட்டேன். அப்படி வந்தபடியால் என் கணவன் என் முகத்தைப் பார்க்கவில்லை. இப்பொழுது நான் வந்த அழகைக் கண்டு என் கணவன் என்னைப் பார்த்த மாத்திரத்தில் சிரித்து விட்டாரடி. இனி என்ன தாமதம் என் கணவனைப் பச்சைப் பல்லக்கில் ஏற்றி நமதரண்மனைக்குச் செல்லுவோம் தாதிமார்களே.

**ஏலக்கன்னி பாட்டு (சிந்து)**

1. *தானாத்தம் தான, தானனா தானனா,*
*தத்தினித்தம் நித்தன தனதனனா*
*பச்சைப் பல்லக்கு மீதிலேறி பத்திரமாய்க்*
*காளியம்மன் பாங்குடனே நடந்தாள்*

2. *இச்சையுடன் மயிலாள் தானும்*
*இன்பமுடன் தன் மனைக்குக் கொண்டுபோக நடந்தாள்*
*செட்டித் தெரு தன்னைத் தாண்டி*
*சேனியர்கள் செட்டி மக்கள் தன் தெருவைத் தாண்டி*

3. *மூனு சுற்றுக் கோட்டை வாசல் தாண்டி*
*மூவரத்தின மண்டபத்தில் கொண்டுபோக நடந்தாள்*

*நாலு சுற்றுக் கோட்டை வாசல் தாண்டி*
*நாகமணி மண்டபத்தில் கொண்டுபோக நடந்தாள்*

4. *ஐந்து சுற்றுக் கோட்டை வாசல் தாண்டி*
*அழகு மணி மண்டபத்தில் கொண்டுபோய் வைத்தாள்*
*பாப்பார் தெரு தன்னைத் தாண்டி அம்மன் தாண்டி*
*பாளையர் பட்டனியர் தன் தெருவைத் தாண்டி*
*சப்த கன்னிமாரைக் காவல் வைத்து*
*சொகுசுடன் போஜனங்கள் சமைத்திட நடந்தாள்.*

### ஏலக்கன்னி வசனம்

அல்லது தாதிமார்களா! இப்பொழுது என் கணவனை பத்திரமாகக் காவல் புரிந்து இருங்கள், நான் சென்று என் கணவனுக்குக் காய்கறி, பதார்த்தம், சமையல் சாதம் செய்து வெண்ணீர் வைத்து வருகிறேன். அது வரைக்கும் அதிக பத்திரமாக இருங்களடி.

### (ஏல) பாட்டு, சமையல்

1. *சென்னரசி அன்னப்பொரி காய்கறிகளாம்*
*சம்ரமுடன் ஏலக்கன்னி சமைக்கலுற்றாள்*

2. *அப்பளம் அரிதாரம் வடை தோசையாம்*
*ஆனதொரு கெஜ்ஜயமும் தேன்பழங்களும்*

3. *கொப்பறையில் வெண்ணீர் வைத்து எண்ணை சீக்காயும்*
*குணமுடன் தன் கணவனைக் கூப்பிட வாராள்*

4. *அன்னம்போல் தருமர் தம்பி மாதவனை நோக்கி*
*மன்னவனைக் காணாமலே மயங்கி வீழ்ந்தாள்*

### ஏல. தீபதை

***இன்னது இடையாள் வஞ்சி உத்தமி ஏலக்கன்னி***
***அன்னமும் காய் பதார்த்தம் அன்புடன் சமைத்துக் கொண்டு***
***வண்ணமா மண்டபத்தில் வந்துமே பார்க்கும்போது***
***மன்னவனைக் காணாமலே மயங்கியே மூர்ச்சையானாள்***

### வசனம்

அதாவது எப்படி என்றால் ஏலக்கன்னி அம்மனானவள் காய்கறி பதார்த்தம் முதல் அன்னத்தையும் சமைத்துக் கொண்டு மண்டபத்தில் வந்து பார்க்கும்போது அர்ச்சுன மகாராஜன் இல்லாததனால் வருத்தத்தோடு புலம்புகிற விதம் எப்படி என்றால்.

### ஏலக்கன்னி புலம்பல் (அடதாளம்)

*1. பஞ்சணை மெத்தைமீதில் படுத்திருந்தவரைக் காணேன்*
*கன்னிமார்களே.....*

*2. மிஞ்சி புகழ் படைத்த விஜயனைக் காணன்டீ*
*என் தோழி மார்களே....*

*3. பரமர் தந்தவரம் எனக்கு பலிக்காமல் போச்சுதே*
*ஓ! பிரம்மதேவா.....*

*4. ஈசன் தந்த வரம் எனக்கு இல்லாமல் போச்சுதே*
*ஓ! ஜெகதீசனே....*

*5. குருக்குல மன்னவர் கொற்றவரைக் காணன்டீ*
*ஓ! தெய்வமே....*

*6. ஆனால் அழகு மன்னர் அர்ச்சுனரையுங் காணேன்*
*ஓ! தோழி மார்களே...*

*7. வில்லில் அதிக தீரன் விஜயனைக் காணேனே*
*ஓ! தோழிமார்களே...*

### ஏலக்கன்னிப் பாட்டு (அடதாளம்)

*1. அடி கன்னிமாரே வாங்களோடி*
*என் கணவன் மீதில் மோகம் மாகி*

*2. என்னையும் அறியாமலே அவர் எங்கேயோ ஒழிந்தாரடி*

*3. குதிரை சவுக்கெடுத்துக் கொல்லுவேண்டி உங்களைத்தான்*

*4. உங்களை அடிப்பேனென்று ஓடி ஓடி அடிக்கலுற்றாள்*

### கன்னிமார் பாட்டு

எங்களை அடிக்க வேண்டாம் ஏந்திழையே ஏலக்கன்னி
இங்கேயே பார்த்திருந்தோம் அவர் எங்கேயோ ஒழிந்து
கொண்டார்
தாயாருக்கு வந்தவர்தான் தகப்பனாக வேண்டுமம்மா
எங்களை அடிக்க வேண்டாம் ஏந்திழையே கோபம் வேண்டாம்.

### ஏலக்கன்னிப்பாட்டு (ரூபம்)

1. நான் என்னா செய்குவேன் கன்னிமாரே
ஏனம்மா சகியே ஏது செய்குவேன் தோழிமாரே

சுருள்: என்ன செய்குவேன் எப்படி தாங்குவேன்
மன்மதன் கணைப்பட்டு மார்பில் உருகுதே

2. அவர் நாமம் பத்துடைய என — ஆணழகர்
நால்வர் நடுப்பிறந்தவரம்மா

சுருள்: தாமிச குணமுள்ள தருமர் தம்பியாம், காமனுக்கு
சரியானவரம்மா

3. அவர் கையில் காண்டீபம் பிடித்தவர் அம்மா
என்னாணழகர் நான் கண்டால் விடுவேனோடி சும்மா

சுருள்: பாண்டவருடனே பிறந்த விஜயனும்
ஆண்டவர் மைத்துனன் அர்ச்சுனராசனை

4. செய்யோதரா சம்போ வென்று
சம்போமகா தேவா வென்று மெய்யில்
விபூதியணிந்த மெல்லியரே கண்டீர்களோ?

### ஏல. பாட்டு (அடதாளம்)

கன்னிமாரே! வாங்களோடி என் கணவரைத் தேடுவோமே
ஆணழகு மன்னன் அர்ச்சுனரைத் தேடிடுவோமே
வில்லில் அதிக தீரன் விஜயனைத் தேடிப்போவோம்
பத்தழகு தான் படைத்த பார்த்தீபரைத் தேடிப்போவோம்
குருகுல மன்னவரைக் கொற்றவரைத் தேடிடுவோம்

### ஏலக்கன்னிப்பாட்டு (ரூபகம்)

1. மாடுமேய்க்கும் என் அண்ணாமாரே அண்ணடா
மன்னவரைக் கண்ணில் கண்டதுண்டோ என் அண்ணடா

2. கன்று மேய்க்கும் சின்ன தம்பிமாரே என் தம்பியே
என் கண்ணாளரைக் கண்ணில் கண்டுதுண்டோ என் தம்பியே

3. ஆடுமேய்க்கும் என் அண்ணமாரே என் அண்ணடா
ஆணழகரைக் கண்ணில் கண்டீரோதான் சொல்லும்

4. குட்டி மேய்க்கும் சின்ன தம்பிமாரே என் தம்பியே
குணசீலன் வரக் கண்ணில் காண்டீரோ தான் சொல்லும்

### ஏல. விருத்தம்

பட்டணமெல்லாம் சுற்றிர் பார்த்திபரைக் காணாமல் தான்
பொட்டென ஒடி வந்து போறவர்தனை நிறுத்தி
அட்டமாய் எதிரே சென்று ஆறிலே இளைய கன்னி
திட்டமாய் நிறுத்திக் கொண்டு சொல்லுவாள் ஏலக்கன்னி

### வசனம்

ஆனால் வாரும் சாமி என் பிராணநாதா! உன்னை நம்பி நான் இந்த வனத்தில் தவஞ்செய்து கொண்டு இருக்க, நீர் ஆசை காட்டி மோசம் செய்து போகலாமா என் மன்னவா?

### ஏலக்கன்னிப் பாட்டு

1. நாதா நாதா எந்தன் பிராணநாதரே உனக்கு
என்ன மனம் சாமி வந்ததையா

2. என்னைவிட்டு நீ பிரிய என் பிராண நாதரே
உனக்கென்ன மனம் வந்ததையா மன்னவரே

3. பெண்ணின் மனம் குளிர்ந்ததானால் மன்னவரே
நீ போறதவம் பலிக்குமையா கண்ணாளரே

4. இந்தக் கன்னி மனம் குளிர்ந்ததானால் மன்னவரே
உன் கடுந்தவம் பலிக்கும் என் பிராண நாதரே

*5. ஆசை கொண்டு வந்தவளை என் மன்னவரே*
*மோசஞ் செய்ய வேண்டாமையா கண்ணாளரே*

**ஏல. பாட்டு (ரூபகம்)**

*நாதா நாதா என் பிராண நாதா சுவாமி என்னை*
*விட்டுக் கணவா நீரு போக – என்துரையே*
*உனக்கென்ன மனம் சாமி வந்ததையா*
*பொன்னைவிட்டு சாமி நிறம் போகுமோ – என் துரையே*
*பூவை விட்டு சாமி மணம் போகுமோ*
*கன்றை விட்டுக் கணவா பசுபோகுமோ*
*கலையை விட்டு சாமி மான் போகுமோ*
*காண்பாரும் மன்னா இந்த வேளை – என் துரையே*
*கலியாணம் என்னைச் செய்துகொள்ளும் என் மன்னவா*

**ஆர். வசனம்**

ஆனால் கேளும் பெண்ணே ஏலக்கன்னி! நானோ என் பங்கும் பங்காளி பாதிநாள் சத்திராதிகளாகிய துரியோதனாதிகளை ஜெயிக்கும் பொருட்டாக யானோ, ஆணாசை, பெண்ணாசை, பொன்னாசை, பொருளாசை, மண்ணாசை என்ற ஐந்தாசையையும் வெறுத்து, விபூதி பஞ்சாட்சரம் அணிந்து, பஞ்ச பூதங்களையும் துறந்து ஏகாங்கி, சர்வாங்கி, சந்யாசி உருவங்கொண்டு கைலங்கிரி கோயிலாய் வீற்றிருக்கின்ற ஜெகதீசன் பேரில் ஒரே கவனமாய் தவம் செய்யச் செல்லுகிறேன். நான் தவம் செய்து கடவுளிடத்தில் இருக்கக்கூடிய பாசு பதாஸ்திரத்தைப் பெற்றுத் திரும்பி வருங்கால் உன்னைப் பூணூல் கலியாணம் செய்து கொள்கிறேன். எனக்கு சந்தோஷமாய் விடை தந்து அனுப்பும் பெண்ணே ஏலக்கன்னி.

**ஏலக்கன்னி பாட்டு (அடதாளம்)**

*கருத்ததலை மன்னா வெளுத்ததானால் என்னை*
*கண்ணெடுத்து மன்னா பார்ப்பீரோதான்*

**அர்.தரு (ஜம்பை)**

*கருத்ததலை வெளுக்காமலே பெண்ணே*
*கர்த்தன் வரம் வாங்கி வாரேன்.*

**ஏல. பாட்டு**

*எழுந்த மாரு சரிந்ததானால்*
*ஏறுமுகம் மன்னா பார்ப்பீரோதான்*

**ஆர். பாட்டு**

*எழுந்தமாரு சரியாமலே கண்ணே*
*ஈசன்வரம் பெண்ணே வாங்கி வாரேன்.*

**ஏல. பாட்டு**

*வாமணமும் மன்னா பூமணமும்*
*வயது சென்றால் மன்னா வருகுமோதான்*

**அர். பாட்டு**

வாமணமும் பெண்ணே பூமணமும் குறையாவரம் பெண்ணே வாங்கி வரேன்

**ஏல. தீபதை**

*அரனிட விஷ்ணுபாதம் அன்புடன் கண்டு நீரும்*
*சுகமுடன் தவங்கள் செய்து சிவன் பாதம் தன்னை வேண்டி*
*பெருமையாய்ப் பாசுபதம் பெற்றுமே கொண்டு நீரும்*
*திரும்பி நீர் வருவீரையா தேவரே பாதம் போற்றி*

**வசனம்**

சரணம் சரணம் சாமி என் மன்னவா, நீர் தவம் செய்து பதம் பெற்று வந்து என்னைக் கலியாணம் செய்து கொள்வீர். நீர் இப்போ சந்தோசமாகப் போய்வாரும் என் மன்னவா. தங்கள் பாதாரவிந்த கமலங்களுக்கு என் அனேக வந்தனம் சுவாமி.

**அர். தீபதை**

*வஞ்சியாள் ஏலக்கன்னி வரமது தந்தபோது*
*பஞ்சபூதம் பூரித்து பாங்குடன் விஜயன் தானும்*
*நான்மறை வேதநூலை நலமுடன் விளங்கிக் கொண்டு*
*கொஞ்சுமாம் குயிலினோசை கெண்ட பேரண்டன்*
*வனம் புகுந்தான்.*

ஆர்.வசனம்

ஆனால் கேளுங்கள் பெரிய நாதாக்களே! ஐயனான அர்ச்சுனனானவன் முதல் மோகினி வனம், இரண்டாவது ராமராச்சுதன் வனம், மூன்றாவது பிராமண வனம், நான்காவது ஸ்ரீ நாராயண வனம், ஐந்தாவது வேங்கைக் கன்னி வனம், ஆறாவது மலையடி வேடுவன் வனம், ஏழாவது ஏலக்கன்னி வனம் முடித்து எட்டாவணளது பேரண்ட வனத்தில் கால் வைத்தானாம் விஜயன்.

## கெண்ட பேரண்டன் வனம்

அர். தரு ( ஆதிதாளம்)

*எட்டி சூசினே இதே தமாசு*
*ஏட சூசினே இதே சிங்காரமாய்*
*எட்டெட்டி சூசனா சுட்ட பிரகாசமாய்*
*நிட்டுமவர்க் கொரு நிக்கொருவதனா*
*மனோ ரஞ்சிதே மைத்தே சாலு*
*மாட்டலாட மனக் கேலனையா*
*அத்துமீறி நடசேட்டி முண்டலுக்கு*
*புத்தி செப்ப மனக் கேலனையா*
*கள்ளு பங்கி சாராய மதாகி*
*வெல்லு மரசு பட வேலனையா*
*தாகி நப்புடு தப்பி கூத்தலு*
*நோப்பு சேத்த மனக் கேலனையா*
*அத்துமீறி நடசேட்டி முட்டலுக்கு*
*புத்தி செப்ப மனக் கேலனையா*
*தொல்லை பேயே நஞ்சு முண்டலுக்கு*
*புத்தி செப்ப மனக் கேலனையா*
*உருக்கிரண்டு முண்டலுக் கெல்லாம்*
*குரு உபதேசம் கேலனையா*

**ஆர். பாட்டு (தாளம்: ஜம்பை)**

அந்தவனம் தான் கடந்தான் – அப்புறமே தான் நடந்தான்

காரைப் படர்ந்தவனம் – கருங்கிழங்காய்ப் பூத்தவனம்

சூரைப் படர்ந்தவனம் – சொத்தகலக்காய் காய்த்த வனம்

இஞ்சிப் படர்ந்தவனம் – எலுமிச்சங்காய் காய்த்த வனம்

மஞ்சள் காய்த்த வனம் – மாதுளங்காய் காய்த்த வனம்

முல்லை படர்ந்த வனம் – மல்லிகையும் பூத்த வனம்

முசிரிப் படர்ந்த வனம் – மூங்கில் வனம்தான் கடந்தான்

சிங்கம் உறங்கும் வனம் – சீரும் புலிகள் தூங்கும் வனம்

பாலைப் படர்ந்த வனம் – பலமிருகம் தூங்கும் வனம்

கோவைப் படர்ந்த வனம் – குயில்களும் வசிக்கும் வனம்

அண்டரெண்டும் தெரியாமலே தண்டகா வனம் புகுந்தான்

**அர். தீபதை**

*கல்லதிரும் கொடுமெதிரும் காரையுடன்*
*சூரைக்கனி காய்களுண்டு*
*கொல்லவரும் வேங்கைப்புலி கொடுஞ்சிலை*
*ஏந்துங்கையோன் கடமை புல்லன்*
*புல்லர் நடப்பதுபோல புலந்திரனுக்*
*கிசைந்ததெரு புதல்வன் போறேன்*
*மல்லானூர் கானகத்தில் ஐந்தெழுத்தும்*
*பாவனையாய் நடந்தோர்க்கு யான்.*

**அர். வசனம்**

ஆனால் கேளுங்கள் பெரியோர்களே! இவ்விதமாக ஐயனான அர்ச்சுனன் எட்டாவது வனத்தில் கால்வைத்த உடனே அந்த வனமானது எப்படிப்பட்ட வனமென்றாலோ கல்லும், முள்ளும், உயர்ந்த மரமும் இருண்ட சோலையாம் அந்த வனம். அப்பேர்பட்ட வனத்தில் அர்ச்சுனன் போகவும் அவ்வனத்தில் சஞ்சாரம் செய்யா நின்ற இடும்பியாகிய கெண்ட பேரண்ட ராட்சசி வருகிற விதம் எப்படி என்றால்.

### பேரண்டி வருகிற கொலு விருத்தம்

*அந்தோர் வனத்தில் அரியதோர் விஜயன் தானும்*
*வந்திடும்போது மருக பேரண்டி*
*காண்டாவனந்தனில் கருத்துடன் சேர*
*மலைகளைப் போல ஸ்தனங்களைச் சுமந்து*
*நேர்மையாகச் சுருண்ட நெடுஞ்சுருள் மயிரும்*
*கால்களும் நீண்ட கம்பம் போல் நடந்து*
*இப்படிக் கொத்த இருந்த பேரண்டி*
*செப்புமாம் விஜயனைச் சேர வந்தேனே.*

### வசனம்

அதாவது எப்படி என்றால் இந்தப் பிரகாரமாக இடும்பியாகிய கெண்ட பேரண்ட ராட்சசியானவள் அர்ச்சுன மகாராஜனைக் காண வேண்டுமென்று சபையை நாடி வருகிற விதம் எப்படி என்றால்.

### பேரண்டராட்சதி பாட்டு ( ஆதி தாளம்)

1. *தண்ணீர்க் குடமெடுத்துத் தலைமேல் வைத்தாள் – ராட்சதி*
   *தயங்கி தயங்கிப் பார்த்து வராள் பேரண்டக் கன்னி*

2. *நீருக் குடமெடுத்து நெற்றிமேல் வைத்தாள் – ராட்சதி*
   *நின்று நின்று பார்த்துவராள் பேரண்டக் கன்னி*

3. *உருண்ட விழிகள் ரெண்டும் உற்றுப் பார்த்துமே*
   *ஒய்யாரமாய் நடந்து வராள் பேரண்டக் கன்னி*

4. *வருத்தமுள்ள முகத்திற்கு மஞ்சள் மினுக்கி அம்மன்*
   *மாதளம்பூ டட்டுடித்தி மன்னவன் முன்னே*

5. *கண்டபேர்க்கு மிண்டக்காரி – சிங்காரப்பல்லி*
   *கரிச்செட்டி மூக்கழகி பேரண்டக் கன்னி*

6. *தூண்போலத் துடையசையவே தொண்ண கழுத்தி*
   *சூர்ப்பிடாரி போலவராள் பேரண்டக் கன்னி*

7. *அண்ட நின்று கொண்டல்லவோ சண்டைக் கொள்ளும்*
   *அரக்கி தெய்வம் ஊர்மாரிக் கூடவரும்*

8. வில்லும் புருவங்களை நெருத்திக் கொண்டாளம்மன்
விந்தையான பேரண்டச்சி வந்து மேவினாள்

### தில்லை பேரண்டச்சி பாட்டு (அடதாளம்)

1. வாராளே தில்லை பேரண்டச்சி வாள் விஜயனை கண்டெழுந்து
கண்ட பொழுதவள் கெண்ட பேரண்டச்சி கண்ணையுருட்டித்
தான் முழித்து

2. மண்டிவாய் புகையெழும்ப மரகதம்போல் மூர்ச்செழும்ப
கண்டப் பொழுதவள் தில்லை பேரண்டச்சி கண்ணையுருட்டியே
தான் முழித்தாள்.

### பேரண்டச்சி விருத்தம்

கண்டவள் பேரண்டச்சி காதலன் வடிவை நோக்கி
இந்நிலம் தன்னிலே தான் இவரைப்போல் கண்டதில்லை
மண்டலம் தர்மர்தம்பி மன்னவன் தன்னைப் பார்த்துக்
கொண்டுபோய் இவரை வைத்து நாம் குணமுடன் பேசலாமே

### வசனம்

அதாவது என்னவென்றால் இந்த விதமாகவே பேரண்டக் கன்னியானவள் அர்ச்சுன மகாராஜன் அழகைப் பார்த்துப் புருஷனாக பாவிக்க வேண்டுமென்று அர்ச்சுனன் முன்பாக வந்து கூத்தாடுகிற விதம் எப்படி என்றால்.

### பேரண்டச்சி பாட்டு (ஆதிதாளம்)

1. போகாதே நீ நில்லையா ஜங்கும தேவா – போகாதே
நீ நில்லையா போகாதே நீ நில்லையா
ஆகாரம் கொள்வேனுன்னை

சுருள்: ஏகாங்கியே நீயும் எந்தனைத் தழுவிப் போவாய்

2. மண்டலம் தன்னில் இல்லையா உன்தனைப் போல
மன்னவர் இல்லை நில்லையா
அண்டை அருகில் வாரும் ஆசையெல்லாம் தீரும்.

சுருள்: மொண்டி செய்தாயானால் உண்டுப் போடுவேனுன்னை.

3. *கலக்கமா வருகுதேனையா உன்தனைக் கண்டு*
*கண்ணை சுழற்றுதேனையா*
*அழைக்காமல் நீ வருவாய் என் ஆசையெல்லாமே தீர்ப்பாய்*

**சுருள்:** *மோகம் எல்லாமே தீர்ப்பாய் என் தாகமெல்லாமே தீர்ப்பாய்.*

4. *மயக்கம் வருகுதேனையா உன்தனைக் கண்டால் மருந்தென்ன*
*போட்டாயோ பாவி*
*மோகலீலைக்காரா முத்தம் தாராயோ மாரா*

**சுருள்:** *மொண்டி செய்தாயானால் உண்டுப் போடுவேனுன்னை –*
*போகாதே!*

### அர். வசனம்

ஆனால் கேட்டீரோ ராஜநந்தனா! அர்ச்சுனனானவன் எட்டாவது கெண்ட பேரண்ட வனத்தில் போகும்பொழுது அந்த வனத்தில் சஞ்சரிக்கின்ற இடும்பியாகிய கெண்ட பேரண்டச்சியானவள் அர்ச்சுனனைப் புருஷனாக பாவித்துக் கொள்ள வேண்டுமென்று அர்ச்சுனனை வழிமறிக்க அப்பொழுது அர்ச்சுனனானவன் இந்த ராச்சதியைத் தாயென்றும் சேயென்றும் வணங்கிக் கையெடுத்துக் கும்பிட்டாகிலும் அப்புறம் தாண்டவேணுமென்று தனது மனதிலே நினைத்து இந்த ராச்சதியுடன் ஏதென்று பேசத் தொடங்கினானாம்.

### அர். தரு

1. *ஏனம்மா மாதாவே என்னுடன் பின் தொடர்ந்தாய்*
*அம்மணி பெற்ற மாதாவே*

2. *நானம்மா சிவனை நோக்கி நல்தவம் புரிய போறேனம்மணி*
*பெற்ற தாயாரே*

3. *காணாதந்த கர்த்தன் பாதம் கண்டறியப் போறேனம்மா*
*அம்மணி பெற்ற மாதாவே*

4. *பார்க்காத பரமர்பாதம் பார்த்து வரப் போறேனம்மா – அம்மணி*
*பெற்ற மாதாவே*

5. பரமர் பாதம் காண வேண்டும் பாசுபதம் வாங்க வேண்டும்
அம்மணி – பெற்ற மாதாவே

6. பாசுபதம் வாங்கிவந்து பகையாளியை வெல்லவேணும்
அம்மணி – பெற்ற தாயாரே

7. துரியோதனன் சேனையெல்லாம் செடலாட்டம் ஆட்ட வேணும்
அம்மணி – பெற்ற தாயாரே

8. காங்கியந்த கர்ணனையும் இரு கண்டதுண்டம் செய்யவேணும்
அம்மணி – பெற்ற தாயாரே

9. சகுனியந்த சல்லியனைச் சமர்க்களத்தில் வெல்லவேணும்
அம்மணி – பெற்ற தாயாரே

10. பொல்லாதந்த நூறுபேரைப் போர்க்களத்தில் வெல்ல
வேணுமம்மணி – பெற்ற தாயாரே

11. ஆதிசக்தி திரௌபதையின் அவிழ்ந்த கூந்தல் முடிக்க வேணும்
அம்மணி – பெற்ற மாதாவே

12. அண்ணன் தருமனுக்கு மகுடமுடி சூட்ட வேணும்
அம்மணி – பெற்ற தாயாரே

13. உன்பிள்ளை தவம் போறேனம்மா பின் தொடர்ந்து வர
வேண்டாம் அம்மணி – பெற்ற மாதாவே

14. உன் மைந்தன் தவம் போறேனம்மா மாதாவே, வழிவிடம்மா
அம்மணி – பெற்ற மாதாவே

15. காதவழி நீ நடந்தால் கால்கள் புண்ணாய் நோகுமம்மா
அம்மணி – பெற்ற மாதாவே

16. தூரவழி நீ நடந்தால் துடைகள் புண்ணாய் நோகுமம்மா
அம்மணி – பெற்ற தாயாரே

17. வேண்டாமம்மா ராட்சசியே உன் வாழ்மனைக்குப் போய்ச்சேரும்
அம்மணி – பெற்ற மாதாவே

**பேரண்டி வசனம்**

பார்த்தாள் பேரண்டியானவள். ஆஹா இதென்ன அர்ச்சுன மகாராஜன் நம்மைத் தாயென்றும் சேயென்றும் சொல்லி ஓடி விடுவது போல் தெரிந்து மேல் விழுந்து தழுவுகிற விதம் எப்படி என்றால்.

**தரு-**

*ஆண்டி போகாதே சங்குமா தாண்டி போகாதேப்*
*காமபாணம் மார்பில்பட்டு மோகமாகிப் பெருகுதுன்மேல்*
*மோகமாகித் தாகம் தீர்த்து என்னைச் சேர்ந்து பின்னே போவாய்*

**அர்.வசனம்**

ஆனால் கேட்டீரோ பெரியோர்களே! இந்த இடும்பியாகிய இராட்சதிக்கு எத்தனை மனுநீதிகளைச் சொன்னாலும் கேளாது மேல் விழுந்து தழுவ அர்ச்சுனனுக்கு கோபாக்கினி வடவாக்கினி மீறி அரக்கியைப் பார்த்து அதட்டிக் கேட்பது எப்படி என்றால்.

**அர்ச்சுனன் – பேரண்டி பாட்டு (துடுக்கு) அடதாளம்**

*அர்– ஆரடி என்னுடன் போராட்டம் செய்கிறாய்*
*அரக்கி அடி ராச்சதி*

*பேர– கெண்ட பேரண்ட ராச்சதன் பெண்ணென்று அரியாயோ*
*தவசு.... ஓ ரிசியே*

*அர்– பேரண்ட ராச்சதன் பெண்டானால் எனக்கென்ன*
*அரக்கி போடி ராச்சதி*

*பேர– கானகம் தன்னிலே கண்டால் விடுவதில்லை தவசு அய்யா...*
*ஓ... ரிசியே*

*அர்– என்ன செய்வாய் போடி ஏகாங்கியே நீயும் அரக்கி போடி*
*சிருக்கி*

*பேர– தின்னாமல் ஒருவரையும் நான் தேரவிடுவதில்லை தவசே...*
*ஓ... ரிசியே*

*அர்— ஆனால் தின்னடி பார்ப்போம் அரிய தவசு தன்னை அரக்கி அடி பேரண்டி ஓ ராச்சதி*

*பேர—இச்சைபட்டேன் உன்மேல் நான் எப்படித் தின்பேனோ தவசே.... ஓ... ரிசியே*

*அர்— சன்யாசியைக் கேட்பது தர்மமல்ல போடி அரக்கி – அடி – சிருக்கி*

*பேர—உன்னாசை கொண்டுதான் உளர்வது தர்மமோ தவசே... ஓ... ரிசியே*

*அர்— தவசுக்கு நான் போறேன் தடங்கல் செய்யாதடி, அரக்கி போடி ராச்சதி*

*பேர—என்னைத் தழுவிப் போனால் உன் தபசு பலிக்குமையா தவசே... ஓ... ரிசியே*

*அர்— அரக்காட்டம் செய்தால் அடித்துப் போடுவேனுன்னை அரக்கி போடி ராச்சதி*

*பேர—மறித்துப் பிடித்து உன்னை வலிய சேருவேனையா தவசே... ஓ... ரிசியே*

*அர்— எட்டாத கனியின் மேல் இச்சைப் பட்டால் வருமோ அரக்கி போடி ராச்சதி*

*பேர—எட்டாத கனியை நான் ஏறிப்பறிப்பேனையா தவசே... ஓ... ரிசியே*

*அர்— எதிர்வார்த்தை பேசினால் என்கோபம் பொல்லாதது அரக்கி போடி ராச்சதி.*

## பேரண்டி வசனம்

அதாவது என்னவென்றால் அர்ச்சுன மகாராசன் இசையாமல் போனதும் இடும்பியாகிய ராச்சதியானவள் அர்ச்சுனன் பேரில் அனேக விதமான பொய்களை ஜோடிக்கும் விதம் எப்படி என்றால்.

**பேரண்ட ராச்சதி பொய் ஜோடிப்பு (ஆதிதாளம்)**

1. கானகமே பாவி போய் நுழைந்தாள். தஜம் தக்கதை
காதோலையைப் பாவி கழட்டி எறிந்தாள்.

2. அப்பிக் கொண்டாள் தன்னிட தானட மீதில்
அறைந்து கொண்டாள் பாவி மேனியெல்லாம்.

3. குத்திக் கொண்டாள் தன்னிட கொங்கை மீதில்,
குலைகுலைத்தாள் பாவி மேனியெல்லாம்

4. நீலநல்ல பாவி வளையலெல்லாம்
நெறநெற வென்று பாவி போட்டுடைத்தாள்

5. கட்டியிருக்கும் வெண்பட்டுச் சேலையெல்லாம்
கிழித்தெறிந்தாள் பாவி ஜான்முளமாய்

6. பூண்டிருக்கும் பாவி பூஷணமெல்லாம்
பொடிப்பொடியாய் பாவி செய்தெறிந்தாள்

7. களவு செய்த பாவி கள்ளரைப் போல்
கட்டிலின் மேல் பாவி போய்ப் படுத்தாள்

8. பலமுடனே பாவி வேட்டைக்குப் போன
பேரண்டனு மிப்போ வருகலுற்றான்

**பேரண்டி தீபதை**

தலைதனை விரித்துக் கொண்டாள் தவடைமேலறைந்துக்
கொண்டாள்
முலையின் மேல் ரத்தங்காண முகமெல்லாம் பூசிக் கொண்டாள்
களவு செய்த கள்வரைப்போல் கட்டிலின் மேல் போய்ப்படுத்தாள்
திடமுடன் வேட்டைபோன பேரண்டனும் வருகின்றானே.

**வசனம்**

அதாவது எப்படி என்றால் பேரண்டக் கன்னியானவளுக்கு அர்ச்சுனன் இணங்காணாமல் போகவும், தன்னிட ஆடை ஆபரணமெல்லாம் உடைத்து கிழித்தெறிந்துவிட்டுக் களவு செய்த

கள்வரைப் போல் பஞ்சணையில் படுத்திருக்கவும் ஆறுமாத காலமாக வேட்டையாடப் போன பேரண்டனானவன் சபைக்கு வருகிறவிதம் எப்படி என்றால்.

### பேரண்டன் கொலுவிருத்தம்

*காட்டினில் வேட்டையாடிக் கனத்ததோர் மிருகமெல்லாம்*
*காவடி தோளில் மாட்டிக் கனத்ததோர் வலையும் கொண்டு*
*சேவகனென்று சொல்லி ஜெகமெல்லாம் ஆர்ப்பரிக்க*
*கெண்ட பேரண்டன் சபையை நாடி கர்ஜித்து வருகின்றேனே.*

### வசனம்

அதாவது எப்படியென்றால் கெண்ட பேரண்ட ராச்சுதனானவன் ஆறுமாத காலமாக வேட்டையாடிக்கொண்டு வேண்டிய மிருகங்களையெல்லாம் கொன்று முன் பின்னுமாகக் காவடித் கட்டி தோளில் மாட்டிக் கொலுவுக்கு வருகும் விதம் எப்படி என்றால்.

### பேரண்டன் பாட்டு (சிந்து)

1. *காட்டானை யாளி சிம்மம் வேட்டையாடி – மன்னன்*
*கருமலை பருவதம்போல் பேரண்டன் வாரேன்*

2. *சிங்கம் சீரும்புலிகள் வேட்டையாடி மன்னன்*
*செம்மலை பருவதம்போல் பேரண்டன் வாரேன்*

3. *மானு மயல் அன்னம் வேட்டையாடி மன்னன்*
*மரகதம் போல் மூட்டை போட்டுப் பேரண்டன் வாரேன்*

4. *பன்றிப்பல மிருகம் வேட்டையாடி மன்னன்*
*பின்னே ஓர் மூட்டை போட்டுப் பேரண்டன் வாரேன்*

5. *வந்ததொரு காவடியை வாசலிலிரைக்கி*
*விந்தையாய்க் குனிந்து பார்த்து வீட்டில் புகுந்தான்*

6. *மதம் பிடித்த பேரண்டச்சி படுத்திருப்பதைக் கண்டு*
*இது என்ன காரணமென்று எழுப்பலுற்றான்.*

**பேரண்டன் விருத்தம்**

*பெண்ணேபெண்ணே வஞ்சியாரே இன்னும் தூங்குகிறாய்*
*கொண்டு வந்த மிருகமெல்லாம் தின்ன எழுந்திடும்*

**பேரண்டி**

*வன்னங்கெட்ட படுவனே நீ என்னை ஏனெழுப்புறாய் நீ*
*வருவோருக்கும் போவோருக்கும் பெண்டாளவைத்து*

**பேரண்டன்**

*உன்னை யென்ன சொன்னேனென்று என்னை ஏசுறாய்*
*உத்தமியே பத்தினியே தின்ன எழுந்திடும்.*

**பேரண்டி**

*காலு கடுக்குதையா என் பக்தாவே*
*கண்விழிக்கக் கூடலையே ஓ ராச்சுதனே*

**பேரண்டன்**

*ஆரடி அடித்தவர்கள் பெண் மயிலே*
*அக்கரமம் செய்தவனைச் சொல்லு கொல்லுறேன்*

**பேரண்டி**

*கொல்லுகிறேன் என்று நீரும் சொல்ல சொன்னீரே*
*கொற்றவரே என்னவென்று சொல்லப் போகுறேன்*

**பேரண்டன்**

*காட்டாய் அவனை இப்போ பெண்மயிலே*
*காலனுக் கிரையிடுவேன் மாமயிலே*

**பேரண்டி**

*தடத்திலே வீட்டைக்கட்டி ஓ.... ராட்சதரே*
*தவசியரைப் பெண்டாள வைத்தாய் பேரண்டனே.*
*வழியிலே வீட்டைக்கட்டி ஓ.... 'ராட்சதரே*
*வருவருக்கும் போவருக்கும் பெண்டாய் வைத்தாய்*
*நீ போனாய் என்னை விட்டு கானகம் தேடி*
*என்னழகைக் கண்ட பேர்கள் விட்டுப் போவாரோ*

### பேரண்டி விருத்தம்

*ஏது நீ பேரண்டா இப்போது இங்கு வந்து*
*மானிடன் ஒருவன் என்னை வலுவினில் தழுவி இப்போ*
*ஈனமே செய்து போனான் இதற்கு நானென்ன செய்வேன்*
*நானுமே பிழைப்பதில்லை நாதனே உயிர்விடுவேன்.*

### பேரண்டி வசனம்

ஆனால் மன்னா நீயோ என்னை விட்டுக் கானகம் செல்லுகிறாய், இந்த வழியில் யாரோ ஒரு சன்னியாசியானவன் கைலங்கிரி வழியைப் பிடித்துப் போகாமல், இங்கு வந்து என்னைச் செய்யாத பங்கமெல்லாம் செய்து என்னை ஆலிங்கனம் செய்தான். ஆகலால் என் உடம்பெல்லாம் புண்ணைப்போல் நோகிறது. இப்பொழுது நான் பிழைப்பதே இல்லை மன்னா.

### பேரண்டன் வசனம்

கேளும் பெண்ணே ராச்சதி! ஆகட்டும் அந்தச் சண்டாளனை விடப்போவதில்லை. நான் கொண்டு வந்த மிருகமெல்லாம் விணாக நாறிப் போகிறது. மெல்ல எழுந்து சாப்பிடுவாயடி என் கண்ணே.

### பேரண்டி பாட்டு (அடதாளம்)

1. *காலையிலே எழுந்திருந்து காலுங்கையும் சுத்தம் செய்தாள்.*
   *பாலுகொண்டு பல்விளக்கி ஓலை கொண்டு நாவலுத்தாள்.*
2. *ஆனை ஒரு பத்துத் தின்றாள் 60வது கடமை தின்றாள்*
   *புலி ஒரு நூறு தின்றாள் புள்ளிமான்கள் சேனம் தின்றாள்.*
3. *ஏனம் ஒரு பத்துத் தின்றாள் எழுபது கடமை தின்றாள்*
   *மானொரு ஆயிரம் தின்றாள் மட்டில்லாத பச்சி தின்றாள்*
4. *பன்றி ஒரு பத்துத் தின்றாள் பல மிருகம் சேனம் தின்றாள்*
   *தின்னதெல்லாம் போதாமலே தன் கணவன் முகத்தைப் பார்த்தாள்.*
5. *மந்திரகிரியை நோக்கி மானிடன் ஒருவன் போறான்*
   *அன்னவனைக் கொன்று தின்றால் ஆறுமையா எந்தன் பசி.*

### பேரண்டன் விருத்தம்

*கொதித்துமே எழுந்திருந்து கோதையைக் கூட்டிக்கொண்டு*
*பதைக்கவே சரீரமெல்லாம் படபடவென்றார் பரித்து*
*துடித்துமே பேரண்டனும் திடமுடன் ஓடிவந்து*
*அதட்டியே போகும்போது அர்ச்சுனன் திரும்பிப் பார்த்தான்.*

### பேரண்டன் வசனம்

அடே கேளடா சன்யாசிப் பயலே. நீ இந்த வழியே வந்ததுமில்லாமல் என் மனைவியை, அழகாய் இருக்கிறாளென்று செய்யாத பங்கமெல்லாம் செய்து போகிறாயடா நில்லாடா நில் மடப் பயலே

### அர்ச்சுனன் பாட்டு (ஜம்பை) தாம் ததிங்கின

*1. உன் பெஞ்சாதி நீலியோடா – ஓம் அரகர*
*நீ பிழைப்போக வந்தாயோடா.*

*2. உன்னுடைய மனைவியாலே*
*உன் பொன்னுயிரைப் போக்க வேண்டாம்.*

*3. கன்னியர்கள் பேச்சைக் கேட்டு விண்ணில்*
*கனம் குலைந்தார் கோடியுண்டு.*

*4. ஆணாலே கெட்ட பேர்கள் ஆருமில்லை வையகத்தில்.*

*5. பெண்ணாலேதான் கெட்ட பேர்கள், கோடியுண்டு வையகத்தில்.*

*6. மாதவியாள் வார்த்தைக் கேட்டு*
*மதிகெட்டலைந்தான் கோவலனும்.*

*7. சூர்ப்பணகை பெண் பிறந்து, சுகமிழந்தான் ராவணனும்.*

*8. அரிச்சந்திரன் பெண்ணாலேதான் அரசிழந்தான் அந்த நாளில்.*

*9. பத்தினியாள் பெண் பிறந்து, பாரதங்கள் உண்டு செய்தாள்.*

*10. வேண்டாமப்பா ராச்சுதனே*
*உன் வாழ்மனைக்குப் போய்ச் சேராயோ*

## அர்ச்சுனன் தீபதை

*முன்னாளில் அரக்கன் இரணியன் முப்புறாதியர்*
*பின்னாலே அசுரன் பேரனும் ராவணன் பெண்ணாலல்லோ*
*சொன்னாலே கேளான் வாலி தந்துமி அழிந்தான்*
*தன்னாலே தான்கெட்டுப் போவார்காண் ரத்தின சபாபதியே!*

## வசனம்

ஆனால் கேளும் பிள்ளாய் ராட்சுதா! முன் கிரேதாயுகத்திலே இரணியனானவன் பூமாதேவியின் வார்த்தையைக் கேட்டு நரசிம்மத்திற்கு இரையானான். அப்பால் பின் திரேதாயுகத்திலே இராவணனானவன் தனது தங்கையாகிய சூர்ப்பணகையின் வார்த்தையைக் கேட்டு ஸ்ரீராமர் கோதண்டத்திற்கே இரையானான், அப்பால் வாலியென்று சொல்லக்வடிய சூரன் தனது பெஞ்சாதிக்காக அவனும் ஸ்ரீராமர் பாணத்திற்கே இரையானான். அதுபோல் உன் பெஞ்சாதியால் நீயேன் கெடப்போகிறாய் வேண்டாமப்பா ராச்சுதா!

## அர்.தரு

1. *பழியெனப் பொழுதே வனதத்திடும் பச்சை நாவியை நம்பலாம்*
   *பழி நமக்கென வழிமறித்திடும் பழைய நீலியும் நம்பலாம்*
2. *கொடுமதற்கென எனைவதைத்திடும் குஞ்சரத்தையும் நம்பலாம்.*
   *குலுங்கப் பேசியே நகை நகைத்திடும் குமரர் தம்மையும் நம்பலாம்.*
3. *கடையிலக்கமும் எழுதிவைத்திட்ட கணக்கர்*
   *தம்மையும் நம்பலாம் காக்கை போல் விழிகாத்திடும்*
   *குழி காணியாளரையும் நம்பலாம்.*
4. *நடைகுலுக்கி முகம்மினுக்கி நகை நகைத்திடும் மாதரை*
   *நம்புன்னாதுமெய், நம்புன்னாது மெய், நம்புன்னாது மெய்*
   *காணுமே.*

## ஆர். தீபதை

*வெம்புவாள் விழுவாள் பொய்யோ மேல் விழுந்தழுவாள் பொய்யே*
*தம்பலம் தின்யேனென்பாள் கூடவே சாகுறேன் என்பாள் பொய்யே*

*அம்பினுங் கொடிய கண்ணாள் ஆயிரம் சிந்தையாளை நம்பின பேர்களெல்லாம் நாய்போலத் தயங்குவாரே.*

**அர்.பாட்டு (அடதாளம்)**

1. *ஆலகால விஷத்தையும் நம்பலாம்,*
*ஆற்றையும் பெருங்காற்றையும் நம்பலாம்*

2. *கோலமாமத யானையையும் நம்பலாம்*
*கொல்லும் வேங்கைப் புலியையும் நம்பலாம்.*

3. *காலனார் விடும் தூதரை நம்பலாம், கள்ளர், வேடர், மறவரை நம்பலாம்.*

4. *சேலை கட்டிய மாதரை நம்பினால்*
*தெருவில் நின்றுதான் திகைப்பார்.*

**அர். தீபதை**

*வஞ்சி சூர்ப்பணகையாள் பேச்சை வல்ல ராவணனும் கேட்டு*
*கொஞ்சியே சீதைதன்னைக் கொண்டுபோய் வனத்தில் வைத்தான்*
*மிஞ்சியே சேனையெல்லாம் வீணுக்கே பறிகொடுத்தான்*
*பஞ்சியில் தீப்பட்டாற்போல் பட்டதும் அறியாயோடா*

**வசனம்**

ஆனால் கேளும் பிள்ளாய் ராட்சதா! அந்த சூர்ப்பணகைப் பேச்சைக் கேட்டு இராவணன் சீதையைக் கொண்டுபோய்ச் சிறை வைத்தான், அதனால் இராமனுடைய பாணத்தினால் தன் சேனையாரும் இலங்கையோடும் தானும் மாண்டு மடிந்தான். அதுபோல் உன் பெஞ்சாதி வார்த்தையைக் கேட்டு வீணாய் மடிய வேண்டாம் நீ ராச்சதா.

**பேரண்டன் வசனம்**

அல்லடி பெண்ணே ராச்சதி இந்த சன்யாசி சொல்வதைப் பார்த்தால், நீதியாய் தெரிய வருகிறது. சன்யாசி முகம் இருக்கிறது உன் கண்ணாடி இருக்கிறது நேருக்குநேர் சொல்லடி பெண்ணே!

## பேரண்டி தரு (ஜம்பை)

1. *நான் என்னவென்று மன்னா சொல்லப்போறேன்*
*இந்தப் பாவி என்னை மன்னா செய்தகுறை.*

2. *சன்யாசி மன்னா இவர்தானென்று; சரணங்களும்*
*மன்னா செய்தேனையா.*

3. *ஏகாங்கி மன்னா இவர் தானென்று; எதிரே நின்று*
*மன்னா சேவித்தேனே*

4. *தள்ளித்தள்ளி என்னைக் காலில் உதைத்தான்;*
*தலைமயிரைப் பாவி பிடித்திருந்தான்*

5. *முந்தானியை மன்னா பிடித்திழுத்து*
*மோகமயில் தன்னைத் தீருமென்றான்*

6. *நான் மட்டேனென்று மன்னா சொன்னேனையா;*
*மல்லுக்கட்டி மன்னா இழுத்தானையா*

7. *நான் பத்தினியும் மன்னா ஆனபடியால்*
*பார்வதியும் என்னைத் தப்பவைத்தாள்.*

8. *நான் உத்தமியும் மன்னா ஆனபடியால்*
*உமையவளும் என்னைத் தப்படித்தாள்*

## பேரண்டி விருத்தம்

*ஏது நீ பேரண்டனே எனக்கு நீ புருஷனானால்*
*எத்தனை கொடுமை செய்த இயலுள்ள விஜயன் தன்னை*
*அந்தமாம் ஜங்குமனை அவன் தலை அறுத்து வந்தால்*
*சிந்தையே எண்ண வேண்டாம் வெற்றி பெற வாழலாமே*

## பேரண்டி வசனம்

கேளும் சாமி என்னைக் கொடுமை செய்த சன்யாசியின் தலைதனை அறுத்து வந்து நம் தலைவாசலில் கட்டினால் தான் எனக்கு நீ கணவன், உனக்கு நான் மனைவி. இல்லாவிடில் ஆகாது மன்னா.

## பேரண்டன் தரு.

1 *வெளுத்த பல்லையும் கடித்துக் கொண்டான்;*
*வில்லம்பைப் பூட்டிக் கொண்டான்*

2 *ததும்பி உதும்பி எழுந்துக் கொண்டான்;*
*கல்மலைகளை பிடுங்கிக் கொண்டான்*

3. *கிட்டிவிழ பூமாதேவி கிடுகிடென்று தானதிர அண்டகோளம்*
*அதிரத்தாண்டிக் கெண்ட பேரண்டன் வருகின்றேன்.*

## பேரண்டன் விருத்தம்

*ஆரடா மனைவி தன்னை அடவியில் தழுவிப் போறாய்*
*போறவன் நில்லடா உன்னைப் பொடிப் பொடியாகச் செய்வேன்*
*கூறடா வாய் திறந்து உன்னைக் கொல்லாமல் விடுவதில்லை*
*நேரிட்டு வில்வளைத்துப் பேரண்டன் எதிரிலே நின்று*
*கொண்டான்.*

## வசனம்

அடே கேளடா சன்யாசி! என் மனைவி சொன்னது நிஜமாகத் தெரிகின்றது. நீ சொல்வது சுத்தப் பொய்யாகத் தெரிகின்றது. ஆனால் நீ சத்திரியனானால் சண்டைக்குவா, சூத்திரனானால் ஓடிப்போடா சன்யாசி பயலே.

## அர். வசனம்

ஆனால் பார்த்தான் அய்யனான அர்ச்சுனனானவன். இந்த மட்டி ராட்சுதனுக்கு எத்தனை உவமைகள் சொன்னாலும் கேளாமல், சத்திரியனானால் சண்டைக்குவா, சூத்திரனானால் ஓடிப்போடாவென்று சொன்ன உடனே அர்ச்சுனனுக்கு அவலரிக்கண்கள் செவலரிபூத்து, நீலமுழிக் கண்கள் நெருப்புத் தணலாகி கோபாக்கினி வடவாக்கினி மீறி ராட்சதனுடன் சண்டை செய்வது எப்படி என்றால்.

## அர்ச்சுனன் பேரண்டன் தர்க்கம் (நொண்டி சிந்து)

*தத்தினம் தான தான தானனா*
*தத்தினித்த நித்தான தான தானனா*

*அர்–* ஒருவருக்கு ஒருவர் தானையா இந்த மன்னவர்கள்
யுத்தபோர் செய்கிறார்களே தந்தானனா

*பேர–* தோள்களோடு தோள்கள் தாங்கியே இந்த மன்னவர்கள்
தொடர்ந்து போரு செய்கின்றார்களே தந்தானனாம்.

*அர்–* மார்களோடு மார்கள் தாங்கியே இந்த மன்னவர்கள்
மல்லுப்போரு செய்கின்றார்களே தந்தானனாம்

*பேர–* வேராய் மலையைத் தான் பிடுங்கியே தை பேரண்டனும் வீசி
எறிந்தான் விஜயன் பேரிலே தந்தானனாம்.

*அர்–* விட்ட தொரு மலைகள் தன்னையே தை அர்ச்சுனனும் சுட்டு
பஸ்பம் போலச் செய்தானாம் தந்தானனாம்.க

*பேர–* ஏழு ஜோடி எக்கு மலைகளைத் தை பேரண்டனும்
எடுத்தெறிந்தான் விஜயன் பேரிலே தந்தானனாம்

*அர்–* விட்டதொரு எஃகு வசிகளைத் தை அர்ச்சுனனும்
விமலன் மந்திரம் ஜெபித்துப் போக்கினான் தந்தானனா

### அர்ச்சுனன் வசனம்

ஆனால் கேட்டீரோ பெரிய நாதாக்களே! இந்த ராட்சதன் குத்தின குத்தானது அர்ச்சுனனுக்குக் கோடையிடி எவ்வாறாகத் தாக்குகிறதோ அவ்வாறாகத் தாக்க. அப்போது அர்ச்சுனன் தனது அண்ணாவாகிய தருமராாசன் கொடுத்த சூடாமணி நீதிநூல் சாஸ்திரத்தை எடுத்து வாசித்துப் பார்த்தானாம், அதிலே ஒ தம்பி அர்ச்சுனா நீ கைலங்கிரிக்குப் போகும் வழியிலே புற்றின்மேல் படுத்திருந்தால் பாம்பென்று விட்டுவிடு, மரத்தின் மேல் இருந்தால் பச்சியென்று விட்டுவிடு, கையெடுத்து வந்தனம் செய்தால் பிள்ளையென்று விட்டுவிடு, எதிர்த்து வந்தால், காராம்பசுவானாலும்

கொன்றால் பாவமில்லை என்று எழுதி இருந்ததாம். அதை வாசித்துப் பார்த்த உடனே அய்யனான அர்ச்சுனனுக்கு அவலரிக் கண்கள் செலரிப்பூத்து நீலமுழிக் கண்கள் நெருப்புத்தணலாகி கோபாக்கினி வடவாக்கினி மீறி ராட்சதன் மேல் அக்கினி அஸ்திரத்தைத் தொடுக்கும் விதம் எப்படி என்றால்.

*தந்தா நந்தினம் தான தானனாம் தந்தானனாம்*
*தந்தி நத்தம் நித்தான தான தானனாம்*

**அர்ச்சுனன் – தரு**

1. *விட்டபாணம் போற சத்தமே தை அர்ச்சுனனும்*
   *விண்ணும் மண்ணும் தானதிரவே தந்தானனாம்*

2. *பட்டவன் உடலறுந்து தினனாம்*
   *பூமியில் விழுந்தான் இரண்டு துண்டாய்*
   *ஓம் அரகர மகாதேவா.*

**பேரண்டன் வசனம்**

ஓ.... பெண்ணே ராட்சதி உன் வார்த்தையைக் கேட்டு சன்யாசி கையில் மாண்டேனே.

**பேரண்டச்சி புலம்பல் – அடதாளம்**

– என்ன செய்வேன் மன்னா! ஏது செய்வேன்?

– எப்படி நான் பிழைப்பேன் பேரண்டனே!

– சன்யாசி மன்னா உன்னைக் கொல்ல; சங்கரிக்க மன்னா வல்லவனோ!

– நான் ஆசையாகி மன்னா எதைக் கேட்டாலும்; அக்கணமே பேரண்டா மிக தருவாய்.

– நான் பேசினதெல்லாம் மன்னா பிழை பொறுப்பாய்; பேரண்டனுக்கு மன்னா சரிவருமோ

– ஆனைப்புலி உன்னைக் கொல்லுமோதான்; ஆளி சிங்கம் உன்னை தின்னுமோதான்.

– மானிடவன் மன்னா உன்னைக் கொல்ல; மாயமென்ன கெண்ட பேரண்டனே!

**பேரண்டச்சி வேறு தரு – ஆதிகையிலாயம் மெட்டு**

– என்னா நான் செய்வேன் எப்படி ஆறுவேன் ஒ... பேரண்டனே!

– என் பிராண நாதருக்கு இப்படி வந்ததோ ஒ... மன்னவரே!

– எங்கேயோ வானம் இடிந்ததென்றிருந்தேன் ஒ... தெய்வமே!

– தப்பாமல் வானமது என் தலைமேலே இடிந்ததே ஒ... பிரம்மதேவா!

– மாதவனுன்னைக் கொல்ல மாயமென்னவோ ஒ... தெய்வமே!

– மதிமோசம் வருமென்று அறியாமல் போனேன் ஒ... மன்னவரே!

– குங்குமம் மார்பினில் கூரம்பு தைத்ததோ ஒ.. மன்னவரே!

– என்னைப்போல் பெண்களுக்கு நான் இடையே போய் நிற்கலானேன் ஒ!... மன்னவரே!

– மாங்கல்யம் இழந்து மண்மேல் நிற்கலானேன் ஒ.. மன்னவரே!

**வசனம்**

அதாவது எப்படி என்றால் பேரண்டக் கன்னியானவள் கானகத்தில் புலம்பிக் கொண்டிருக்க தெய்வலோகத்துக் கன்னிகள் வந்து ஒ. அம்மா ராட்சதி! நீ இந்த கானகத்தில் ஒண்டியாகப் புலம்ப வேண்டிய காரணம் யாது சொல்லுமம்மா ராட்சதி!

**பேரண்டி வசனம்**

ஆனால் கேளுமம்மா கன்னிமார்களே! நானோ அர்ச்சுன மகாராஜன் மேல் மோகித்து அவரைச் சேரச் சென்றேன். அவர் மறுத்தபடியால் என் கணவனைச் சண்டைக்கு ஏவினேன். என் புருஷன் அவரை எதிர்த்துச் சண்டை செய்து இறந்து விட்டார். நான் என்ன செய்வேனம்மா கன்னிமாரே!

### கன்னி. வசனம்

ஆனால் கேளுமம்மா ராட்சதி! உன் கணவனை எழுப்பித் தருகிறோம். பயப்பட வேண்டாம்.

**கன்னிமார்:** ஓ.... அர்ச்சுனா!

**அர்ச்சுனன்:** ஏனம்மா நீங்கள் யார்?

**கன்:** நாங்கள் தேவலோக மாதர்கள்

**அர்:** ஆனால் என்னிடம் நீங்கள் வந்த காரணம் என்ன?

### கன்னிமார் வசனம்

நாங்கள் இந்த வனத்தில் ராட்சசி அழும் சத்தம் கேட்டு வந்தோம். அவளை விசாரிக்கும் அளவில் உன்மேல் நிந்தனை சொல்லுகிறாள். அதனால், நீ தவம் செய்யப் போகின்ற படியால் இந்தப் பேரண்டனை எழுப்பி விட்டுத்தான் போக வேண்டும். இல்லை என்றால் கடவுள் வந்து உனக்கு வரம் கொடுக்க மாட்டார் தம்பி அர்ச்சுனா!

### அர்ச்சுனன் விருத்தம்

*அந்த வாய் வாஸ்திரம் தனை எடுத்து வகையுடன் உச்சரித்துக்*
*கெண்ட பேரண்டன் உயிரைக் கீர்தியாய் அனுப்புமென்று*
*விட்டதோர் பாணமது விரைவுடன் வேகமாகி*
*பட்டதோர் துஜக் கம்பத்தில் பாங்குடன் தைத்ததங்கே.*

### அர். வசனம்

ஆனால் கேளுங்கள் பெரிய நாதாக்களே! தெய்வலோகத்துக் கன்னிகள் சொன்ன உடனே தன் வாயுவாஸ்திர முனையில் ஒரு சீட்டானது எழுதிக் கட்டி தூபதீப நெய்வேத்தியம் செய்து விட்டு விட்டானாம்.

அந்தப் பாணமானது விருவிருவென்றேகித் தேவேந்திரன் கொலு சிம்மாசனத்தின் அருகாமையில் உள்ள துஜக்கம்பத்தில் போய்த் தைத்ததாம். அந்தக் கம்பமானது யாது காரணமாக இருக்கின்றதாம் என்றாலோ அந்தக் கம்பத்தில் ஏழு ஆராய்ச்சி மணி கட்டி இருந்ததாம்.

ஏழு உலகத்தில் ஓர் உலகம் அழிவதாய் இருந்தால் ஒரு மணியடிக்குமாம். ஏழு உலகமும் அழிவதாய் இருந்தால் ஏழு ஆராய்ச்சி மணிகளும் கணகணவென்று சப்திக்குமாம்.

இந்தப் பாணமானது போய்த் தைத்த உடனே ஏழு ஆராய்ச்சி மணிகளும் கணகணவென்று முழங்கியதாம். அதைக்கேட்ட தேவேந்திர மகாராசன் தன் குமாரனாகிய சித்திர சேன மகாராசன் இது என்ன ஏழு உலகமும் அழிந்துவிட்டது போல் தெரிகிறதே என்று ஓடிவந்து பார்க்க ஒரு பாணமானது துஜக்கம்பத்தில் தைத்து இருப்பதைக் கண்டு இரு கைகளாலும் பிடித்து இழுத்தானாம். அப்பவும் வரவில்லையாம், குதிரையைக் கட்டி இழுத்தும் வரவில்லையாம், ஆனைகளைக் கட்டி இழுத்தும் வரவில்லையாம். பார்த்தான் சித்திரசேனன், இந்த அஸ்திரமே இவ்வளவு பலமாக இருக்கிறதே! அந்த அஸ்திரத்தை விட்ட ராஜன் எப்படிப்பட்ட பலசாலியாய் இருக்க வேண்டுமென்று ஓடித் தன் தந்தையாகிய தேவேந்திர ராசனுக்குச் சொன்னானாம்.

அதைக்கேட்ட தேவேந்திர மகாராசன் நந்தவனத்தில் புகுந்து நல்லமலர்களைக் கொய்து இரு கரத்திலும் ஏந்திக் கொண்டு, துஜக்கம்பத்தை வலதுசாரி இடதுசாரியாக முன்சாரி பின்சாரியாக வந்து பூக்களோடு இருகரத்தையும் ஏந்தினானாம் தேவேந்திரன்.

அப்போது அந்தப் பாணமானது தேவேந்திரன் கரத்தில் வந்து விழுந்ததாம் அப்பாணத்தின் வாலில் கட்டியிருந்த லிகிதத்தை எடுத்து வாசித்துப் பார்த்தானாம். அதில் என்னவென்று எழுதி இருந்ததாம் என்றாலேயோ, "ஓம் அப்பா தேவேந்திர மகாராசனே! நான் கைலங்கிரி மலைக்கு ஜெகதீசனை நோக்கி தவம்புரியச் செல்லும் வழியில் எட்டாவது வனத்தில் கெண்ட பேரண்டனைக் கொன்றுவிட்டேன். அந்த உயிரானது உம்மிடம் வந்திருக்கிறது. அதை இன்னும் அரைமணி நேரத்திற்குள்ளாகத் தேடிப்பிடித்து அதை ஓர் பரனில் அடைக்கலம் செய்து யான் விட்டிருக்கும் அஸ்திர முனையில் கட்டி என்னிடத்தில் பூலோகத்தை நாடி அனுப்பினால் ஆச்சுது. இல்லாவிடில் முன் காண்டாவனத்தை எவ்வாறாக எரித்தேனோ அவ்வாறாக அந்த அமராபதி என்னும் தெய்வலோகத்தை ஓர் பாணத்தால் தும்சம் செய்து விடுவேன்" என்று எழுதி இருந்ததாம்.

அதை வாசித்துப் பார்த்த உடனே தேவேந்திரன் திடுக்கிட்டு அரனை வென்றாலும் வெல்லலாம். அந்த அர்ச்சுன மகாராசனை வெல்ல நம்மால் முடியாதென்று தன்மகன் சித்திர சேனனை அழைத்து அந்த உயிரைப் பிடித்து வரும்படி சொன்னானாம். அந்த சித்திரசேன மகாராசனானவன் எமனுக்குச் சொன்னானாம். எமனானவன் எம கிங்கிலியரை அழைத்துப் பேரண்டன் உயிரைப் பிடித்து வரும்படி சொன்னானாம். எமகிங்கிலியர் காடு செடி வனாந்திரங்களெல்லாம் தேடிப் போகும்போது அந்த உயிர் எங்கே இருந்ததென்றால், பெருங் காணாற்றுக் குகையில் பெரும் பாறாங்கல்லை எடுத்து அமித்தி வைத்திருந்ததாம். அந்த உயிரை எடுத்து வந்து எமனிடத்தில் கொடுக்கவும், எமனானவன் சித்திர சேனனிடத்தில் கொடுக்கவும், சித்திர சேன மகாராசன் தேவேந்திரனிடத்தில் கொடுக்கவும் தேவேந்திர மகாராசன் அந்த உயிரை எடுத்து ஓர் பரனியில் அடக்கம் செய்து தீர்த்தமும் திருமாலையும் அந்தப் பாணத்தின் வாலில் கட்டி அர்ச்சுனனிடம் போவென்று அனுப்பினானாம்.

அந்தப் பாணமானது பூலோகம் நாடி அர்ச்சுனனிடம் வந்து சேர்ந்ததாம். அப்போது அர்ச்சுன மகாராசன் அந்த உயிரை எடுத்துப் பேரண்டனுக்கு உயிர் கொடுத்து எழுப்பும் விதம் எப்படி என்றால்.

**கன்னிமார் வசனம்**

கேளுமம்மா ராட்சதி! உன் கணவன் உயிர் அர்ச்சுனனிடம் வந்திருக்கிறது நீ போய் மடிப்பிச்சை கேளுமம்மா ராட்சதி!

**பேரண்டச்சி பாட்டு – அடதாளம்**

1. *மதனப்புறா எந்தன் பிராண நாயகா!*
   *உன்னை விட்டு மனம் துணிவேன். சாம்பசிவனே!*

2. *எந்தன் கணவனுடன் இயலுடன் வாழ்ந்திருக்க ஓ.... அர்ச்சுனா!*
   *ஓ.... பார்த்திபா!*

3. *முந்தானைப் பிச்சை முதல் பிச்சை தாருமையா ஓ.. அர்ச்சுனா!*
   *ஓ... பார்த்திபா!*

4. *நீலிநான் செய்த பிழை நீ பொறுக்க வேண்டுமையா*
*ஒ... அர்ச்சுனா ஒ..... பார்த்திபா!*

5. *பாவிநான் செய்த பிழை பார்த்திபா பொறுக்க வேண்டும்*
*ஒ... அர்ச்சுனா... ஒ.... பார்த்திபா!*

6. *முன்னே இருந்ததுப்போல் என் கணவனை எழுப்புமையா*
*ஒ... அர்ச்சுனா... ஒ... பார்த்திபா!*

**அர். வசனம்**

*ஆனால் கேளுமம்மா ராட்சதி! மொகுடு செச்சனா*
*முண்டலுக்கு புத்தி வொச்சனா*

இன்னும் காலோடு கால் சேர்த்தும், தலையோடு தலை சேர்த்தும் உடலோடு உடல்சேர்த்தும் இந்த மூன்று மணியாங்கல்லைப் போட்டு இந்தத் தீர்த்தத்தைத் தெளித்து, இந்தப் பிரம்பினால் தட்டம்மா ராட்சதி.

**பொது வசனம்**

அப்போது பேரண்டன் எழுந்து ஆனைக்கும் அஞ்சாத சிங்கம்போல் எழுந்து ஒடி வருகிற விதம் காண்க.

**பேரண்டச்சி வசனம்**

வேண்டாம் வேண்டாம் சுவாமி ராச்சுதா! என் மதத்தினால் நான் அவர் பேரில் மோகித்துச் சேரும்படியாக வினாவினேன். அவர் எனக்கு இணங்காமல் போனதால், நான் இவ்விதம் பொய் சொன்னேன். என் சொல் தவறாமல் நீ அவரோடு சண்டை செய்து அவர் உன்னைக் கொன்றுவிட்டார். அவர் தான் நமக்கு தெய்வம், நாம் இவ்வனத்தில் ஜீவிக்க வேண்டி முந்தானி பிச்சை கேட்போம் வாரும் என் நாதா!

**பேரண்டன் வசனம்**

அகோ வாரும் சுவாமி சன்யாசியே! நான் செய்த பிழைப் பொறுத்து எனக்கு முந்தானிப் பிச்சை தாரும் சுவாமி.

### அர்.தரு

*புத்தி உண்டாய் பிழை பேரண்டா இனிமேல்*
*புத்தி உண்டாய் பிழை பேரண்டி*
*இந்த வனந்தன்னில் எவர்களையானாலும்*
*எதிர்க்காமலே நீங்கள் இன்பமாய் வாழுங்கள்.*

### அர். வசனம்

ஆனால் பேரண்டா! அம்மா, பேரண்டச்சி! என்னைப்போல் இவ்வனத்தில் எத்தனையோ தபோதரர்கள் வருவார்கள். என்னைச் செய்தாற்போல் அவர்களைச் செய்ய வேண்டாம். அறிவோடு இவ்வனத்தில் வாழ்ந்து கொண்டிருங்கள். எனக்குச் சந்தோசமாக விடை தாருங்கள் நான் வருகிறேன்.

### அர்ச்சுனன் தீபதை

*காந்தகன் தன்னை எழுப்பி அப்புறம் நடக்கும்போது*
*சந்திர சேகரர் பாதத்தைத் தயவுடன் மனதி லெண்ணி*
*விந்தையாய் மயில்களாடும் வினோதத்தைப் பார்த்துக் கொண்டு*
*இந்திர நீல வேடுவன் இருக்கின்ற வனம் புகுந்தான்.*

## இந்திர நீல வேடுவன் வனம்

ஆனால் கேளுங்கள் பெரியோர்களே! ஐயனான அர்ச்சுனன் பேரண்டனுக்கு உயிர் கொடுத்து எழுப்பி விட்டு ஒன்பதாவது வனமாகிய இந்திர நீல வேடுவன் வனத்தில் கால் வைத்தானாம் விஜயன்.

### அர். தரு

1. *இந்திர நீல வனந்தனிலே, அர்ச்சுனனும் ஏகி (ஓம் அரகர),*
   *இருக்கும் அந்த அதிசயத்தை இயலுடனே கண்டான்*
2. *சந்தன விருட்சம் குளாஞ்சிதன்னைக் கழுகு*
   *தாமரையும் நாரைகளும் தான் நிறைந்திருக்கும்*
3. *மந்திக்கூட்டம் பலாப்பழத்தை மரத்தில் ஏறி அறுத்து*
   *வகுத்துமே சுளையைத் தின்று மகிழ்ச்சியாய்க் கூத்தாடும்*

*4. அந்தவன படித்துறையில் ஆணாஸ்திரி குளமாம்*
*அன்னப்புறா மாடப்புறா அமர்ந்து நிறைந்திருக்கும்*

*விந்தையாய் விளையாடுமயில் வேடிக்கையைக் கண்டான்.*
*வேன மதயானை வந்து விளையாடுவதைக் கண்டான்.*

*5. செங்கழனி வெங்கழனி அல்லி நெல்லித் தோப்பாம்,*
*செந்தாமரை வெண்தாமரை சேர்ந்து நிறைந்திருக்கும்.*

*6. எந்தத் திக்கு பார்த்தாலும் தவசுகளும் ரிஷியும், இவ்விடமே*
*நிச்சயமென்று எண்ணி மனம் துணிந்தான்*

*7. புல்லும் சிறுவணமுமிது பெருகிடும் கதிரொளியும்,*
*வெள்ளிங்கதிர் ஒளியுமாக வெள்ளிங்கிரியைக் கண்டான்*

*8. எடுத்தான் மலர் இரைத்தான் உடல் அழித்தான் உடன்*
*குதித்தான் இந்த மலைக்கிணையில்லை என்று*
*எடுத்தான் மலர் இரைத்தான்.*

**அர். தீபதை**

*சரவணப் பொய்கை தன்னில் தானுமே தீர்த்தமாடி*
*நறுமலர் வேண்டியதெல்லாம் வகையுடன் தான் பறித்து*
*பரமனை நினைத்துப் பூசை பாங்குடன் செய்யும்போது*
*திருநீற்றுப் பைக்குள்ளே தோன்றிய கம்பம் தானும்*

**வசனம்**

ஆனால் கேளுங்கள் பெரியோர்களே! ஐயனான அர்ச்சுனன் சரவணப் பொய்கையென்னும் தாமரைத் தடாகத்தில் இறங்கி ஸ்தானபானம் செய்து, ஜபதபங்களை முடித்து, மல்லிகை, முல்லை, இருவாட்சி, வெட்டிவேர், செண்பகம், பாரிசாதம், தும்பை, அருகு, கொன்றை மலர்களைப் பறித்துக் கொண்டு, நான்காவது வனமாகிய காளபைரவ முனிவரிடத்தில் பெற்றுக்கொண்டு வந்த 90 அடிக் கம்பத்தை எடுத்து பூமியிடமாக நிறுத்தினானாம் விஜயன்.

### அர். தீபதை சாலுவராகம்

*செங்கண்மா முதல் யுகந்தனில் தேரகா மணியாம் (மரகதமலை)*
*பொங்கமா திரேதாயுகந்தன்னில் பொருந்தும் பொன்மலையாம்*
*தங்கியே கலியுகந்தன்னிலே கல்சோலையாம்*
*அந்தமாமதில் உள்ளவன் பேரோ... அரவா பரணனென்னும்*
*ஜெகதீசனாம்.*

### அர். வசனம்

ஆனால் கேளுங்கள் பெரியநாதாக்களே! முதல் கிரேதாயுகத்தில் ஒன்பது நவரத்தினங்களும்; பொருந்திய மரகத மலையாய் இருந்ததாம். இரண்டாவது திரேதாயுகத்தில் பொன்மலையாய் இருந்ததாம். மூன்றாவது துவாபரயுகத்தில் வெள்ளிமலையாய் இருந்ததாம். நான்காவது கலியுகத்தில் கல்சோலையாய் இருக்கிறதாம். இந்தக் கயிலை மலை என்னும் திருவண்ணாமலை. அந்த மதில் உள்ளவன் பேரோ அரவாபரணன் என்னும் ஜெகதீசன் என்று சொல்லுவார்களாம்.

### அர். தேவாரம்

*ஓம் அரகரா! போற்றி போற்றி*
*அம்பிகை பாகாய்! போற்றி*
*பரமனே! நீலகண்டா! பார்வதி சமேதா! போற்றி*
*கைதன்னில் மான் மழுவும் கபாலமும் தரித்தாய் போற்றி*
*மெய்யனே! போற்றினேன் என் காசி விஸ்வலிங்கமே*
*போற்றினேன்.*

### அர். தரு. அடதாளம்

1. *போற்று மடியார் முன் தோன்றிடும் பாதனே*
   *உன்னைப் போற்றினேன் போற்றினேன்*

2. *கூத்தனை உதைத்திட்ட பாதத்தை நான் காணப்*
   *போற்றினேன் போற்றினேன்*

3. *ஆனையை உரித்தவா! கையில் மானைத் தரித்தவா!*
   *போற்றினேன் போற்றினேன்*

4. திங்கள் தரித்தவா திரிபுரத் தகனனே
போற்றினேன் போற்றினேன்

5. அரகரா மகாதேவா அம்பல வாணனே
போற்றினேன் போற்றினேன்

6. தில்லையில் ஆடிய வள்ளலே உன்பாதம்
போற்றினேன் போற்றினேன்

7. ஏழையின் தவத்திற்கு இரங்கி வரமருள்
போற்றினேன் போற்றினேன்

**அர். சூர்க்கை**

ஓம் அரகரா பவனே... ஆதியே சோதியே
புரகர பவனே... புண்ணிய மூர்த்தியே
அரி அயன் தேடி ... யாவரும் காணா
வெள்ளை ரிசபம் ... விடைமீதிலேறி
கிள்ளர மொழியாள் ...கௌரியின் பாகா
நாடினேன் உன்பாதம் நல்தவம் தன்னை
ஈடேறக் கண்பாராய் ஏழை பங்காளா
காப்பதுன் கீர்த்தி கருணையா லென்னை
சேர்ப்பதுன் நேர்த்தி சேயேன் கை கூப்பினேன்

**அர். தரு**

கற்பூர தீபார்தி கனகாம்பர யோகாத்தி
ஒப்புற றச்சிஞ்சி ஓம் பரமேஸ்வரா
நின்னைப் பூசை செய்ய வாலரா கண நாயகர்க்கு
நின்னை பூசை செய்ய வாலரா
பூஜலு செய்யஅ வாலா புண்ணிய மூர்த்திக்கு
தையதாக்கிட தரிகிட தோமென
பூஜலு செய்யவாலரு தேவானி பாதம்
பூவாலு கொய்ய வாலரா
காசி கங்கா தீர்த்தமுலு தெச்சி – ஓம் அரகர
காலகண்ட நீக்கு பூஜை சேசி

செம்பங்கி சென்ன செலலு தெச்சி – ஓம் அரகர
சாம்பசிவா நின்ன பூஜை சேசி
செண்டுமல்லி சென்னாராலு தெச்சி – ஓம் அரகர
அரகரா நீக்கு பூஜை சேசி
தெங்காயண்டி பண்டுலு தெச்சி – ஓம் அரகர
தேவதேவா நீக்கு பூஜை சேச்சே
கற்பூர தீபார்த்முலு தெச்சி – ஓம் அரகர
காலகண்டா நீக்கு பூஜை சேசி

**சூர்க்கை**

ஓம் அரகரா அகிலாண்டக் கோடி பிரம்மாண்ட நாயகா
கணகக் குண்டலவதாரா கருநீலகண்டா
அத்தா பித்தா வித்தா கேதுவா விமலா நிமலா
சித்தா நந்தா உன் திருவடி சரணம்
அடியேன் என்னுடைய அருந்தவம் தன்னைப்
படைவிடைமீதில் பார்வதியுடனே
வருவாய் போற்றி வள்ளலே போற்றி தருவாய் மாதவனே
தயாபரப் பொருளே அரவாபரணனே அரகரா போற்றினேனே

**அர். தரு ஓரடி ஜம்பை**

மூலமதில் எழுந்த வாசியே கண நாகயகா சரணம்
முற்றும் எந்தனைக் காக்கும் முதல்வனே ஓம் அரகரா
வேலவர் தனக்கு முன் பிறந்தவா தினைப்புனத்தில் வள்ளியை
விளங்கும் கரிமுக விமலநாதனே ஓம் அரகரா
வைகை யடைக்க மண்ணைச் சுமந்தவா – தென்மதுரை நகரில்
வாசமான சொக்கலிங்கமே ஓம் அரகரா
ஆலகால விடத்தை யுண்டவா... சிவசாம்பசிவனே
அன்றழித்த சந்திரசேகரா ஓம் அரகரா
மல்லிகை முல்லை வில்வமலர் கொய்தேன் சிவசாம்பசிவனே
உன் மலரடி தனைப் பூசை செய்குறேன் ஓம் அரகரா
தும்பை அருகு வில்வமர்க் கொய்தேன் சிவசாம்பசிவனே
தொழுது நானுனைப் பூசை செய்குறேன் ஓம் அரகரா

## கந்தார்த்தம்

*ஓம் அரகரா மல்லிகை முல்லை மணமுள்ள பாரிசாதம்*
*தும்பை அருகு கொன்றை செண்பக மலரும் கொண்டு*
*இந்தச் செல்வனே உன்னை நோக்கி சிவபூஜை செய்தேன்*
*அரோகரா நான் தவமது புரிய*
*மானுந்தன் புடைசூழும் ஏந்திய நாதனே*
*நானுந்தன் அடைக்கலம் நாதனே கண்பாராய்*
*அமிர்த கணேசா அரோகரா நானுந்தன் அடியேன்*

## அர். தீபதை

*பொங்கரமணி பூணும் வேணி நீ*
*சக்கரம் தந்து நீயும் வரமதைத் தந்திட்டாயே*
*நங்கையர் காமமது வந்தணுகாமலே*
*இங்கிதக் கடவுளே எனக்கருள் புரிகுவாயே*

## அர். தரு. ஜம்பை

- *கம்பத்துக்கு பூஜை செய்தான் ஓம் அரகர... கைதொழுதான் அர்ச்சுனனும்*
- *அரகரா அரனேவென்று அரன்மீதில் கேனமானான்*
- *சிவசிவா சிவனே என்று சிவன் மீதில் கேனமானான்*
- *தொண்ணூறடிக் கம்பம் தன்னைச் சுற்றி வந்தான் அர்ச்சுனனும்*

## அர். தேவாரம்

கீழ்வரும் தேவாரம் பாடி வலதுசார் இடதுசாரியாக வலம்வந்து ஐந்தாம் படியில் ஏறி நிற்க வேண்டும்.

1. *ஆரணப் பொருளே போற்றி அகில நாயகனே போற்றி*
*பாரளந்தவனே போற்றி பாண்டவர்கள் தூதா போற்றி*
*வாவென்றழைத்த போது வந்து காத்தவனே போற்றி*
*காரணவஸ்துவான கண்ணனே உன்தாள் போற்றி போற்றி*

2. *திங்கள் செஞ்சடையாப் போற்றி திரிபுரமெரித்தாய் போற்றி*
*மங்கையோர் பாகா போற்றி மான்மழு தரித்தாய் போற்றி*

*துங்க வெள்விடையாய் போற்றி துலங்கு முக்கண்ணா போற்றி*
*எந்தனைக் காத்தருள்வாய் ஈசனே போற்றி போற்றி*

3. *எட்டெழுத்தான மந்திரம் எமன் தன்னை ஜெயிக்கும் மந்திரம்*
*துஸ்டரையடக்கும் மந்திரம் தொல்வினையகற்றும் மந்திரம்*
*இஸ்டமாமறையோர்க் கெல்லாம் இகாம்பரமளிக்கும் மந்திரம்*
*அஸ்டாங்கமளிக்கும் மந்திரம் அரிநமோ வென்னும் மந்திரம்*

4. *துஸ்டரையடக்கும் வேந்தன் சூரனும் கும்பகர்ணன்*
*மட்டில்லா அரக்கர்சேனை வானவர்படையும் கூட்டி*
*அஸ்டதோர் பாணத்தாலே அவன்தலை அறுத்தமாயா*
*வட்டமா கருடனேரி வந்தென்னை ரட்சிப்பாயே*

கம்பத்தின்மேல் (ஓரடி)

*தொண்ணூறடிக் கம்பத்தின்மேல் செம்பூசியை நாட்டி*
*திட்டமான புட்பமொன்று சீருடன் அழுத்தினான்*
*தனது வலது பெரியவிரலை புட்பத்தின்மேல் ஊனித்*
*தனதிடது கால்மடக்கிச் செங்கை ரெண்டும் கூப்பினான்*
*காளபைரவன் கொடுத்த வெண்ணீர்க் கம்பம்தனைச் சுற்றி*
*விட்டநீரு கோட்டையாக வெந்தணல் எழுப்ப*
*மாதவ முனிவரெல்லாம் மனமிரங்கி நடுங்கினார்*

அர். விருத்தம்

*நாதனை நினைத்துப் பூஜை நல்தவம் புரியும் போது*
*மாதவர் முனிவரெல்லாம் மன்னவன் தன்னைப் பார்த்து*
*செய்தவம் அழிப்பதற்கு நீங்களே போய் வாருமென்று*
*ஏதொன்றும் பேசாமல் தான் இருந்தாரே மவுனமாய்*

வசனம்

ஆனால் கேளுங்கள் பெரியோர்களே! நாதனைக் கூடிய சிவபெருமானை நோக்கி அர்ச்சுனன் செய்யும் தவநிலையானது கைலாயங்கிரியே வெந்தணலாகத் தத்தளிக்க அங்கிருக்கக் கூடிய மாதவரும், முனிவரும், ரிஷி ஈசுவரர்களும் அத்தணல் பொறுக்க மாட்டாமல் பரமசிவனிடம் சென்று முறையிட்டார்கள். அப்போது

மௌனமாய் இருந்தாராம் பரமேஸ்வரன். மௌனமாய் இருந்தபோது, மாதவர் முனிவரெல்லாம் சிவனுக்கு அறிக்கை செய்து செய்தவம் அழிப்போமென்ன நவரிஷி ஓடிவந்து நந்திகேஸ்வரனுக்கு உரைக்க அவன்போய் அன்புடன் சிவன்பாதத்தில் பணிந்து கொண்டான்.

### வசனம்

ஆனால் கேளுங்கள் பெரிய நாதாக்களே! சிவபெருமான் மௌனமாய் இருக்கவும் தவரிஷிகள் போய் நவரிஷிக்குச் சொல்லவும் நவரிஷியானவர் நந்தீஸ்வரனுக்குச் சொல்ல நந்தீஸ்வரன்போய் ஜெகதீசன் பாதத்தைப் பணிந்து கொண்டாராம்.

அப்போது நான்கு நடன மாதர்களும் ஜெகதீசனிடம் விடைபெற்றுக் கொண்டு அர்ச்சுனனிடம் போய் நான்கு பக்கமும் சேலையைக் கழற்றி நான்கு கம்பமாகச் செய்து அதன் மேல்நின்று நிர்வாணமாய் நடனம் புரிந்தார்களாம். அப்போது அர்ச்சுனன ஆங்காரமாய்க் கொடூர கோபங் கொண்டு விபூதி பஞ்சாட்சரத்தை எடுத்து நான்கு பக்கமும் ஊதினாராம். ஊதின உடனே நான்கு சேலையும் எரிந்து சாம்பலாய் விடவும் நான்கு மாதர்களும் தெய்வலோகம் செல்ல வெட்கமடைந்து அவையவங்களைக் கைகளால் மூடிக்கொண்டு ஓடிவிட்டார்களாம்.

### அர். தீபதை

*சூரியன் நேர்கிழக்கு சுழல்காற்று வலமாய் மோத*
*வாமரியும் தெற்கில் மின்ன வாரணமும் சொரிய மேற்கே*
*காரிருள் குழம்பிமின்ன, கண்களால் பொரி பறக்க*
*பேரிடி இடிந்துவிழப் பிடித்தனன் விஜயன் தானும்*

### அர். வசனம்

ஆனால் கேட்டீரோ பெரியோர்களே! கிழக்கு திசையில் இருக்கக்கூடிய சூரிய பகவானும் மேற்கில் இருக்கக்கூடிய வருணபகவானும், வடக்கு திசையில் உள்ள வாயுவும் தென்திசையில் இருக்கக்கூடிய அக்கினியும், இந்த நான்கு தேவர்களும் ஜெகதீசனிடம் சென்று சன்யாசியின் தவத்தை அழித்து விடுகிறோமென்ன

அவ்வாறாகவே அழித்து வாருங்கள் என்று தாம்பூலம் தந்து அனுப்பவும் அதைப் பெற்றுக் கொண்டு நான்கு தேவர்களும் அர்ச்சுனனிடம் சென்றார்களாம்.

முதலில் சூரியனானவன் தன் நேத்திரங்களையெல்லாம் திரித்துப் பார்த்தானாம். கைலாயங்கிரியில் உள்ள செடி, கொடி, மரங்கள் எல்லாம் எரிந்து போய்விட்டதாம். உடனே வருணதேவனும் ஏழுசேய் மழையையும் ஒரு சேய் மழையாகப் பொழிவித்தானாம்.

உடனே அக்கினி பகவான் தொண்ணூறடிக் கம்பம் உயரம் ஒரு சுழுந்தாகக் கட்டி அர்ச்சுனன் முகத்தைத் தீய்த்தானாம். அப்போதும் அர்ச்சுனன் தவம் அழியவில்லையாம், வடக்கு திசையில் இருக்கக்கூடிய வாயு பகவான் தன் மூச்சையெல்லாம் பந்தனம் செய்து ஒரே காற்றாக வீசினானாம், அப்போதும் அர்ச்சுனன் தவம் அழியவில்லையாம், அந்தக் கயிலை மலை ஐந்து சிகரத்தில் ஓர் சிகரத்தை வேர் பிடியாகப் பிடுங்கிக் கொண்டுபோய்ப் பால் சமுத்திரத்திற்கு அப்பால் திருப்பாற்கடலில் விழுந்ததாம்.

அப்போது இடியேந்திரனானவன் சிவபெருமானிடம் சென்று அந்த சன்யாசியின் தவத்தை அழித்து வருகின்றேனென்று விடைபெற்றுக்கொண்டு அர்ச்சுனன் சிரசுக்கு நேராக ஓர் பச்சை முகிலானது கட்டி ஏழு நீரிடியும் சேர்த்து ஓர் கோடையிடியானது இடித்து அர்ச்சுனன் உச்சிக்கு நேராக இறங்கினானாம். அப்போது பார்த்தான் ஐயனானஅர்ச்சுனன், நாமென்று மதியாமல் நம்பேரிலே இறங்கி வருகின்றானே என்று வலப்புறமாகச் சாய்ந்து இடப்புற அக்கத்திடம் இடுக்கிக் கொண்டானாம் இடியேந்திரனை.

அப்போது இடியேந்திரனானவன் மெச்சினேன், மெச்சினேன் விடும் விடும் என் கண்கள் பிதுங்குகின்றன விடு விடு என் மைத்துனா என்று கூற அதைக் கேட்ட காண்டீபத் தணையன் சொல்லுகின்றான் "அடா இடியேந்திரனே இப்பூவுலகத்திற்கதிபதியாகிய தருமபுத்திர மகாராசன் தம்பி பார்த்தீபன் என்றும் அர்ச்சுன மகாராசன் என்றும் கொஞ்சமேனும் பயமில்லாமல் என் பேரிலே இறங்கி வந்தாயே நிற்க, கலியுகம் பிறக்கப் போகிறது அப்பவும் இப்படித்தானே பயமில்லாமல்

இறங்குவாய். அப்படிச் செய்ய உன்னை சும்மா விடமாட்டேன், இனிமேல் நீ வானத்தில் இடித்தால் அர்ச்சுனாவென்றால் ஐங்காதவழிப் போகிறேனென்றும் தத்தே தத்தம் மனோதத்தம்" கேட்டானாம் விஜயன்.

அப்படியே இடியேந்திரன் பயந்து நீ கேட்டபடியே அர்ச்சுனா என்றால் ஐங்காதவழிப் போகிறேன். இதோ தத்தம் செய்கிறேன் விட்டுவிடு என்று கேட்டவுடனே இடியேந்திரனை விட்டு வலக்கையை நீட்டித் தத்தம் வாங்கி இடக்கையை நீக்கி அனுப்பினானாம். அப்போது அர்ச்சுனன் செய்த தவமானது உறுதியானபடியால் காய்ந்த வெயிலுக்கும் பெய்த மழைக்கும் சரியானதாம்.

அப்போது பட்டுப்போன மரங்கள் எல்லாம் பூக்கள் பூத்துக் காய்கள் காய்த்து எங்கும் செடி கொடிகள் தழைத்து ஓங்க இடியேந்திரனுக்கு தன் வெப்பமெல்லாம் நீங்கித் தன் நகராகிய வானுலகத்திற்கு ஏகினான்.

இதைக்கேட்ட நாரத பகவான் இன்றைக்கு நமக்குக் கலகம் கிடைக்காதபடியால் இந்த அர்ச்சுனன் தவத்தை அழிக்க தேவர்கள் எவ்விதமாக முயன்றும் முடியவில்லை. ஆனால் நாம் அஸ்தினாபுரம் சென்று துரியோதன மகாராசனுக்குச் சொன்னால் துரியப் பூபனானவன் மூகாசூரனை அனுப்புவான். மூகாசூரன் அழியும் காலம் இதுதானென்று நாரதர் ஓடோடியும் துரியோதன மகாராசனிடம் சொன்னாராம்.

ஆனால் துரியோதன மகாராசனே! உன் பங்கும் பங்காளி பாதிநாடு சத்ராதியாகிய ஐவர் தம்பி அர்ச்சுனன் ஜெகதீசனை நோக்கித் தொண்ணூறடிக் கம்பத்தை ஊன்றி தவம் செய்கிறானாம். அதற்குள்ளாக ஜெகதீசன் வந்து வரம் கொடுக்கும் முன்னமே அந்தத் தொண்ணூறடிக் கம்பத்தை வேருடன் பிடுங்கிச் சாய்த்து விட்டால்தான் அவனை வெற்றிபெற முடியும், இல்லாவிடில் முடியாது என்று சொன்னாராம்.

அதையறிந்த துரியோதன்ன் நமக்கு நண்பனாகிய மூகாசூரனை அழைத்துச் சொன்னானாம். ஆனால் மூகாசூரனே நீ யானை ரூபமான படியால் என் பங்கும் பங்காளியாகிய ஐவர் தம்பி அர்ச்சுனன் கயிலாய மலையில் ஜெகதீசனை நோக்கி தவம் செய்கின்றானாம். அந்தத்

தொண்ணூறடிக் கம்பத்தை வேருடன் பிடுங்கிச் சாய்த்துவிட்டு வந்துவிடும் என்று சொன்ன உடனே மூகாசூரனானவன்.

அந்த யான ரூபம் வந்து யாதுகாரணம் என்றால் புண்ணிய புருஷர்கள் வைத்த பூந்தோட்டத்தை எல்லாம் பிடுங்கி நாசம் செய்த படியால் அப்போது அந்தப் புண்ணிய புருஷர்கள் பார்த்து எங்கள் பூந்தோட்டத்தை நாகம் செய்தபடியால் நீ யானமாகப் போகக் கடவது என்று சாபமிட்டார்களாம்.

அந்த சாபத்தைப் பெற்றுக் கொண்டு அக்கால முதல் நான் யானமாயிருந்தபடியால் நான் சென்று யான ரூபத்தோடு, எத்தனையோ நாள் பயணமாகி அந்தக் கயிலாய மலையை நாடி அர்ச்சுனன் தவம் செய்யும் படியான இடத்தை நாடிச் சென்று அவன் தவத்தை அழித்து வருகிறேன் என்று சொல்லவும்.

அங்குக் கைலாயத்தில் என்ன நிகழ்கிறது என்றால் பார்வதி தேவி பரமேஸ்வரனை நோக்கி ஓம் சாமி உம்மைப்போல் பத்தழகு கொண்ட திருமேனியும் படைத்தவர் பூலோகத்தில் யாராவது இருக்கிறார்களா என்று கேட்கவும் அதைக்கேட்ட பரமேஸ்வரரானவர், ஆனால் கேளும் பெண்ணே கௌரி, என்னைப்போல பத்தழகு கொண்ட திருமேனி படைத்தவர்கள் யார் இருக்கிறார்கள் என்றால் சொல்கிறேன் கேளும். பெண்ணே கௌரி இப்பூ உலகத்துக்கு அதிபனாகிய தருமபுத்திர மகாராசனுடைய தம்பியாகிய அர்ச்சுன மகாராசன் ஒருவன்தான் இருக்கின்றான். மற்றவர்கள் யாரும் இப்பாராகிய பிரபஞ்சத்தில் யாரும் கிடையாது பெண்ணே என்று சொல்லவும். அதைக்கேட்ட கௌரியானவள் அப்பேர்பட்ட பிள்ளையை என் கண்ணால் பார்க்க வேண்டுமே! என்றாள்.

அதைக்கேட்ட பரமேஸ்வரர் அப்படி அவனைப் பார்க்க வேண்டுமானால் அவனே நம்மிடத்தில் ஓர் காரியத்தை முன்னிட்டு வருகிறான். அப்போது நாம் என்ன செய்ய வேண்டுமென்றால் அப்போது நான் ஒரு தலைவேடுவனாகவும், நீ ஒரு தலைவேடுவச்சியாகவும் சிவக் கணங்களெல்லாம் கில்லாடி வேடர்களாகவும் நமது நான்கு வேதங்களும் நான்கு நாய்களாக்கிக் கொண்டு வனவேட்டை ஆடுவோர் போலச்

சென்றால் அப்போது நாம் அவனுடனே வார்த்தையாடி அவன் மர்மத்தை அறியலாம். உருவத்தைக் காணலாம் பெண்ணே!

ஆனால் இவ்விதமாகத்தானே பார்வதியும் பரமசிவனும் வேறு உருமாறி வனவேட்டையாட வருகிற விதங்காண்க.

### வேடர்கள் கொலு ஆதிதாளம்

1. *பரமன் கொண்டதொரு வேடத்தைப் பாருங்கள்*
   *பார்த்திபன் தன்தவத்தைப் பார்ப்போமென்று எண்ணி*
2. *சிரசினில் தோல் குள்ளாய் சீருடன் மாட்டியே*
   *செழித்த கொண்ணத்தழையைச் சீருடன் சொருகினார்*
3. *கரந்தனில் வில்லம்பு கணைகளைப் பூட்டியே*
   *கருப்புக் கச்சைகளை இறுக்கியே கட்டியே*
4. *சிவனார் கொண்டதொரு வேடத்தைப் பாருங்கள்*
   *தேர்விஜயன் தன்தவத்தைப் பார்ப்போமென்றெண்ணி.*

### பர. விருத்தம்

*மானென்னும் உமையாளுடன் வாகுடன் வேடனாகி*
*சேனாதிபதியும் நந்தி சீருடன் முன் நடக்க*
*வானவர்கள் புகழ்ந்து போற்ற, வல்லவன் சிலை பிடித்து*
*ஆன கானகத்தில் வேட்டையாடவே பிரியமானார்.*

### பர. வசனம்

அதாவது வேடர்களையெல்லாம் கூட்டிக் கொண்டு நாய்களை ஏவிக் கானகத்தில் வேட்டையாடுகிற விதம் எப்படி என்றால்.

### வேடர் தரு. ஆதிதாளம்

*வந்த வேடரெல்லாம் காட்டில் வலைகளை வீசியே*
*அந்த வனந்தன்னில் மிருகம் ஓட்டியே அதட்டியே கொக்கரித்து*
*அம்பு சிலைகளைப் பூட்டியே வேடர்*
*ஐந்தாறு மிருகத்தை எய்திடுவார்*

*வீரிய நாய்களையும் சங்கிலியில் கட்டி*
*விடாமல் பிடித்துக் கொண்டார்*
*கொம்பைத் திருகியே முறித்திடுவார்*
*சங்கை ஊதியே கூப்பிடுவார்*
*கானகமெல்லாம் ஓடியே வேடர் காகூவென்று கூப்பிடுவார்.*

**வேட விருத்தம்**

*யானமாமுகாசூரன் எழுந்துமே கதம்பிக் கொண்டு*
*கானக வேடர் முன்னே கருங்குன்று போலத் தோன்ற*
*வானவர் கண்டு ஓடி மகாதேவர்க்கு உரைக்கும்போது*
*ஆனதோர் வில்லம்பாலே அடையுடன் பூட்டி எய்தார்*

**பொது வசனம்**

ஆனால் கேளுங்கள் பெரியோர்களே! முகாசூரனென்னும் பன்றியானது வேடர்கள் சப்தத்தைக் கேட்டுப் புதரைவிட்டுக் கிளம்பி ஓட அதைக் கண்ட கில்லாடி வேடர்கள் தலைவேடனுக்குச் சொல்ல உடனே தலைவேடுவன் தன் பாணத்தால் எய்தானாம்.

**தரு. அர்ச்சுனனிடத்தில் பன்றி அபயமிடுதல்**

*அபயம் அபயமையா... ஓ... அர்ச்சுனரே உமக்கபயம்*
*கானகத்து வேடரென்னை ... கணையினால் எய்துவிட்டார்*
*(தானனம் தனனாம்.. ஓ .. தந்தனன தனனனாம்)*
*துரத்தி என்னைப் பிடிக்க வந்தார்... தேர்விஜயா அபயமையா*
*காளையாரே என்னைக் காப்பாய்... காண்டீபரே அபயமையா*

**பன்றி வசனம்**

அபயம் அபயம் சுவாமி அர்ச்சுன மகாராசனே!

**அர் வசனம்**

பன்றியே நீ யார்மேல் எதிர்த்து வந்தாய் (பன்றி. வச) நானோ கானகத்து வேடரை எதிர்த்து வந்தேன்

**அர். தீபதை**

*வாடியே அபயமென்று வந்ததோர் யானமே நீ*
*நீடியஎன் கம்பத்தண்டை நீ சென்று பள்ளி கொள்வாய்*

**அர். வசனம்**

அதோவென்ன கேளும் யானமாகிய பன்றியே! நீ அபயமென்று வந்தபடியால் இந்தக் கம்பத்தடியில் பள்ளி கொள்வாய் பன்றியே!

**வேடர் விருத்தம்**

*சன்னாசி தவமுனியே தார்குள்ள யானம் ஒன்று*
*என்னிடம் அம்புபட்டு இத்தடம் வந்ததிங்கே*
*உன்னையும் விட்டுப்போமோ ஓம் பிள்ளாய் அடைக்கலத்தை*
*மன்னவன் அர்ச்சுனன்தான் வாய்திறந்தேது சொல்வான்*

**வேடன் வசனம்**

அடா கேளடா சன்யாசி, தொண்ணூறடிக் கம்பத்தின்மேல் நின்று தவம் செய்கிறாயே! ஓர் பன்றி அசகாயம் பட்டு உன் கம்பத்தடியில் படுத்துக் கொண்டிருக்கிறது. நீ எங்கள் பன்றியை விட்டுவிடடா சன்யாசி.

**அர். தீபதை**

*வானவர் ஐயன் மாலை வருந்தியே ஈசன் தன்னை*
*நானுமே பூசை செய்து நல்தவம் புரிந்திருக்க*
*ஆனகானகத்தில் நீங்கள் அறிவில்லாது வந்தீரோதான்*
*ஈனக்குல வேடுவனே இவ்வனம் விட்டுப் போவாய்*

**அர்.வசனம்**

**ஆனால் கேளுங்களடா ஈன குல வேடர்களே. என் பங்கும் பங்காளி பாதிநாடு சத்ராதியாகிய துரியோதனாதிகளை வெற்றி பெறுதல் பொருட்டாய் நான் தொண்ணூறடிக் கம்பத்தின்மேல் நின்று தவஞ்செய்யும்படியான இடத்திலே நீங்கள் ஈனக்குல வேடர்கள் வரத்தகுமோ?**

இந்த வனத்தை விட்டு ஓடிப்போனால் ஆச்சுது, இல்லாவிட்டால் செடிக்கொருதலை முள்ளுக்கொருதலை விழுந்துவிடும் ஓடிப்போங்களடா வேடர்களே.

*வேட—* ஈனவேடர் என்றால் யானும் விடுவதில்லை
கானகம்தேடிக் களைத்தோடி வந்தோம்

*அர்—* வந்தோமென்று சொன்னாய் மனதுக் கேற்றதைப்போல்
இந்த அடைக்கலம் இனிவிடுவேனோ

*வேட—* விடுவதில்லை என்றால் வேடரெல்லாம் கூடி
கடும்பசியாலே இங்குக் களைத்தோடி வந்தோம்

*அர்—* பசியால் வந்தோமென்றால் பன்றி விடுவதில்லை
புசிக்க இரை தேடிப் போங்களே வேடா

*வேட—* வேறத் தேடச்சொல்லி – மெல்ல தின்னப் பார்த்தாய்
கூரு போட்டுத்தாரோம் – குடிசைக்கு வாவா

*அர்—* குடிசைக்கு வாவென்றாய் – கொலைசெய்யும்
வேடரேமடியப் போறாய் இந்த வனம் விட்டுப் போப்போ

*வேட—* வனம்விட்டுப் போவென்றாய் வந்த பன்றிக்காக
உந்தன் வசமாக விடுவேனோ தவசே

*அர்—* தவசு அபயமென்று தான் வந்த யானத்தை
அதமாக விடுவேனா அப்புறம் போடா

*வேட—* அப்புறம் போமென்றாய்— அந்தப் பன்றிக்காக
எப்போ வருமென்று இருந்தாயோ தவசு

*அர்—* இருந்த தவசு தன்னை இகழ்ச்சியாய்ப் பேசுறாய்
அருங்கணை என்னிட அதன்பலம் பாராய்

*வேட—* பலம்தன்னைச் சொல்லவந்த உன்பேரு குலமென்ன
குலங்களை அறியவே கூறாயோ தவசே

*அர்—* அறிய வேண்டுமென்றால் அர்ச்சுனன் என்பெயர்
குருகுல மன்னவர் கொற்றவர் ஐவர்

வேட– அர்ச்சுனனு மானால் அகப்பட்டாய் என்கையிலே
எங்கள் இனத்தவரைக் கொன்றபழி இருக்குதடா
உன்மேல்

அர்– பழியேது நீங்களேது பழி செய்வதுயேது – ஓம்பழி
பழியில்லாத தர்ம சண்டை செய்தோமடா நாங்கள்

வேட– இரவிய காண்டாவனத்தை எரித்தாயே நீயும்
எங்கள் இனத்தாரைக் கொன்றபழி இருக்குதடா
உன்மேல்

அர்– சூரத்தனமாக வந்து எரித்தேனடா நானும்
வீரனானால் சூரனானால் வென்றுபோடா வேடா

வேட– தெரிசித்தமும் வீரியமும் சேவகமும் கூட ஓம் – சேவ
அறிந்தல்லவோ துரியோதனன் அடவிதன்னில்
விட்டான்

அர்– தமையன் சொல் தட்டாத சந்திரகுலம் நாங்கள்
நிமிடத்தில் ஊதிடுவேன் ஓடிப்போடா வேடா

வேட– உனக்குப் பாரியாக வந்த – உத்தமியாள் தன்னை
ஐவர் பாரியாக்கிக் கொண்டது அடுக்குமோடா உனக்கு

அர்– மாதாவின் சொல்படிக்கு நடந்தோமடா நாங்கள் ஓம் நட
எங்கள் இச்சையாய்ச் செய்யவில்லை ஈனக்குல வேடா

வேட– ஐந்து பேர்க்கு ஐந்து பிள்ளைப் பெற்றாளோடா உன்
தாயார் அவள் வார்த்தை தட்டாமல் நடந்தீரோடா
நீங்கள்

அர்– மந்திர பிண்டம் ஓம பிண்டம் மகாதேவனை வேண்டி ஓம்
மகா ஸ்ரீராமர் எப்படிப் பிறந்தாரோ நாங்கள் அப்படிப்
பிறந்தோம்

வேட– ஆனால் உன் சௌரியத்தை அறிந்து நாங்கள்
பார்ப்போம் அறி ஏழாம் தவசு விட்டு இறங்கிவாடா கீழே

அர்– இறங்கி நானும் வந்தேனானால் எதிரோடா நீங்கள் ஓம்
எதி நிமிடத்தில் ஊதிடுவேன் ஓடிப்போடா வேடா

**அர்.தரு (புலம்பல்)**

பரிவான சந்திரகுலம் வேடுவனே என்னை
பழுதென்று சொல்ல வந்தாய் வேடுவனே
நிலையான குருகுலத்தில் வேடுவனே
நிச்சயமாய் வந்துதித்தோம் வேடுவனே
என்னையறிந்தவன் போல் வேடுவனே
இந்த வார்த்தை சொல்ல வந்தாய் வேடுவனே
வாளால் அடிக்கப்போறேன் வேடுவனே
இந்த வனத்தைவிட்டு ஓடிப்போவாய் வேடுவனே

**வேடுவச்சி**

எதுக்கு நீ அர்ச்சுனனே ஏசுவதும் பேசுவதும்
வாதுக்கு நீ யானம் தன்னை வைத்திருக்க நீதியல்ல
உன்மானமும் அபிமானமும் போகும் தம்பி அர்ச்சுனனே
தீதாகவே வேடருடன் ஜெயிப்பவர்கள் ஒருவருமில்லை

**அர். தரு (ஜம்பை)**

நல்லா சொன்னாய் வேடுவச்சி
நானும் அஞ்சப் போறதில்லை
உங்கள் குலம் பெரிதாய் எண்ணி
ஒத்தாசைகள் பேச வந்தாய்
அங்கு வந்த பெரிய வேடன்
உனக்கு என்னாவாக வேண்டுமம்மா

**வேடுவச்சி தரு (ஜம்பை)**

அங்கணவர் என்கணவர் ஆகவேணும் அர்ச்சுனரே

**அர். தரு (ஜம்பை)**

மாங்கல்யம் அற்றுப் போவாய் மாதாவே நீ போய்வீடம்மா
உன்தாலியும் தரித்துப் போகும் என்தாயே நீபோய்வீடம்மா
வேண்டாமம்மா வேடுவச்சி உன் வாழ்மனைக்குப் போய்ச் சேரம்மா

### வேடன் வசனம்

ஆனால் வாரும் பெண்ணே ஈஸ்வரி. அர்ச்சுனன் பொல்லாத காளை சொல்லாமல் கொல்லுவான், நாய்களை விட்டு யானத்தை இழுத்து வரும்படி செய்தால் அர்ச்சுனன் இறங்கி வருவான், அவனோடு நான் சண்டை செய்து பாசாங்குத்தனமாகக் கீழே விழுந்து விடுகிறேன். அவன் மேலே இருக்கும்போது அவனுடைய மச்சரேகையைப் பாரும் பெண்ணே ஈஸ்வரி.

### வேடர்தரு (ஆதிதாளம்)

*நாய்கள் நான்கும் போயிழுத்ததே அந்த யானந்தன்னை*
*வாயினாலே கடித்திழுத்ததே – தந்தானா*
*வாயினாலே கடித்திழுக்கவும் அந்த யானந்தானும்*
*வவ்வாலென்று அபயமிட்டதே தந்தானனாம்.*

### வேடர் வசனம்

ஆனால் வாரும் பிள்ளாய் அர்ச்சுனா, எங்கள் யானத்தை நாய்களை விட்டு இழுத்துக் கொண்டோம். உனக்கு தைரியம் இருந்தால் கம்பத்தை விட்டுக் கீழே இறங்கிவா, இல்லாவிடில் தப்பி ஓடிப்போ பிள்ளாய்.

### அர். வசனம்

ஆனால் கேளுங்கள் பெரியோர்களே! அடைக்கலமாக வந்த பன்றிக்காக இந்த வேடர்கள் இகழ்ந்து பேசி யானத்தை இழுத்துக் கொண்டதும் அர்ச்சுனனானவன் இந்த தவம் செய்தாலும் சரியே, செய்யாமல் போனாலும் சரியே, தர்மபுத்திரனுக்கு அரசு சூட்டினாலும் சரியே, சூட்டாமல் போனாலும் சரியே, திரௌபதை கூந்தல் முடித்தாலும் சரியே முடிக்காமல் போனாலும் சரியே என்ற எண்ணத்தைக் கருதி அவ்வலரிகண்கள் செவ்வலரிபூத்து நீலமுழிக்கண்கள் நெருப்புத்தணலாகி கோபாக்கினி, வடவாக்கினி மீறி கீழே இறங்கினானாம்.

**அர். தீபதை**

*தப்பியே பிழைப்பாய் என்றாய் என்னை தைரியமில்லா வேடா*
*ஒப்பியே அடைக்கலத்தை உன்கையில் நானுமிப்போ*
*அப்படி அல்லவென்று அடிவழக்காடி வந்தால்*
*தப்பில்லாப் பாணத்தாலே உன்தலைதன்னைப் பிளப்பேன்*
*பாராய்.*

**அர். தரு – ஏகதாளம்**

*சிலைவளைத்து நாணிகள் பூட்டி தை அர்ச்சுனனும்*
*சீறி விட்டான் வேடர்மீதிலே – தந்தானனாம்*

**வேடர்**

*வந்தவேடர்தன்னைச் சுற்றியே அந்த பாணம் வந்து*
*முன்னே மண்ணில் விழுந்ததாம் – தந்தானனாம்*

**அர். தரு**

*கண்டு விஜயன் கோபமாகியே பிரம்மாஸ்திரக்*
*கணைகள் எடுத்துப் பூட்டி எய்தானாம் – தந்தானனாம்*

**வேடர்**

*அண்டர் பணியும் பாதம் தன்னிலே உன் பிரம்மாஸ்திரம்*
*அமர்ந்து பணிந்து பூஜை செய்யுதே தந்தானனாம்*

**அர். தரு**

*அந்தப் பாணம் மோசமாகவே தை அர்ச்சுனனும்*
*அர்த்த சந்திர பாணம் விட்டானாம் தந்தானனாம்*

**வேடர்**

*கர்த்தரான ஈசர் முடியிலே – அதுவும் வந்து*
*குடையாக நின்று கொண்டதாம் தந்தானனாம்*

**அர். தரு**

*அந்தப்பாணம் மோசமாகவே தை அர்ச்சுனனும்*
*அக்கினி அஸ்திரம் எடுத்து விட்டானாம் தந்தானனாம்*

**வேடர்**

*வந்த பாணம் தன்னை வாவென்று அழைத்தபோது*
*வேடரெல்லாம் குளிரப்பண்ணினார் தந்தானனாம்*

**அர். தீபதை**

*விட்டதோர் பாணமெல்லாம் வீணாகப் போகக் கண்டு*
*மட்டில்லாக் கோபமாகி மறுகணை தொடுக்கும்போது*
*திட்டமாய்ப் பூண்டிருக்கும் சீருள்ள மயில் பீலியும்*
*பட்டது ரெண்டு துண்டாய்ப் பாரினில் விழுந்ததங்கே*

**பொது. வசனம்**

ஆனால் கேளுங்கள் பெரியோர்களே! அர்ச்சுனன் விடக்கூடிய பாணமெல்லாம் வீணாகப் போக அமராதோணியில் கைவைத்துப் பார்த்தானாம். ஓர் அக்கினி அஸ்திரம் மாத்திரம் இருப்பதைக் கண்டு இனி இந்த அஸ்திரத்தால் இந்த வேடருக்கு ஒரு காயமும் படாமல் போனால் நம் உயிரை இவ்விடமாக மாய்த்துக் கொள்ள வேண்டுமென்று எண்ணி அந்தப் பாணத்தை விடவும், அப்போது பார்த்தார் ஈஸ்வரர் இனி நமக்கு ஒரு காயமும் படாமல் போனால், அர்ச்சுனன் மாண்டு விடுவானே என்று தனக்கு அழகாக வளர்ந்த மயில் பீலியை இரையாகக் கொடுத்தாராம்.

உடனே ஈஸ்வரனுக்கு கோபம் பிறந்து தன் பாணத்தால் அர்ச்சுனன் வில் நாரியை அறுத்து விட்டாராம், அப்போது அர்ச்சுனனுக்கு கோபம் பிறந்து தன் வில்லை மடமடவென்று ஒடித்து ஈஸ்வரன் முடிமேல் தாக்குவது எப்படி என்றால்.

**அர். தீபதை**

*வலைவீசும் வேடா உன்னை என்வாருள்ள வில்லினால்*
*தலைதனைப் பிளப்பேனென்று தனஞ்செயன் கோபமாகிச்*
*சிலைதனை எடுத்து ஓங்கிச் சிவன் முடிமேலே மோத*
*நலபதியான கங்கை நின்றுமே தழுவிட்டாளாம்.*

### அர். வசனம்

அர்ச்சுனன் வில்நாரி அறுந்து போகவும், தன் காண்டீபத்தை எடுத்து முடிமேல் தாக்கவும், அந்த அடியானது ஈஸ்வரன் சடையில் இருந்த கங்கைக்குப் பட்டுத் தழுவிட்டாளாம். உடனே அர்ச்சுனன் வேடரை மல்யுத்தத்துக்கு அழைக்கிற விதம் காண்க.

### அர். தரு (அடதாளம்)

*மல்லுக்கு வாவென்று – சொல்லியே பார்த்தீபன்*
*வலுவாகத் தொடைதட்டி நின்றானே!*

### வேடர்

*நல்லது வாவென்று சொல்லிய வேடர்கள்*
*நடந்துமே எதிரோடி வந்தாரே*

### அர். தரு

*கொல்லுமே புலிபோல கோபித்து அர்ச்சுனன்*
*கொட்டினான் வேடர் முடிமேலே*

### வேடர்

*அடித்ததோர் கைதன்னைப் பிடித்துமே வேடர்கள்*
*அஞ்சாமல் புரட்டினார் பூமியிலே*

### அர். தீபதை

*விந்தையாய் ஆகாயந்தன்னில் விஜயனும் போகும்போது*
*அந்தமா திருக்குளங்கள் அரனாரும் உண்டு செய்தார்.*
*வந்துமே அதில்குதித்து மணலினால் இலிங்கம் செய்து*
*சிந்தையில் தியானமாகி சிவபூஜை செய்::பலானார்.*

### அர். வசனம்

ஆனால் கேளுங்கள் பெரியோர்களே! அர்ச்சுனன் வேடருடன் யுத்தம் செய்து சாமி வேடனைக் கீழே தள்ளி இலக்கு பாய்ந்து நிற்கவும் அப்போது ஈஸ்வரன் ஈஸ்வரியை அழைத்துப் பெண்ணே அர்ச்சுனன் அழகைப் பாரென்று சொல்ல, அப்போது பார்வதியும் சுவாமி ஜெகதீசரே இப்போது நீர் என்றும் அர்ச்சுனன் என்றும் வேறுபாடு தெரியவில்லை

என்று சொல்லவும் ஈஸ்வரனுக்கு கோபம் வரவில்லை அவர் வலதுகால் பெருவிரலுக்கு கோபம் வந்து அர்ச்சுனனை ஆகாயத்தில் எறிந்ததாம்.

அர்ச்சுனன் மேலண்டம் போகவும், பார்வதியம்மன் பார்த்து என் அன்பான பிள்ளை ஆகாயம் போய்விட்டதே என்று கேட்க, அப்போது ஈஸ்வரன் இதோ ஆகாயம் போகவே உந்திவிட்டேன் எனவும் அப்போது பார்வதியம்மன் இப்பேர்பட்ட அழகுள்ள பிள்ளையை மீட்டுத்தர வேண்டுமென்று கேட்கவும். அப்படி இருந்தால் உன் குந்தாள ஓலையை கழற்றிப்போடு அது ஒரு தடாகமாகிவிம் அதில்வந்து விழுந்து மணலை வாரிக்கொண்டு குவித்து லிங்க பூசை செய்வான் பெண்ணே கௌரி.

**அர். தரு. அடதாளம்**

*பூசைசெய்ய அர்ச்சுனனும் ..புஷ்பம் தன்னைத் தானெடுத்தான்*
*அரகரா அரனேவென்று அரன்மீதில் கேனமானான்*
*சிவசிவா சிவனே என்று ... சிவன் மீதில் கேனமானான்*
*என் கண்ணுக்கு நீ கண்ணாடியாம்*
*கடைகடைக்கு லிங்கமையா*
*என் உள்ளங்கையில் வெள்ளிலிங்கம்...*
*என் உடம்பெல்லாம் பஞ்சாச்சரம்*
*ஐயா லிங்கமான லிங்கமையா...*
*இந்த சதுரெல்லாம் கோடிலிங்கம்*
*பங்கமில்லா வேடுவரே ...*
*பரமன் பூசை செய்யும் அருகில் வந்தார்*
*உங்களை அடிப்பேனென்று .. ஓடி ஓடி அடிக்கலுற்றான்.*

**அர். தீபதை**

*அடையாள புஷ்பமொன்று ஆனதோர் முடிமேல் தோன*
*விடையேறு ஈசரேதான் விமலரென் றறிந்துக் கொண்டு*
*படைகூட்டி வந்தவேடர் பரமனும் மாயையாகி*
*அடையுடன் போகும்போது அர்ச்சுனன் புலம்பலுற்றான்.*

**அர். தரு. அடதாளம் –சோகம்**

*அகிலலோக ... நாயகனே ... சிவனே*
*ஓம் அம்பல வாணனே அரோகரனே ... (அகி)*

பைரவம் பூண்டவனே சிவனே பாம்பை அணிந்த பராபரனே
மெய்யான சங்கரனே சிவனே மேலவர் போற்றும் தயாபரனே
என் வில்லினால் முடிமேலே சிவனே;
நான் வீசியடியத்தேனே நான் பாவி
மல்யுத்தம் செய்துன்னை சிவனே;
நான் மாரியடித்தேனே நான் பாவி
உன்னை கொல்லுகிறேன் என்று சிவனே; உன்மேல்
கோபித்துக் கொண்டேனே நானே
தையல் உமையவளே என்தாயே ;
சர்வதயாபரா என் தாண்டவியே
உன் தாலியற்றுப் போவாய் என்ற வார்த்தையை ;
என் தாயாரே எப்படிப் பொறுத்தாயோ
உன் மாங்கல்யம் அற்றுப்போகும் என்ற வார்த்தையை;
என் மாதாவே நீ எப்படிப் பொறுத்தாயோ
அந்த மச்சவதாரன் ... தங்கையாளே;
உன்னை பேசாததும் பேசினேனே சிவனே
உன்னை ஏசாததும் ஏசாததும் ஏசினேனே நான் பாவி
அம்பலவாணனே நடேசா இந்த வம்பனைக்
காரும் தில்லை வாசா

### அர். தீபதை

என்றுதான் அர்ச்சுனன்தான் இவ்வகைச் சொல்லி சொல்லி
அன்றுதான் கையினாலே அடித்த அடி அலரிக்கொண்டு
நின்றுதான் திகைத்துவாடி நெடுமூச்சை தான் சொரிந்து
மன்னவன் புலரம்பும்போது மகாதேவன் உருகலானார்.

### அர். தரு (ஆதிதாளம்)

நாக ... பூஷணமணிந்த .. ஓ ...
லிங்காபாணி; நாதா ... சரணமைய்யா
அத்தி... உரித்தணிந்த ... ஓ...
லிங்காபணி... அரகரா ... போற்றினேனே
காலகண்ட மணிந்த ... ஓ...

*- லிங்காபாணி; கர்த்தனே ... போற்றினேனே*
*நீலகண்டமணிந்த ... ஓ... லிங்காபாணி;*
*நிமலனே போற்றினேனே*
*ஆதி பரம்பொருளே... உன் பாதத்தில்;*
*அடியேனும் போற்றினேனே*
*சோதிப் பரம்பொருளே ... உன் பாதத்தில்;*
*சந்திரனும் போற்றினேன்*

**அர். தேவாரம்**

*ஓம் அரகரா...*
*இந்திரர் அமர்ந்தாய் போற்றி ஈஸ்வரன் கிருபை கூர்ந்து*
*நந்தி– வாகனமிட்டிறங்கி நகத்துடன் பிரியமாகி*
*இந்தநாள் உன்னைதேவா ... நான் ஏதேது பிழைசெய்தேனே*
*சந்தோஷமாய் உன்தன்தாள் கமலம் போற்றினேன்*

**அர். வசனம்**

சரணம் சரணம் சுவாமி! கர்த்தனே. உன் பாதாரவிந்தத்திற்கு உன் பக்தனாகிய அர்ச்சுனன் மல்லிகை, முல்லை, இருவாட்சி, கோங்கு, மந்தாரை, பாரிசாதம், வெட்டிவேர், தும்பை, அருகு கொன்றை மலர்கள், வில்வமலர் கொண்டு வேண்டினேன் உன் பாதத்தின் மேல் சொரிந்து மிக பக்தியோடு நின்று அர்ச்சித்தேன் சுவாமி.

**சுவாமி வசனம்**

ஆனால் அர்ச்சுனா என்னிடம் இவ்விதம் வேடம்பூண்டு வந்த காரணமென்ன.

**அர். வசனம்**

ஆனால் சுவாமி நான் இவ்வேடம் பூண்டு வந்தகாரணம் என்னவென்றாலோ! எங்கள் பங்கும் பங்காளி பாதிநாடு சத்ராதியாகிய துரியோதனாதிகளை ஜெயிக்கும் பொருட்டாய் ஆணாசை, பெண்ணாசை, பொன்னாசை, பொருளாசை, மண்ணாசை என்ற ஐந்தாசைகளை வெறுத்து, பஞ்ச பூதத்தையும் துறந்து யாகாங்கி, சர்வாங்கி, சன்யாசி ரூபத்தோடு வந்து உங்களுடைய திருவடியைக்

கண்டு தரிசித்து உங்களிடத்தே இருக்கும் பாசுபதாஸ்திரக் கணையைப் பெற வேண்டுமென்று வந்தேன் சுவாமி.

அந்தப் பாசுபதாஸ்திரக் கணையை எனக்குத் தர வேண்டும் சுவாமி, அதற்காகத்தான் உங்கள் பாதத்தை நாடி வந்தேன் சுவாமி.

சுவாமி வசனம்

அப்படியானால் அர்ச்சுனா! தருகின்றேன். இந்தப் பாசுபதாஸ்திரக் கணையை அற்பமான படைமீதில் விடலாகாது. மகா அதிகமான படையின் மீதில் விட்டால்தான் இதற்கு ஆகாரம் போதுமானதாக இருக்கும், இல்லாவிட்டால் இதற்கு ஆகாரம் போதாது அர்ச்சுனா.

அர். வசனம்.

அப்படியானால் என் தாயாதி படைகள் பதினோரு அக்ரோணி, எங்கள் படை ஏழு அக்ரோணியும் ஆகப் பதினெட்டு அக்ரோணி சேனையும் அந்த குருஷேத்திர பூமியிலே ஆழியாகிய சமுத்திரத்தைப் பார்த்தால் எவ்விதமாக இருக்கின்றதோ அவ்விதமாக நிறையப் போகிறது, அந்தப்படையின் மேல் விடுகிறேன் சுவாமி.

சுவாமி வசனம்

அவ்விதமாக இருந்தால் இதோபார் இருக்கிறது இந்த இரண்டு அஸ்திரங்களை அற்பத் துரும்பாகச் செய்து உன் அம்ராதோணிக்குள் ஐக்கியம் செய்து தருகின்றேன் அர்ச்சுனா!

தேவி. வசனம்

ஆனால் தம்பி அர்ச்சுனா! அலை கடல் நீர் வற்றினாலும் உனது அம்ராதோணியில் பாணம் வற்றாமல் இருக்கக்கூடாது பிடியும் தம்பி அர்ச்சுனா.

அர். வசனம்

ஆனால் சுவாமி நான் வரும் வழியிலே ஏழாவது வனத்தில் சாந்தராசன் குமாரி ஏலக்கன்னியானவள் என்னை மணம் புரிந்து

கொள்கிறேன் என்று விரும்பினாள். அதற்கு நான் இளமையும், அழகும், வாலிபமும், பருவமும் குறையாமல் இருக்கும்படியாய்த் தங்களிடம் வரம்பெற்று வருகிறேன் என்று சத்தியம் செய்துவிட்டு வந்துள்ளேன். அதற்கோர் வரமும் தவிரவும் ஐந்தாவது கோரமகாரிஷி குமார்த்தியாகிய வேங்கைக் கன்னிக்கு ஓர் வரமும் தர வேண்டும். ஆறாவது மலையடி வேடுவனுக்கு ஓர் வரமும் தர வேண்டும், எட்டாவது கெண்ட பேரண்டனுக்கு ஓர் வரமும் தர வேண்டும்.

**சுவாமி வசனம்**

அப்படியே ஆகட்டும். நீ கேட்டதையெல்லாம் தருகிறேன் அர்ச்சுனா.

**அர். வசனம்**

*ஆனால் நான் போய் வருகிறேன் சுவாமி*

**சுவாமி வசனம்**

*சென்று வாரும் அர்ச்சுனா!*

**சுப மங்கலம்**

**முற்றிற்று.**

TODAY GRAPHICS
(S.R. Complex) 192 Bells Road
Chennai -5 Ph: 28413686